
# உன் நினைவில்



ணிமாலா

# உன் நினைவில்

ஆர்.மணிமாலா


தேவி வெளியீடு
தபால் பெட்டி எண்: 668
23/11, காசிம் சாகிப் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : உன் நினைவில் |
| ஆசிரியர் | : ஆர்.மணிமாலா |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2007 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 208 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : தேவி வெளியீடு<br>தபால் பெட்டி எண்: 668,<br>23/11, காசிம் சாகிப் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர் ✆:94441-01753 |

**விலை: ரூ.70.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ்.ஆப்செட்,<br>சென்னை-14. ✆:28480166 |

# உன் நினைவில்

# உன் நினைவில்

## 1

உறக்கம் பிடிக்காத சேவலொன்று தன் திருவாய் மலர்ந்த சப்தம்... மிகத் தெளிவாய் காதில் விழ... புரண்டு படுத்தாள் அனு.

சாலையை ஒட்டிய வீடென்பதால்... சரக்கு ஏற்றிக் கொண்டு ஆந்திரா நோக்கி விரையும் லாரியின் உறுமல் சப்தம்... அந்த நிசப்த நேரத்தில் கர்ண கடூரமாய் கேட்டன.

கூடத்தில் மாட்டப்பட்டிருந்த பழங்காலத்து கடிகாரம் நான்கு முறை அடித்துவிட்டு ஓய்ந்தது. அனுவின் உறக்கம் முழுக்கவே பறிபோனது.

கொட்டாவி விட்டபடி படுக்கையில் எழுந்தமர்ந்தாள். கண்களை கசக்கிச் சுற்றிலும் பார்த்தாள். பக்கத்தில் அடித்துப் போட்டாற்போல் உறங்கிக் கொண்டிருந்தாள் இந்திரா. அனுவின் தங்கை. கல்லூரியில் கணிதம் முதலா மாண்டு படிப்பவள். உறங்கும்போது தாழிடும் பழக்கம் இல்லாததால்... திறந்திருந்த கதவின் வழியே கூடம் தெளிவாய் தெரிந்தது.

சோகையாய் ஒளிர்ந்த விளக்கொளியில்... அப்பா குறட்டை விட்டு நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருக்க... கடிகாரத்தின் உபயத்தால் அம்மா எழுந்தமர்ந்திருந்தாள்.

அனு அம்மாவை நோக்கிச் சென்றாள்.

''என்னம்மா எந்திரிச்சிட்டே?''

''நீயும் முழிச்சுக்கிட்டியா? பொழுது விடிஞ்சிருச்சே?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே... நீ தூங்கும்மா...''

''அப்ப... நீ ஏன் எந்திரிச்சே?''

''நான் இப்பவிருந்தே ஆரம்பிச்சாதான், டிபன், மதியத் துக்கு சாப்பாடுன்னு தயார் பண்ண முடியும்!''

''இரவு தாமதமாகத்தானே படுத்தே? இவ்வளவு சீக் கிரம் எந்திரிச்சி வேலை செய்யணுமா? நான் செய்யறேனே அனு?'' என்றாள் பார்வதி கரிசனத்துடன்.

அனு அம்மாவின் அருகே அமர்ந்து புன்னகைத்தாள்.

''எனக்கெந்த சிரமமும் இல்லேம்மா! உனக்குதான் முழு ஓய்வு தேவை. நிம்மதியான உறக்கம் தேவை!''

''அதுக்காக... இத்தனை பேர் வீட்டிலிருந்தும் நீ மட்டும் தனியே எல்லா வேலையும் செய்யறியே?''

''யாருக்காக செய்யறேன்? என்னைப் பெத்தவங்களுக் காக, என் கூடப் பிறந்தவங்களுக்காக, என் அண்ணிக்காக! மொத்தத்துல என் குடும்பத்துக்காக செய்யறேன். இதிலே எனக்கென்னம்மா கஷ்டம்? நீ... படு... நான் வாசல் பெருக்கி கோலம் போட்டுட்டு வந்திடறேன்!''

''ஒத்தாசைக்கு இந்திராவை எழுப்பி...''

''வேணாம்மா... பாவம், அரக்கப் பரக்க பஸ்லே கல் லூரிக்குப் போகணும்!''

''நீ எல்லாருக்காகவும் பரிதாபப்படு... ஆனா, உனக் காக...''

''இன்னும் என்ன பேசிக்கிட்டு... போய் தூங்குங்க'' பேச்சுக்குரல் சப்தம் கேட்டு உறக்கம் கெட்ட நாராயணன் கண்களைத் திறக்காமலே அதட்டினார்.

அனு சிரித்தபடி நகர, பார்வதி தலையிலடித்துக் கொண் டாள்.

''உங்கப்பாவுக்கு மட்டும் எப்பவும் விடியாது!''

* * *

காலை ஏழு மணிக்கே வெயில் சுள்ளென உறைத்தது.

மகளைத் தேடி வந்தாள் பார்வதி.

சமையலறையில் வத்தக்குழம்பு வாசம் நாசியை நிறைத்தது.

அப்போதுதான்... மகேந்திரனின் அறைக்கதவு திறந்து வாயில் டூத் பிரஷும், தோளில் துவாலையுமாக வெளிப் பட்டான்.

''அனு... அனு...''

பதில் வராமல் போகவே... மறுபடி அழைத்தான்.

பதிலில்லை.

''அனு எங்கேம்மா?''

''நானும் அவளைதான் தேடிக்கிட்டிருக்கிறேன்.''

''சரிம்மா... நான் குளிக்கணும். விமலா ஆர்லிக்ஸ் கேக்கறா... அனுக்கிட்டே சொல்லிடுங்கம்மா...''

''சரிப்பா...!''

வாசலுக்கு வந்தாள் பார்வதி.

அடக்கமாய், அழகாய் வாசலை நிறைத்திருந்தது கோலம். கீரைக்காரியிடம் பணத்தை கொடுத்து விட்டு கீரைக்கட்டுடன் வந்து கொண்டிருந்தாள் அனு.

''எந்திரிச்சிட்டியாம்மா? ஒரு நிமிஷம் பொறும்மா... இதோ வந்திடறேன்!''

சமையலறையில் நுழைந்தவள், குழம்பை இறக்கி விட்டு பாலை சூடுபடுத்தினாள்.

அம்மாவுக்காக பாலில் புரோட்டீன் பவுடரை கலந்தாள்.

''உங்கண்ணி ஆர்லிக்ஸ் கேட்டாளாம்!''

''இதோ... அவங்களுக்கும் கலக்கியாச்சு!''

''விமலாவுக்கு அலுவலகம் பக்கத்திலேதான் இருக்கு. ஒன்பது மணிக்கு மேலேதான் வீட்டை விட்டு கிளம்பறா. அதுக்குள்ளே கூடமாட எவ்வளவு வேலை செய்யலாம்? ஆனா, ஆர்லிக்ஸ் கூட நீயே... படுக்கை வரை கொடுத்துட்டு வரணும். தனியாளா கஷ்டப்படறியேன்னு கொஞ்சமாவது மனசாட்சி இருக்கா? சம்பாதிக்கிற திமிர்!''

''அம்மா... வேணாம்மா... உன் வாயால அவங்களை திட்டாதேம்மா. அவங்களும் பாவம்தானேம்மா? வங்கியிலே வேலை. கவனம் சிதறாம செய்யணும். நான் ஒவ்வொரு வேலையையும் ஈடுபாட்டோடதான் செய்யறேன்.



அதனால சிரமமா நினைக்கறதில்லே! அண்ணி யாரு? நம்ம குடும்பத்துப் பெண்தானே? ஏம்மா பிரிச்சிப் பார்க்கறே?'' என்றாள் அம்மாவிடம் தம்ளரை நீட்டி.

''இது நம்ம குடும்பம்னு அவ நினைச்சிப் பார்க்கிறாளா? கல்யாணத்துக்கு முன்னே குடும்பச் செலவுக்குன்னு ஒரு தொகை கொடுத்துட்டு இருந்தான் உங்கண்ணன். மகராசி என்னைக்கு வந்தாளோ... அன்னைக்கே கையை இறுக மூடிக்கிட்டான். ரெண்டு பேர் சம்பாத்தியமும் வங்கியிலே சேமிப்பா தூங்குது!''

''சேமிக்கறது நல்ல விஷயம் தானேம்மா? நேரமாச்சு... வெந்நீர் போட்டிருக்கேன்... குளிச்சுக்க'' என்றபடி தம்ளரை எடுத்துக் கொண்டு அண்ணியின் அறை நோக்கிச் சென்றவளை ஆதங்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் பார்வதி.

பெண்ணிற்கு அழகு பொறுமைதான்! ஆனால், அது அனுவிடம் அதிகப்படியாகவே இருந்தது.

நாராயணன் - பார்வதி தம்பதியர்க்கு மூன்று செல்வங்கள். மூத்தவன் மகேந்திரன். படித்து முடித்து விட்டு கூட்டுறவு வங்கியில் பணிபுரிகிறான். அடுத்தவள் அனு. கடந்த வருடம்தான் பட்டப் படிப்பை முடித்தாள். கடைக்குட்டி இந்திரா... கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாள். பார்வதிக்கு வசதியை மீறிய நோய்கள் உடலில் குடி கொண்டிருந்தன. சர்க்கரை, இரத்த அழுத்தம், இருதயக் கோளாறு என சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள். ஆகையால் பள்ளிக்குச் செல்லும் காலக்கட்டத்திலிருந்தே வீட்டு வேலைகள் அவள் மீது சுமத்தப்பட்டன. அவளும் முகம் சுளிக்காது செய்து வந்தாள்.

மகேந்திரன் - விமலாவுக்கு இரண்டு வருடம் முன்பு தான் திருமணம் நடந்தது. இந்த வீட்டுக்கு மருமகள் வந்து

விட்டால் தன் மகளின் வேலை பளு குறைந்து விடும் என்று எதிர்பார்த்தவளுக்கு அதிர்ச்சி தான் காத்திருந்தது. பிறந்த வீட்டில் செல்லமாய், சோம்பேறியாய் வளர்ந்த விமலா புகுந்த வீட்டிலும் அப்படியே தொடர்ந்தாள். மகேந்திரனும் மனைவியிடம் அடிமைப்பட்டுப் போக... அவனின் பெற்றோருக்கும் தைரியம் வராமல் போக... அனுவின் பளு குறையவே இல்லை. அதற்காக ஒரு நாளும் அனு முகம் சுளித்ததில்லை.

முகம் மனதின் ஓவியம். கண்கள் அதன் தூதுவர்கள். இதம் தரும் இனிய புன்னகை அனு முகத்தில் நிரந்தரமாக தங்கியிருந்தது. கண்களில் கனிவு ஒளிரும்.

நாராயணன் மத்திய அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். அப்போது கிடைத்த செட்டில்மெண்ட் பணத்தில் ஒரு லட்சத்தை வங்கியில் போட்டுவிட்டு, மூன்று லட்சத்தை ஒரு நபரிடம் வட்டிக்குக் கொடுத்திருந்தார். அதிலிருந்து மாதா மாதம் கணிசமான தொகை வட்டியாய் கிடைத்தது. அந்தப் பணத்தில் அனுவிற்கு கொஞ்சம் கொஞ்சமாய் நகைகள் வாங்கி சேர்த்திருந்தார். பென்ஷன் பணத்தில் வீட்டு வாடகை, சாப்பாடு, இதர செலவு என்று குடும்பம் நடத்திக் கொண்டிருந்தார்.

* * *

மகேந்திரனும், விமலாவும் அலுவலகம் சென்றுவிட, இந்திராவும் கல்லூரிக்குச் சென்று விட்டிருந்தாள்.

நாராயணனும், பார்வதியும் காலை சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருக்க... அனு பரிமாறிக் கொண்டிருந்தாள்.

''கொஞ்சம் இரும்மா... மழை வரும்போல் இருட்டிக்கிட்டு வருது. துணிகளை காயப் போட்டிருக்கிறேன். எடுத்துட்டு வந்திடறேன்!'' மாடியை நோக்கி சிட்டாகப் பறந்தாள் அனு.



பெருமூச்சு விட்டாள் பார்வதி.

''என்னங்க?''

''ம்'' என்றார் நிமிர்ந்து.

''நம்ம அனுவைப் பத்தி பேசணும்!''

''என்ன பேசணும்?''

''அவளுக்கு இருபத்திரண்டு வயசு முடிஞ்சிடுச்சு.''

''நீ சொல்லிதான் எனக்குத் தெரியுமா?''

''கிண்டல் பண்ணாதீங்க. எவ்வளவு காலத்துக்கு நாமளே அவளை வச்சிட்டிருக்க முடியும்? அவளுக்கு சீக்கிரம் ஒரு நல்ல வரனாப் பார்த்து...''

''இதையும் நீ சொல்லிதான் எனக்குப் புரியணுமா? அவளைப் பெத்த தகப்பன் நான். என் கடமை என்னன்னு எனக்கும் தெரியும். ஏற்கனவே தரகர் கிட்டே அனுவோட ஜாதகம் கொடுத்திருக்கேன். சாப்பிட்டு முடிச்சிட்டு அவரை தான் பார்க்கப் போகலாம்னு நினைச்சுகிட்டிருந்தேன். அப்படியே பொன்னுசாமிக்கிட்டே வட்டிப் பணத்தை வசூல் பண்ணிட்டு வந்திடறேன்.''

அகமகிழ்ந்து போனாள் பார்வதி.

துணிகளோடு படிகளில் இறங்கிக் கொண்டிருந்த அனுவின் காதில் இவர்கள் பேசியது விழுந்தது.

இதழோரம் நாணப் புன்னகையொன்று பிறந்தது.

நிலைக்கண்ணாடியின் முன் நின்று தன்னைப் பார்த்தாள்.

செப்பு சிலைபோல், சருமம் பால்கோவாப் போல் மின்ன, வசீகரமான முகமும், எடுப்பான அங்கங்களுமாக கொள்ளை அழகு கொட்டிக் கிடந்தது.

'எனக்குக் கல்யாணமா? எனக்காகவே ஒருவர் பிறந்து, வளர்ந்து காத்துக் கொண்டிருக்கிறாரா? யாரவர்? எப்படி யிருப்பார்? என்னிடம் அன்பாக... கண்மணியைக் காக்கும் இமைபோல் காப்பாரா? நான் கல்யாணமாகிப் போய் விட்டால்... பாவம் வீட்டிலுள்ளவர்கள் வேலை செய்ய திண்டாடி விடுவார்களே! இந்திரா படிப்பு முடியும் வரைக்குமாவது திருமணத்தை தள்ளிப் போட்டால் என்ன?' பேதையவள் பலவிதமாய் எண்ணிக் குழம்பினாள்.

* * *

நட்சத்திரங்கள் மினுக்கிக் கொண்டிருந்தன.

முகத்திலும், முதுகிலும் ஒளிவீசிக் கொண்டு எதிரும் புதிருமாக கடந்துச் சென்ற வாகனங்களை, மொட்டை மாடி கைப்பிடி சுவர் மீது அமர்ந்தபடி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார் நாராயணன்.

மெல்லிய கொலுசொலி சப்தம் கேட்டு கவனம் சிதைந்து திரும்பியவரின் புருவம் மேலேறியது.

மகேந்திரனும், அவன் பின்னே தயங்கிய நடையுடன் விமலாவும்... வந்து கொண்டிருந்தனர்.

தன்னைப் போல் வேடிக்கைப் பார்க்க வந்திருக்கிறார் கள் போலும் என்றெண்ணியவர், அவர்கள் தனிமைக்கு இடையூறாக இருக்க வேண்டாம் என்ற எண்ணத்தில் கீழே செல்ல முற்பட்டார்.

''அப்பா...'' என்று தடுத்தான் மகேந்திரன்.

''என்னப்பா?''



''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்!''

வியப்புடன் பார்த்தவர்.

''பேசேன்... என்ன விஷயம்?''

''நமக்குன்னு சொந்தமா ஒரு வீடுகூட இல்லை...''

''ஆமாம்... அந்த வருத்தம் எனக்குமிருக்கு. என் ஒருத்தனோட சம்பாத்தியத்திலே குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி, குடும்பம் நடத்தறதே பெரும்பாடு... அத னாலே சொந்த வீடுங்கறது வெறும் கனவாகவே ஆகிப் போச்சு!''

''நீங்க சொல்றதும் சரிதான்ப்பா! அதனாலதான் நானும் விமலாவும் நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திருக் கிறோம்.''

''முடிவா? என்ன முடிவு?''

''எல்லாம் நல்ல விஷயம்தான்ப்பா! இப்ப நகரத்துல லாபகரமான தொழில் எதுன்னா... ஷேர் ஆட்டோ வாங்கி விடறதுதான்!''

''அப்படியா?''

''அதனால நானும், விமலாவும் லோன் போட்டு ரெண்டு ஷேர் ஆட்டோ வாங்கலாம்னு நினைச்சிருக் கோம்!''

''நல்ல விஷயம்தான்... செய்யுங்க!''

''நாங்க அலுவலகத்துல லோன் போட்டு வர்ற பணம் ரெண்டு லட்சம்தன் கிடைக்கும். இன்னும் ஒரு லட்சம் தேவைப்படுது!''

''...........?!''

''வங்கியிலே நீங்க ஒரு லட்சம் போட்டிருக்கீங்க இல்லையா? அதை எடுத்துக் கொடுத்தீங்கன்னா... ஒரு வருஷத்துல திருப்பிக் கொடுத்துடுவோம்!''

எதிர்பார்க்காத நாராயணன் அதிர்ந்து போனார்.

''அ... அது வந்து!''

''மாதா மாதம் வங்கியிலே தர்ற வட்டிய வேணும்னா கொடுத்திடறோம்ப்பா!''

''இல்லே மகேந்திரா... மறுக்கறேன்னு தப்பா நினைச்சுக்காதே! அந்தப் பணம் பத்திரமா வங்கியிலேயே இருக்கட்டும். அனுவுக்கு ஒரு வரன் குதிர்ற மாதிரி இருக்கு. பணம் தேவைப்படும். நமக்குள்ளே கொடுக்கல் வாங்கல் எல்லாம் வேண்டாமே... அது சரி வராது!'' என்றார் தெளிவாக... கறாராக.

மகேந்திரன் திகைக்க... விமலாவோ ஆத்திரத்துடன் மாமனாரின் முன் வந்து நின்றாள்.

## 2

''இப்ப என்ன சொன்னீங்க?'' ஆத்திரமும் ஆவேசமுமாய் நாராயணன் முன் வந்து நின்றாள் விமலா.

''எதுக்கும்மா கோபப்படறே? நான் ஒண்ணும் தப்பா சொல்லிடலியே?''

''சொல்றதையும் சொல்லிட்டு, தப்பா சொல்லலியேன்னு சொன்னா என்ன அர்த்தம்? நமக்குள்ளே கொடுக்கல்



வாங்கல் எல்லாம் வேண்டாம்... சரி வராதுன்னா... என்ன மாமா அர்த்தம்? எங்க மேலே நம்பிக்கை இல்லேன்னு தானே?''

''அதில்லேம்மா... நான்தான் சொன்னேனே... அனுவுக்கு ஒரு வரன் முடியற மாதிரி இருக்கு... இப்ப பணத்தை உங்கக்கிட்டே கொடுத்துட்டு, அவசரத்துக்கு கேக்கறப்ப உங்களால புரட்ட முடியாமப் போகலாம். பிறகு தேவையில்லாம மன வருத்தம் வரும்!''

''சரிப்பா... உங்க பேச்சுக்கே வர்றேன். வங்கியிலே ஒரு லட்சமும், பொன்னுசாமிக்கிட்டே மூணு லட்சமும் ஆக மொத்தம் நாலு லட்சம் வச்சிருக்கீங்க. அவ்வளவையும் அனுவுக்கே செலவழிச்சிடப் போறதில்லையே! அனுவுக்கு ரெண்டு லட்சம், இந்திராவுக்கு ரெண்டு லட்சம்னு தானே ஒதுக்கி வச்சிருக்கீங்க? பொன்னுசாமிக்கிட்டே இருக்கிற பணத்தை வாங்கி அனு கல்யாணத்தை முடியுங்க. இந்திராவுக்கு இன்னும் மூணு நாலு வருஷமாகும். அப்ப திருப்பித் தந்திடறோம்!'' என்றான் மகேந்திரன்.

''இல்லே மகேந்திரா... அது சரிப்பட்டு வராது!''

''அதான் ஏன்?''

''பொன்னுசாமிக்கிட்டேயிருந்து மாசா மாசம் ஒரு நல்ல வட்டி வந்திட்டிருக்கு. அதை சேர்த்து வச்சுதான் இந்திராவுக்கும் நகை வாங்கணும்.''

''அந்த வட்டிய நாங்க தர்றோம்ப்பா!''

''பெத்த பிள்ளைக்கிட்டே வட்டி வாங்கினா... அவனவன் என் முகத்திலே காரித்துப்புவான். அந்தப் பணம் பொன்னுசாமிக்கிட்டேயே இருக்கட்டும்.''

''அப்ப... தரமாட்டீங்க...?''

''இந்த பேச்சை இத்தோட விட்டுடேன் மகேந்திரா!''

''ஏம்ப்பா... பெத்த பிள்ளைக்குன்னாக் கூட ஆத்திர அவசரத்துக்கு உதவ மாட்டீங்க. ஆனா, யாரோ பொன்னு சாமி! அவனை நம்பி சுளையா மூணு லட்சம் கொடுத் திருக்கீங்க. அவன் மேலே உள்ள நம்பிக்கை... என் மேலே இல்லை... அப்படித்தானே?''

''நீயா எதையாவது கற்பனை பண்ணிக்காதே!''

''கற்பனை என்ன பண்ணிக்கறது? அதான் முகத்தில அடிக்கிற மாதிரி சொல்லிட்டீங்களே! நாங்க பணத்தை வாங்கிக்கிட்டு திருப்பித்தர மாட்டோம்னு நினைக்கிறீங்க. இதே பொன்னுசாமி... நாளைக்கு உங்களுக்கு அந்தப் பணத்தை திருப்பித் தராம போய்ட்டா? அப்ப என்ன பண்ணுவீங்க மாமா?'' என்றாள் முகம் சிவக்க... விமலா.

''பொன்னுசாமி அப்படிப்பட்ட ஆள் இல்லை!'' ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டு விறுவிறுவென கீழே இறங்கிப் போய் விட்டார் நாராயணன்.

''பார்த்தீங்களா என்ன சொல்லிட்டுப் போறார்னு?''

''நான் எதிர்பார்க்கலே விமலா. பணம் கொடுத்து உதவுவார்னு நினைச்சேன்!''

''பெத்த பிள்ளை மேலே அவ்வளவுதான் அக்கறை! நமக்கும் ஒரு சந்தர்ப்பம் வரும். அப்ப பேசிக்கறேன் உங்கப்பாவை... வாங்க கீழே!''

தொங்கிய முகத்துடன் மனைவியைப் பின் தொடர்ந் தான் மகேந்திரன்.

* * *

''நான் சொல்றேனேன்னு தப்பா நினைக்காதீங்க!'' வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி மடித்துக் கொடுத்த பார்வதி பீடிகையுடன் ஆரம்பித்தாள்.



''என்னைக்கு நீ உருப்படியான பேச்சை பேசியிருக்கே... இப்ப பேசறதுக்கு? சொல்லு... சொல்லு!'' நாராயணனின் பேச்சில் எகத்தாளம் மிளிர்ந்தது.

இது வழக்கமாகிப் போன நையாண்டித்தனம் என்ப தால் அதை பெரிது படுத்திக் கொள்ளவில்லை பார்வதி.

''நம்ம மகேந்திரன் உங்ககிட்டே ஒரு லட்சம் கேட்டா னாமே!''

''ஆமாம்... அதுக்கென்ன?''

''வட்டியும் தர்றேன்னு சொன்னானாம்மே?''

''ம்...''

''நம்ம பிள்ளைதானே? கொடுத்திருக்கலாமே... அவன் நல்லாயிருந்தா... நமக்கும் சந்தோஷம்தானே?''

''எல்லாம் கொடுத்த வரைக்கும் போதும். நமக்கு கல்யாணமாகற வயசுல ரெண்டு பொட்டைப் புள்ளைங்க இருக்கு... அதை ஞாபகத்திலே வச்சுக்க...!''

''பொன்னுசாமிக்கிட்டே இருக்கிற பணத்தை வாங்கி அனுனோட கல்யா...''

''போதும்... வாயை மூடிக்கிறியா?'' என்றார் எரிச்ச லுடன்.

''குண்டு சட்டியிலேயே குதிரை ஓட்டிக்கிட்டிருக்கிற பொம்பளை நீ! வெளி உலகத்தைப் பத்தி என்ன தெரியும் உனக்கு? இந்தக் குடும்பம் இன்னைக்கு வரை என் பென்ஷன் பணத்திலேதான் ஓடிக்கிட்டிருக்கு. உன் மகனும், மருமகளும் கை நிறைய சம்பாதிக்கிறவங்க தானே? சரி... மருமகளை விடு... அவள் சம்பாத்தியத்தை எதிர்பார்க்கறது நாகரீகமல்ல. ஆனால், உன் பிள்ளை தன்

சம்பளத்துல பத்து பைசாவாவது இந்தக் குடும்பத்துக்காக செலவு பண்ணியிருப்பானா? கேட்டால்... சேமிக்கிறாராம். சொந்தமாய் வீடு வாங்கறது லட்சியமாம். கல்யாணத்துக்கு நிக்கற அனுவுக்காக சிரத்தை எடுத்து மாப்பிள்ளை பார்ப்போம்ங்கற எண்ணமாவது இருக்கா? சுயநலம். பக்கா சுயநலம். தன்னைப் பத்தி நினைக்கறதுக்கே இருபத்தி நாலு மணி நேரம் போதலே அவனுக்கு! பிறகெப்படி பெத்தவங்களையோ... கூடப் பொறந்தவங்களையோ நினைச்சுப் பார்ப்பான்? இன்னைக்கு நிறையப் பேர் உன் பிள்ளை மாதிரிதாண்டி இருக்கானுங்க. கடைசி காலத்துல பிள்ளைங்களை நம்பி வாழற பெத்தவங்களோட கண்ணீருக்குப் பின்னே ஒளிஞ்சிட்டிருக்கிற வேதனைகளும், அவமானங்களும் எத்தனை எத்தனை தெரியுமா? அப்படியொரு துர்பாக்கியம் நமக்கு வந்திடக் கூடாது பார்வதி. நல்லவேளை... கடைசி காலம் வரை நமக்கு பென்ஷன் கை கொடுக்கும். இருக்கிற பணத்தை வச்சு யார்கிட்டேயும் கையேந்தாம... நம்ம சக்திக்கு உட்பட்ட இடமாப் பார்த்து ரெண்டு பொண்ணுகளையும் கரையேத்திடலாம். எந்தச் சூழ்நிலையிலேயும் மகேந்திரனை நம்பி பணம் தரமாட்டேன்!'' என்றார் தீர்மானமாக.

பார்வதி வாயடைத்துப் போனாள்.

இனிப் பேசிப் பிரயோஜனமில்லை.

நாராயணன் அப்படித்தான்! பிறர் ஆலோசனையை காது கொடுத்துக் கேட்கும் நபர் அல்ல. தான் நினைப்பது தான் சரி என்பதில் மாறாத கருத்துடையவர்.

ரிடையராகி கிடைத்த செட்டில்மெண்ட் பணத்தை அப்படியே வங்கியில் போட்டு விடுவதுதான் உத்தமம் என்று வீட்டில் உள்ள அத்தனை பேரும் வலியுறுத்த...



அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு பொன்னுசாமிக்கு கொடுத்தார். பழக்கமான பரிச்சயமான நபர் என்பதும் ஒரு காரணம்.

குடும்பத்தை சுமப்பதற்கு தோள் கொடுக்க முன் வராத தன் பிள்ளை மீது அவருக்கு சுத்தமாய் நம்பிக்கையில்லை.

* * *

''சரி... சும்மா அதையே பேசிட்டிருக்கதே... நேரமாச்சு... சாப்பிட்டு கிளம்பு!'' என்றான் அலுப்புடன் மகேந்திரன்.

''ஆமாம்... இப்ப எனக்கு சாப்பிடாததுதான் பெரிய குறை!''

''இப்ப என்ன ஆகிப் போச்சு விமலா? அப்பாவைப் பத்தி தான் ஏற்கனவே தெரியுமில்லையா? தெரிஞ்சும் போய் கேட்டது நம்ம தப்பு! பணத்துக்கு வேற ஏற்பாடு பண்ணிக்கலாம் விடு!''

''ஆனா, பெத்த தகப்பன் கை கொடுக்கலியே... அதுதானே மனசு எரியுது?''

''நாம கை கொடுப்பார்னு எதிர்பார்த்ததே தப்பு தானே? வங்கியிலே வேலை கிடைச்ச மாசமே எனக்கு கல்யாணம் நடந்திடுச்சு. சம்பளம் வாங்கி ஒத்தை ரூபாக்கூட அப்பா கையிலே கொடுத்ததில்லே. அவரும் கேட்டதில்லே.''

''சொந்த வீடு வாங்கத்தானே சேமிக்கிறோம்? இவங்களும் தானே அனுபவிக்கப் போறாங்க?''

''பேசினா... பேச்சு வளர்ந்துக்கிட்டேதான் போகும்! இத்தோட போதும் விட்டுடு விமலா!'' என்றான் கெஞ்சலாய்.

''எப்படி விட முடியும்? மனசு ஆறலை எனக்கு. உங் கப்பாவுக்கு பொண்ணுங்க மேலே இருக்கற பாசம் உங்க மேலே கிடையாது.''

''...........?!'' தலையில் கைவைத்து அமர்ந்து விட்டான்.

''அனுவுக்கு அப்படியென்ன வயசாயிடுச்சு? இன்னும் ரெண்டு வருஷம் கழிச்சி கூட கல்யாணம் பண்ண லாமே?''

''அதையெல்லாம் குற்றம் சொல்லாதே விமலா! நீ அனுவை விட ரெண்டு வயசுதான் மூத்தவள். அவள் வயசுலதான் உனக்கும் கல்யாணமாச்சு. அப்பா எனக்கு பணம் தரலேங்கறதுக்காக, அவருடைய நியாயமான கடமை உணர்வை எல்லாம் குறை சொல்லக்கூடாது!''

''அட... ரொம்பத்தான் பாசம் கொட்டுது?'' என்றாள் எரிச்சலுடன்.

''உண்மையச் சொல்லக்கூட எனக்கு உரிமை யில்லையா?''

''ஏதேது... விட்டா உங்க தங்கச்சிக்கு முழு செலவை யும் ஏத்துக்கிட்டு கல்யாணம் பண்ணுவீங்க போல...''

''ஏன் கூடாதா விமலா? உன் தங்கச்சிக்கு கல்யாணம் ஆனப்ப... அவசரமா பணம் தேவைப்படுதுன்னு என் சேமிப்பிலிருந்து ஒண்ணரை லட்சம் வாங்கிக் கொடுத் தியே... அதை நான் திருப்பிக் கேட்டேனா?''

''ஒகோ... சொல்லிக் காட்டறீங்களா? நான் உங்கப் பாவைப் பத்தி பேசினா... நீங்க... எதைப் பத்திப் பேச றீங்க? நல்லாயில்லே... இதெல்லாம் கொஞ்சம் கூட நல்லாயில்லே...!''

''அம்மா தாயே... என்னைக் கொஞ்சம் நிம்மதியா விடு. இனி ஆக வேண்டியதைப் பத்தி யோசிக்கணும். நான்



இன்னைக்கு வங்கிக்குப் போகலே. பண விஷயமா ஒரு நண்பனை பார்த்துட்டு வர்றேன்.''

வெறுப்புடன் கிளம்பிப் போனவனை வெறித்துப் பார்த்தாள் விமலா.

'விடக்கூடாது... என் பேச்சுக்கு எதிர் மறையாய் பேச ஆரம்பித்திருக்கிறார்... இப்படியே விட்டால் ஆபத் தாச்சே?'

''அண்ணி...'' என்றழைத்தபடி உள்ளே வந்தாள் அனு.

''என்ன?'' சிடுசிடுப்புடன் கேட்டாள்.

''அண்ணன் சாப்பிடாமப் போகிறாரே?''

''அதுக்கென்ன இப்ப?''

பட்டென கேட்டதும் ஒரு மாதிரியாகி விட்டது அனுவுக்கு.

''நீ... நீங்க சாப்பிட வாங்கண்ணி... சூடாயிருக்கு!''

''இல்லே... வேணாம்... பசிக்கலே...''

''நீங்க கோபமாயிருக்கீங்கன்னு புரியுது... அதுக்காக வயத்தைக் காயப்போடாதீங்கண்ணி...''

''வேணாம்னா விடேன்... ஏன் தொல்லைப் பண்றே?'' பற்றிய அனுவின் கையை பட்டென உதறி விட்டு தன் தோள் பையை மாட்டிக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்.

அண்ணியின் செயலில் வெளிப்பட்ட வெறுப்பு அனு வின் உதடுகளை நடுங்க வைத்து... கண்ணீரை துளிர்க்க வைத்தது.

* * *

உயர்தர ஒட்டல்!

வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காகவே பரந்து விரிந்த இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கு தீப் பெட்டி களை அடுக்கி வைத்தாற்பால் பல வண்ணங்களில், பல இனங்களில் கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

மெல்லிய சப்தத்தில் ஆங்கில இசை வழிந்து கொண் டிருக்க... விலையுயர்ந்த... கலை நயமிக்க விளக்குகள் சன்னமான வெளிச்சத்தைத் துப்பிக் கொண்டிருந்தது.

மிதுன் இசையை ரசித்தபடி... நாசூக்காக முள் கரண்டி யால் மசாலா கோழியை பிய்த்து சாப்பிட்டுக் கொண்டிருந் தான்.

மிதுன்... இளம் தொழிலதிபர், பணக்காரன், அழகன், திருமணமாகாதவன்.

அவன் எதிரே... அவனுடன் வியாபாரத் தொடர்புடைய பரந்தாமன் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

''நாம் இங்கு வந்து ஒரு மணி நேரமாகி விட்டது மிஸ்டர் பரந்தாமன். முக்கியமான விஷயமொன்றை பேச வேண்டும் என்று அழைத்ததாய் ஞாபகம்!'' கவர்ச்சியாய் சிரித்தபடி நினைவு படுத்தினான்.

''விஷயத்திற்கு வருகிறேன். எப்போது கல்யாண சாப்பாடு போடப் போகிறீர்கள் மிதுன்?''

''அப்பா தீவிரமாக பெண் தேடிக் கொண்டிருக்கிறார்!''

''அப்படியானால் பெண் இன்னும் முடிவாகவில்லை... அப்படித்தானே?''

''ஆமாம்!''

''இதைக் கொஞ்சம் பாருங்கள்!'' ஒரு கவரை அவ னிடம் நீட்டினார்.



''என்னது இது?'' வியப்புடன் வாங்கினான்.

''புகைப்படம்! என் அண்ணன் மகள் நர்த்தனாவின் புகைப்படம். அவளுக்கும் மாப்பிள்ளை தேடிக் கொண் டிருக்கிறோம். உங்களுக்கு சமமான அந்தஸ்து, படிப்பு, அழகுள்ளவள். ரெண்டு புடவை கம்பெனிகளுக்கு மாடலிங் பண்ணியிருக்கிறாள். தொலைக்காட்சியில் அந்த விளம்பரம் கூட அடிக்கடி வரும். உங்களுக்குப் பிடித்திருந்தால்... மேற்கொண்டு பேசலாம்!''

பிரித்துப் பார்த்தான்.

அழகிய இளம் பெண்! செயற்கையான அலங்காரம் மிகுந்திருந்தது. பார்வையில் அலட்சியம், உடையில் ஆபாசம்.


அவன் மனசுக்குள் ஒரு பெண் என்றால் இப்படியிப்படி இருக்க வேண்டும் என்று வரையறுத்திருந்தவைகளில் ஒன்றில் கூட நர்த்தனா பொருந்தவில்லை.

சங்கடத்துடன் நிமிர்ந்த மிதுனின் கண்களில்...

அவள் விழுந்தாள்!

நேர் எதிர் மேசையில்... தோழிப் பெண்ணுடன் அவள்!

மிதுனை ஈர்த்தாள்... அப்பெண்!



## 3



'யாரிவள்?' ஆச்சர்யத்துடன் மிதுன் அந்த இளம் பெணணை பார்த்தான்.

பச்சக்கென்று மனதில் ஒட்டிக் கொள்ளும் சிநேக பாவ முகம். உடைத்த கோதுமை நிறத்திற்கு சந்தன நிறத்தில் சாக்லெட் நிற டிசைன் செய்யப்பட்டிருந்த சல்வார் வெகு பாந்தமாய் இருந்தது. பளிச்சென்ற, மேக்கப் இல்லாத முகம், சிறு ஸ்டிக்கர் பொட்டு, உறுத்தாத நிறத்தில் லிப்ஸ்டிக், அடர்த்தியான பட்டுக் கூந்தலை உடைக் கேற்ற நிறத்திலான பேண்டில் அடக்கியிருந்தாள். நேர்த்தியான, பளீர் பல்வரிசை.

'இவள்தான்... இவள்தான் நீ தேடிக் கொண்டிருப்பவள், உனக்காகவே பிறந்திருப்பவள்' உள் மனம் குதூகலமாக ஓலமிட்டது.

'இவ்வளவு நேரமும் எப்படி கவனிக்காமல் போனேன்?' அவன் நினைத்துக் கொண்டிருக்கும்போதே அப்பெண் தன் தோழியுடன் எழுந்து வெளியே சென்றாள்.

'போகிறாளே...!' பரபரத்தான் மிதுன்.

''மிதுன்... மிதுன்... சார்!'' பரந்தாமன் அழைக்க சுய உணர்வுக்கு திரும்பினான் மிதுன்.

''அ... என்ன... சொல்லுங்க சார்?''

''திடீர்னு ஏதோ யோசனையா... உங்கள் கவனம் சிதறிப் போய்...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே... விஷயத்துக்கு வருவோம். என்ன பேசிக்கிட்டிருந்தோம்?''

''என் அண்ணன் மகள் நர்த்தனாவைப் பற்றி!''

''ஓ... யெஸ்... யெஸ்...!''

''ரொம்ப நல்ல பெண் சார்! வாய்ப்புகள் இருந்தும் காதல், கீதல் என்று எதிலும் மாட்டிக் கொள்ளவில்லை.



வீடு தேடி ஏகப்பட்ட வரன்கள் வருகின்றன. ஆனால், நர்த்தனாவுக்கு உங்களைதான் பிடித்திருக்கிறதாம்?''

''என்னையா?'' என்றான் வியப்புடன்.

''ஆமாம்! எங்கள் வீட்டு விசேஷத்தில் ஒரு முறை கலந்து கொள்ள வந்திருந்தபோது, நர்த்தனா உங்களைப் பார்த்திருக்கிறாள்!''

''ஓ...!''

''அவளை உங்களுக்கு அறிமுகம் செய்யுமுன் நீங்கள் புறப்பட்டு விட்டீர்கள்.''

''..........?!''

''பிடித்திருக்கிறதா சார்?''

சற்று நேர மவுனத்திற்குப் பின், ''மிஸ்டர் பரந்தாமன் இந்த திருமணப் பேச்சு இப்போது வேண்டாமே! கொஞ்ச நாள் போகட்டும். இப்போதைக்கு என் எண்ணமெல்லாம் புதிதாய் நான் ஆரம்பித்திருக்கிற பிராஜெக்ட் பற்றிதான். அதில் நான் நினைத்த இலக்கை அடைந்த பிறகுதான் திருமணப் பேச்செல்லாம்! தவறாக நினைக்காதீர்கள்'' என்றான் மிதுன்.

''அதுவும் சரிதான். இந்த போட்டோ உங்களிடமே இருக்கட்டும்.''

''பரவாயில்லை பரந்தாமன். தேவைப்பட்டால் கேட்கிறேன். புறப்படலாமா?''

''ச... சரி'' என்ற பரந்தாமனுக்கு நம்பிக்கை குறைந்து போயிற்று.

* * *

விமலாவுக்கு வயிறு கபகபவென்று பசியில் எரியத் தொடங்கியது.

காலையில் கணவனிடம் ஏற்பட்ட கோபத்தில் சாப் பிடாமல் வந்து விட்டாள். பட்டினி கிடந்து பழக்கமில்லை. ஒருவேளை கூடச் சாப்பிடாமல் அவளால் இருக்க முடியாது. இன்று எப்படியாவது முழுக்கவே சாப்பிடாமல் இருந்து கணவனின் கவனத்தை ஈர்த்து, அவனை தன் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று நினைத்தாள்.

ஆனால், முடியாது போலிருக்கிறதே!

'கந்தனை ஒட்டலுக்கு அனுப்பி வாங்கி வரச் சொல்லி சாப்பிடலாமா? அவருக்குத் தெரியவாப் போகிறது? இரவு சாப்பிடாமல் படுத்து விடலாம். அவரும் வழிக்கு வருவார்!' யோசித்ததை செயல்படுத்தினாள்.

பியூன் கந்தன் அவளிடம் பணம் வாங்கிக் கொண்டு சென்ற வேகத்தில் திரும்ப வந்தான்.

''மேடம்... ஒட்டல் சாப்பாட்டுக்கு அவசியமேயில்லை. உங்க வீட்லேர்ந்து சாப்பாடு வந்தாச்சு. இந்தாங்க பணம்!'' அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே... பிளாஸ்டிக் கூடையுடன் வந்து நின்றாள் அனு.

வெயிலில் நடந்து வந்திருந்ததால்... வியர்த்து, களைத்துப் போயிருந்தாள்.

''அண்ணி... சாப்பாடு கொண்டு வந்திருக்கேன்.''

''உன்னை யாரு கொண்டு வரச் சொன்னது? நான் கேட்டேனா? எடுத்துட்டுப் போ!'' என்றாள் கோபமாக.

கந்தன் நாசூக்காய் அவ்விடத்திலிருந்து அகன்றான்.

''காலையிலேயும் சாப்பிடாம வந்துட்டீங்க. ஒட்டல் சாப்பாடு வேண்டாம் அண்ணி. கோபத்தை சாப்பாட்டுல



காட்டாதீங்க. அதனாலதான் எடுத்துட்டு வந்தேன். சாப்பிடுங்க... ப்ளீஸ்!''

''ஆடு பகை, குட்டி உறவுங்கற மாதிரியில்லே இருக்கு? வேண்டாம்னு சொன்னா கேக்க மாட்டியா? எடுத்துட்டு போ!''

''நீங்க நினைக்கிற மாதிரி யாரும் யாருக்கும் பகை யில்லே அண்ணி! உங்க மேலே எனக்கு தனிப்பட்ட பிரியம் உண்டு. ஏற்கனவே உங்களுக்கு பலகீனமான உடம்பு. அதனாலதான் ரெண்டு முறை... குழந்தை தங்காம...''

''........?!''

''என் அண்ணன் குழந்தைய கொஞ்ச ரொம்ப ஆசையா இருக்கேன் அண்ணி! சாப்பிடுங்க.'

அந்த வார்த்தையில் விமலா இளகிப் போனாள் என்று தான் சொல்ல வேண்டும். அதற்கு மேல் வீம்புப் பண் ணாமல் சாப்பிட அமர்ந்தாள்.

* * *

''நீ செய்யறது எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கலே அனு. கையிலே எடுத்துச் சாப்பிட்டாளா? இல்லே நீயே ஊட்டிவிட்டுட்டு வந்தியா?'' என்றாள் பார்வதி கோபமாக.

''இப்ப என்ன பண்ணிட்டேன்னு இவ்வளவு கோபம்? உன் உடம்புக்கு டென்ஷன் ஆகாதும்மா!''

''இன்னும் என்ன பண்ணனும்? அவளுக்குத் திமிரு. சாப்பாடு வேண்டாம்னா விடேன். எதுக்காக சாப்பாடை தூக்கிகிட்டு ஒடறே? மகாராணியா அவ?''

''ப்ச்... பாவம்மா அவங்க! கோபத்திலே அப்படி இப் படின்னு பேசுவாங்க. ஆனா, அடிப்படையிலே எல்லோரும்

நல்லவங்க தான்... அண்ணி உட்பட, அவங்களும் நம்ம குடும்பத்துப் பொண்ணுதானே? பலகீனமானவங்க. அந்த காரணத்தாலேயே ரெண்டு முறை அபார்ஷன் ஆகிடுச்சு. அப்ப நம்ம எல்லோருக்குமே எவ்வளவு மனவேதனை? குடும்பம்னா இது மாதிரியான சண்டை சச்சரவுகள் வரு வது சாதாரணம். அதுக்காக வெறுத்திட முடியுமா?''

''அநியாயத்துக்கு ஏமாளியா இருக்கியே அனு! கொஞ் சம் சாமர்த்தியமும் வேணும். அப்பதான் புகுந்த வீட்லே குப்பை கொட்ட முடியும்!''

''நல்ல குணங்களை விட பெரிய சீதனம் வேறெ தும்மா? அண்ணி அனுசரணையா நடந்துக்கலேன்னு தானே நீ வருத்தப்படறே? அதே தப்பை நானும் செய் யணுமா? உன் வயதுள்ள அத்தனை பெண்மணிகளும் என் தாய்தான்!''

''அதுவும் சரிதான்! கடவுள் உனக்கு அற்புதமான வாழ்க்கையைத் தரணும்... அதுதான் என் ஆசை!''

''உன் ஆசை சீக்கிரமே நிறைவேறும்... கவலைப் படாதே!'' என்றபடி உள்ளே வந்து கொண்டிருந்தார் நாராயணன்.

''வாங்க...''

''அனு... சில்லுன்னு ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டு வாம்மா...!''

''இதோ...'' என்று விரைந்து உள்ளே சென்றாள் அனு.

மின் விசிறியின் நேர் கீழே நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்த நாராயணன் மகள் கொடுத்த தண்ணீரை அருந்தினார்.

''ரொம்ப நாழியா ஆளேக் காணோம்னு பதறிப் போய்ட்டேன்!''



''நீ எதுக்குதான்டி பயப்பட மாட்டே? சாப்பிட்டியா?''

''இல்லே...!''

''உடம்புல ஏகப்பட்ட வியாதியை வச்சுக்கிட்டு இப்பவும் எனக்காக சாப்பிடாம காத்திருக்கணுமா? என்ன பொம்பளை நீ? அனு சாப்பாடு எடுத்து வைம்மா!''

அடுத்த மூன்றாவது நிமிடத்தில் இருவரும் சாப்பிட ஆரம்பித்தனர்.

''அம்மாவை மட்டும் குறை சொல்றீங்களே... நீங் களும் நேரத்துக்குச் சாப்பிட வேணாமா? இந்த கொளுத் தற வெயில்லே எங்கேப்பா அலைஞ்சிட்டு வந்தீங்க?''

''அந்த பொன்னுசாமி இந்த மாச வட்டிய தராம இழுத்தடிக்கிறான். இன்னைக்கும் போய் பார்த்தா... வீட்லே ஆள் இல்லே! சரின்னு அப்படியே தரகர் வீட்டுக்குப் போனேன்.''

''போனீங்களா? என்ன சொன்னார்?'' சாப்பிடுவதை நிறுத்தி ஆவலாய் கேட்டாள் பார்வதி.

''நம்ம அனுவுக்கு ஏத்த மாதிரி ரெண்டு வரன் இருக்காம். ரெண்டுல ஒண்ணை கண்டிப்பா முடிச்சுக் கொடுத்திடறேன்னார்!''

''பகவானே!'' என்றாள் மேலே பார்த்து வணங்கி.

''இடம் கொஞ்சம் வசதியானவங்க. ஓரளவாவது திருப்தியா செய்... மீதிய நான் பார்த்துக்கறேன்னார்!''

''இருக்கிற பணத்தை வச்சு எப்படிச் சமாளிப்பீங்க?''

''அதான் யோசனையா இருக்கு. வங்கியிலே இருக்கிற ஒரு லட்சம் எந்த மூலைக்கு? பொன்னுசாமிகிட்டே பாதிப் பணத்தை ஏற்பாடு பண்ணி தரச் சொல்லணும்!''

''நம்ம அவசரத்துக்கு தருவாரா?''

''தந்துதானே ஆகணும்? நம்ம பணத்தை வியாபாரத் துல தானே போட்டிருக்கான்? எடுத்துத் தரட்டும்.''

''அவர்கிட்டே எழுதி வாங்கிட்டுதானே கொடுத்தீங்க?''

''என்னடி நீ? சாப்பிட விடாம கேள்வி மேலே கேள்வி கேக்கறே? புத்திசாலின்னு நினைப்பா? இத்தனை கால மும் உன் யோசனையை கேட்டுத்தான் இதுங்களை பெத்து வளர்த்து ஆளாக்கினேனா? பொம்பளையா, லட்சணமா, வாயை மூடிக்க...'' என்று எகிறினார் நாரா யணன்.

விக்கித்துப் போயிருந்தாள் பார்வதி. ''என்ன சொல்லிட் டேன்.''

அனு சமாளித்தாள்.

''சாப்பிடறப்ப... ஏம்மா பேசறே? அப்பா... நீங்க சாப்பிடுங்க. ரசம் விடட்டுமா?''

சாப்பிட்டு முடித்து கழுவிய கையைத் துண்டால் துடைத்துக் கொண்டிருந்த நாராயணனுக்குள்ளும், கொஞ்ச நாட்களாக புதியதாக ஒரு பயம் முளைத்திருந்தது.

மகேந்திரனிடமும் பார்வதியிடமும் எரிந்து விழுந் தாலும் அந்த சந்தேகம் அவருக்கும் இருந்தது.

பொன்னுசாமி நாராயணனுக்கு நல்ல நண்பர். வசதி யாய் வாழ்ந்து, சொந்த அண்ணனால் ஏமாற்றப்பட்டு சொத்துக்கள் கைவிட்டுப் போயின. அந்த நேரத்தில்தான் அவர் கேட்டதற்காக வட்டிக்கு ஆசைப்பட்டு மூன்று லட்சத்தை வெறும் நம்பிக்கையின் அடிப்படையில், எழுத்துப் பூர்வமின்றி கொடுத்தார். அதை வைத்து வியா பாரம் செய்து நன்றாகவே சம்பாதிக்கிறார். வட்டியெல்லாம்



ஒழுங்காதான் வந்து கொண்டிருந்தது. நான்கைந்து மாதமாகத்தான் ஒழுங்கு மாறிப் போயிற்று.

'அவ்வளவு பெரிய தொகையை வெறும் நம்பிக்கை அடிப்படையில் கொடுத்தது தப்போ?'

அடிக்கடி இதே சிந்தனையில் உறக்கமிழந்து தவித்தார்.

அன்று மாலை... மறுபடி பொன்னுசாமியை தேடிப் போனார்.

இருந்தார்!

''என்ன பொன்னு... என்னை எத்தனை முறை வர வைப்பே? காலைலே கூட வந்தேன்!''

''ஏன் வர்றே? இருந்தா கொடுத்துட மாட்டேனா? வியாபாரத்துல நஷ்டம்!''

''இந்தக் காரணத்தையெல்லாம் எங்கிட்டே சொல்லக் கூடாது. பணத்தை வாங்கும்போது, என்ன சொல்லி வாங்கினே? கடிகாரத்திலே நேரம் தவறினாலும் தவறும். என் வட்டிப் பணம் தவறாதுன்னு சொன்னே!''

''சரிப்பா... சந்தர்ப்ப சூழ்நிலை... முடியலே. அடுத்த மாசம் சேர்த்து தந்திடறேன், தவிர, வட்டிய ரெண்டு, ரூபாவா குறைச்சுக்க... கட்டுப்படியாகலை!''

''இதே பார் பொன்னு... போன மாசம் உன் ரெண்டாவது பொண்ணுக்கு ஜாம் ஜாம்னு கல்யாணம் பண்ணி வைச்சே. அதுக்கெல்லாம் பணமிருக்கு. எனக்கு வட்டி தர பணமில்லே... அப்படித்தானே? நான் வட்டிய மட்டும் கேட்க வரலே. பணம் வேணும். என் பொண்ணுக்கு வரன் குதிந்திருக்கு. நமக்குள்ளே பிரச்னை வேண்டாம். அடுத்த மாசம் பணத்தை ஏற்பாடு பண்ணிக் கொடுத்திடு!''

பொன்னுசாமியின் முகம் மாறியது.

''திடீர்னு பணத்தை கொடுன்னு கேட்டா... என்ன பண்ணுவேன்? இப்ப என்னால முடியாது. பணத்தை வியாபாரத்துல போட்டிருக்கேன். ரெண்டு வருஷம் கழிச்சு தர்றேன்!''

''என்ன... ரெண்டு வருஷம் கழிச்சா? என்ன விளை யாடறியா? பணம் வேணும்னா, ஒரு மாசம் முன்னாடியே சொல்லிடு... அவசரத்துக்கு வீட்டை அடகு வச்சாவது தர்றேன்னியே?''

''இப்போ உள்ள சூழ்நிலையிலே உனக்கே வட்டி தர முடியாம திண்டாடறேன். இருக்கிற வீட்டை அடகு வச்சு அதுக்கு வேற யாரு வட்டி கட்டறது?''

''அது என் பிரச்னை இல்லே! என் பணத்தை அடுத்த மாசம் கொடுத்தே ஆகணும். இல்லேன்னா...''

''என்ன மிரட்டறியா?''

''உன் புது சம்பந்தி வசதியானவராமே! அவர்கிட்டே போய் நியாயம் கேக்கறவன். நீயா, நானான்னு பார்த் துடுவோம்!''

கோபமாய் சொல்லிவிட்டுச் சென்ற நாராயணனை கலக்கமாய் பார்த்தார் பொன்னுசாமி.

* * *

அன்று அந்த வீட்டிற்கு மோசமாய் விடிந்தது.

மகேந்திரனும், விமலாவும் அலுவலகம் செல்லத் தயாராகிக் கொண்டிருக்க... அனு சமையலறையில் பிஸியாய் இருந்தாள்.

திறந்திருந்த கதவு தட்டப்பட்டது.



எட்டிப் பார்த்த இந்திராவின் முகத்தில் கலவரம்.

நான்கு போலீஸார் நின்றிருந்தனர்.

''நாராயணன் வீடு இதுதானே?''

# 4

''என்னம்மா... யார் வந்திருக்கா?'' நாராயணன் கூடத் துக்கு வர... ''போலீஸ் வந்திருக்குப்பா!'' என்றாள் இந்திரா மிரட்சியுடன்.

''போலீஸா? என்ன சார்? என்ன வேணும் உங்களுக்கு?'' வியப்புடன் வாசலுக்கு வந்தார்.

''நாராயணன் யாரு?''

''நான்தான்... ஏன் கேட்கறீங்க?''

''பொன்னுசாமிங்கறவரைத் தெரியுமா?''

''தெரியுமே! ஏன் அவருக்கென்னாச்சு?''

''அவருக்கு வட்டிக்குப் பணம் கொடுத்தியா?''

''அ... ஆமாம்!''

''நேத்து பணம் கேட்டு மிரட்டினியா?''

''மிரட்டலே சார். என் பொண்ணுக்குக் கல்யாணம். பணத்தைத் திருப்பிக் கொடுன்னு கேட்டேன்... அதனால என்ன பிரச்னை?''

''அவர் எவ்வளவு பணம் தரணும்?''

''மூணு லட்சம் சார்!''

போலீஸ்காரர்கள் ஒருவரையொருவர் பார்த்து நமுட்டாகச் சிரித்துக் கொண்டனர்.

''நடய்யா ஸ்டேஷனுக்கு!''

''ஏன்... நான் எதுக்கு வரணும்?''

குடும்ப உறுப்பினர்கள் மொத்தமும் பதைப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, அனு முன்னே வந்தாள்.

''ஏன் சார்? எதுக்காக எங்கப்பாவை ஸ்டேஷனுக்கு கூப்பிடறீங்க?''

''பொன்னுசாமி புகார் கொடுத்திருக்கிறார். உங்கப்பா கந்து வட்டிக்கு ஐம்பதாயிரம் கொடுத்து, இப்ப மூணு லட்சமா திருப்பித் தரலேன்னா... அவர் பொண்ணோட வாழ்க்கையை நாசம் பண்ணிடறதா மிரட்டிட்டு வந்திருக்கிறார். கந்து வட்டி, மீட்டர் வட்டின்னு ஏமாந்தவங்களை சுரண்டறவங்களுக்காகவே அரசாங்கம் கடுமையா சட்டம் கொண்டு வந்திருக்கு.''

''சார்... நான் என் பொண்ணு கல்யாணத்துக்காக வச்சிருந்த மூணு லட்ச ரூபாயும் அந்த பொன்னுசாமிக்குக் கொடுத்தேன் சார். அந்தாள் பொய் சொல்றான் சார்!''

''யோவ்... கந்து வட்டிக்கு பணம் கொடுத்ததே தப்புங்கறேன் நடய்யா...'' ஒரு போலீஸ்காரர் நாராயணன் கழுத்தில் கையை வைத்தார்.

''சார்... சார்... நான் கவுரவமானவன் சார்... விட்ருங்க...''

''ஐயா... என் புருஷன் மேலே எந்தத் தப்புமில்லே... அவரை விட்ருங்க...'' பார்வதி கதறினாள்.

விமலா நடப்பவற்றை கேலிப் புன்னகையுடன் பார்க்க, நடப்பவற்றை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தான் மகேந்திரன்.



அனுவும், இந்திராவும் கண்ணீருடன் கெஞ்சியும் நாராயணனை இழுத்துக் கொண்டு சென்றனர் போலீஸார்.

அக்கம்பக்கத்தார் வேடிக்கை பார்க்க... கூனிக் குறுகிப் போனார், நாராயணன்.

நடந்தவைகளை கிரகித்துக் கொள்ள சக்தியின்றி மயங்கி விழுந்தாள் பார்வதி.

* * *

அதன் பின் நடந்ததெல்லாம் யாரும் எதிர்பாராதது.

நாராயணன் பதினைந்து நாள் காவலில் சிறையில் அடைக்கப்பட்டார். சில தினசரிகளில் அவரைப் பற்றி செய்தியும் வந்தது. ஹார்ட் அட்டாக் காரணமாக பார்வதி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள்.

அனுவும், இந்திராவும் காலில் விழாத குறையாக மகேந்திரனிடம் கெஞ்சினர். ''அப்பாவை காப்பாற்று'' என்று.

''எப்படியெல்லாம் பேசினார் உங்கப்பா? எங்கள் மேல் வைக்காத நம்பிக்கையை அந்த பொன்னுசாமி மேலே வைத்தாரே? இப்போது மட்டும் நாங்கள் எதற்கு?''

''அண்ணி... தயவு பண்ணி அப்பா பேசினதை மறந்திடுங்க. எங்களுக்கு அவர் வேணும். அம்மா வேறு ஆஸ்பத்திரியிலே...'' விக்கி விக்கி அழுதாள் அனு.

ஒருவாறு மகேந்திரனும் மனமிரங்க, தந்தையை ஜாமீனில் எடுக்கிறான். அதற்குள் உடல் தேறி பார்வதியும் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டிருந்தாள்.

வீடு நிறைய ஆட்கள் இருந்தும் மயான அமைதி நிலவியது. இதுதான் சாக்கு என்று மகேந்திரனும், விமலாவும்

தங்கள் ஆதங்கத்தை கொட்டித் தீர்க்க... பல் பிடுங்கப் பட்ட பாம்பாய், மவுனமாய் இருந்தார் நாராயணன்.

நல்லவனாக இருப்பது எளிது. ஆனால் நேர்மையான வனாக இருப்பதுதான் கடினம். பொன்னுசாமியின் நேர்மை யற்ற செயலால், அநியாயமாய் அவமானப்பட்டு விட்டார் நாராயணன்.

பணம் கைவிட்டுப் போனதால் இடிந்து போய் விட்டார். ஐந்து நாள் சிறை வாழ்க்கை அவரை மிகவும் பாதித்து விட்டது. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிய மருமகளின் செயலைவிட, தன் இரு மகள்களை எப்படி கரையேற்றப் போகிறோம் என்கிற நினைப்பே ஊசியாய் தைத்தது. வெளியில் தலை தெரிந்தால் போதும். தெரு வாசிகள் கிசுகிசுப்பாய் பேசினர்.

நொந்துப்போன நாராயணன் உடனடியாக அந்த வீட்டைக் காலி செய்து வேறு இடம் சென்றார்.

* * *

முடங்கிப்போன அப்பா, அதைப் பார்த்து நொந்துப் போன அம்மா என்று அவர்களைப் பார்க்கும் போதெல் லாம் மனசு நைந்துப் போனது அனுவிற்கு. வழக்கம் போல் அண்ணனும், அண்ணியும் எதையும் கண்டுக் கொள்ள வில்லை. அடிக்கடி பரிசோதனை, மருந்து மாத்திரைகள் என்று பார்வதிக்கு செலவுகள் அதிகரித்தன.

சிறையில் வாழ்ந்த நாட்களை அசை போட்டு தன்னைத் தானே ரணமாக்கிக் கொண்டிருந்த நாராயணனுக்கு சீர்குலைந்து வரும் தன் வீட்டுப் பொருளாதாரத்தை நினைத்துப் பார்க்கும் நிலையில் அவர் இல்லை. இந்திரா அக்காவின் மடியில் முகம் புதைத்து கண்ணீர் விட்டாள்.



''அனுக்கா... நான் இனி கல்லூரிக்குப் போகப் போறதில்லே.''

''ஏன்டி, விஷயம் தெரிஞ்சு உன்னை கிண்டல் பண் றாங்களா?''

''ஆமாங்க்கா! ஆனா, அதுக்காக நான் கவலைப் படலே. நம்ம அப்பாவைப் பத்தி நமக்குதானே தெரியும்!''

''பின்னே... வேற எதுக்கு?''

''இப்ப உள்ள சூழ்நிலையிலே நான் படிக்கறதைவிட வேலைக்குப் போறதுதான் புத்திசாலித்தனமாப் படறது.''

''பைத்தியக்காரி... அதுக்காக படிப்பை நிறுத்துவாங் களா? வேலைக்குப் போகறதைப் பத்தி நான் ஏற்கனவே முடிவுப் பண்ணிட்டேன். அப்பாக்கிட்டேயும் பேசி அனுமதி வாங்கிட்டேன். நாலைந்து கம்பெனிகளுக்கு விண்ணப்பமும் அனுப்பிட்டேன். நீ ஒழுங்கா படிச்சு முடி! வீட்டுப் பிரச்னைகளை நான் பார்த்துக் கொள் கிறேன்... சரியா?'' தங்கையின் தலையை அன்பாய் வருடிக் கொடுத்தாள் அனு.

* * *

உடற்பயிற்சியை முடித்த மிதுன்... வியர்வையில் தெப்பமாய் நனைந்திருந்தான். அரைக்கை பனியனும், அரைக் கால் டிரவுசரும்... அவன் கட்டுடலை கம்பீரமாய் வெளிப்படுத்தின.

மாடி பால்கனியில் பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

உயர்ந்த மதில் சுவருக்கு முடிச்சாய் பிரம்மாண்டமான கேட்! தமிழ் பேசும் கூர்க்கா... பணியில் முனைப்பாயிருந் தான்.

தோட்டத்துச் செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந் தான் முத்தையா.

நான்கு உயர்ஜாதி நாய்கள் புல்வெளியில் விளையாடிக் கொண்டிருந்தன.

டிரைவர் வேலு போர்ட்டிகோவில் நின்றிருந்த நான்கு கார்களையும் துடைத்து சுத்தப்படுத்திக் கொண்டிருந்தான்.

பூத்துவாலையால் முகம், கழுத்தை துடைத்துக் கொண்டிருந்த மிதுனின் முகம் புன்னகையால் விரிந்தது.

காரணம் அவனை நோக்கி அப்பா அருணாச்சலம் வந்து கொண்டிருந்தார்.

''குட்மார்னிங் டாடி!''

''குட்மார்னிங்! உடற்பயிற்சி எல்லாம் முடிந்ததா?''

''ம்...''

''ரொம்ப போரடிக்குது மிதுன். பழையபடி நான் அலுவலகம் வரட்டுமா?''

''உங்களுக்கு முழு ஓய்வு தேவைன்னு டாக்டர் சொன்னதை மறந்திட்டீங்களாப்பா? மேற்படிப்புக்கு வெளிநாடு செல்லவிருந்த திட்டத்தைக் கைவிட்டு, நம்ம கம்பெனிகளை நல்லபடிதானே நிர்வகிக்கிறேன்?''

''அதிலென்ன சந்தேகம்? நீ பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு நம் கம்பெனிகளின் ஆண்டு வருமானம் அதிகரித்திருக்கிறது.''

''பிறகென்னப்பா?''

''போர் அடிக்குது. அதனாலதான் சொன்னேன். நீ சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டாலாவது பேரன், பேத்தின்னு உருப்படியா நேரத்தை செலவழிப்பேன். உனக்கு பொண்ணு கொடுக்க வரிசை கட்டி நிக்கறாங்க. ஆனா, நீதான் மறுக்கிறே. என் மனசுக்குள்ளே ஒரு பொண்ணு இருக்கா. அப்படிப்பட்ட பொண்ணு கிடைச்சா பண்ணிக்கறேன்னு சொல்றே! இதெல்லாம் நடக்கிற காரியமா? அந்த கற்பனைப் பெண்ணை நீ எப்ப பார்க்கிறது? எப்ப கல்யாணம் நடக்கிறது?''



''அவளை நான் பார்த்துட்டேன்ப்பா!''

''மிதுன்... நிஜமாகவா சொல்றே?'' என்றார் வியப்பாய். ''யாரு அந்தப் பொண்ணு?''

''அவ யாரு... பேரென்ன, எங்கேயிருக்கா? இது எதுவும் தெரியாது... ஆனா, அவளைப் பார்த்தேன்!''

''கிழிஞ்சது கிருஷ்ணகிரி!''

''கிண்டல் பண்ணாதீங்கப்பா. அவளை நான் மறுபடி பார்ப்பேன்னு என் மனசு சொல்லுது!''

''என்னமோப்பா... நான் உன் விருப்பத்துக்கு மரியாதை கொடுக்கிறவன். அதனாலேயே என்னை முட்டாளா ஆக்கிக்கிட்டு வர்றே!'' வருத்தமுடன் சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டு அகன்றார்.

அப்பாவின் வருத்தம் மிதுனை ஆட் கொண்டது.

'பாவம் அப்பா... என் செயல்கள் அவரை காயப்படுத்துகிறது. என்ன செய்வேன்? அவளை... அந்த தேவதையை மறுபடியும் பார்க்க மாட்டேனா? பெண்ணே! நீ யார்? எங்கிருக்கிறாய்?'

* * *

கஸ்தூரிபாய் பெண்கள் விடுதி!

கிட்டத்தட்ட எழுநூறுக்கும் மேற்பட்ட பெண்கள் தங்கியிருக்கும் விடுதி.

கல்லூரியில் படிக்கும் பெண்களுக்கும், வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும் மட்டுமே தங்க அனுமதி. சகல வசதிகளுடன், தரமான சாப்பாடு, நியாயமான கட்டுப் பாடு, சட்டதிட்டங்கள் என்பதால்... அந்த விடுதிக்கு தனி மரியாதை இருந்தது.

விடுதியைச் சுற்றிலும் சப்போட்டா, மா, சாத்துக்குடி என்று பழமரங்கள் வீற்றிருக்க... தென்றலுக்குப் பஞ்ச மில்லை.

மாலினி மாடி கைப்பிடிச்சுவர் மீது காலை நீட்டி அமர்ந் திருந்தாள். அவளின் அழகிய முகம் வாடியிருந்தது. அழுததற்கு அடையாளமாய் கண்கள் சிவந்திருந்தது.

''ஏய்... மாலு... நீ இங்கேயா இருக்க? உன்னைத்தான் தேடிக்கிட்டிருந்தேன்'' என்ற வாஸந்தி அவள் அமர்ந் திருந்த கோலத்தைப் பார்த்து பயந்து போனாள்.

''அடிப்பாவி இப்படியா உட்கார்ந்திருப்பே? தப்பித் தவறி விழுந்தா என்னாகறது?'' என்று அவள் கைப் பிடித் திழுத்து இறக்கிய வாஸந்தி, மாலினியொத்த வயதுடைய வள். இருவரும் ஒரே அறையில் தங்கியிருப்பவர்கள்.

''அப்படியே விழுந்து செத்தா மட்டும்... என் உடம்பை வாங்கி அடக்கம் பண்ண சொந்தக்காரங்க விழுந்தடிச்சி ஓடி வருவாங்க!'' கிண்டலாய் சொன்னாலும், ஏக்கமும், வேதனையும் மிகுந்திருந்தது குரலில்.

அவள் என்ன சொல்ல வருகிறாள் எனப்புரிய, வாஸந்தி அவள் கன்னத்தை ஆறுதலாய் பற்றினாள்.

''நீ எப்பேர்ப்பட்ட பெண் மாலு? இப்பல்லாம் உன் தைரியமும், தன்னம்பிக்கையும் அடிக்கடி காணாமல் போயிடுது. என்ன ஆச்சு உனக்கு?''



''அந்த வேலையை ராஜினாமா செய்திடலாம்னு இருக்கேன்?''

''ஏன்?'' அதிர்ந்தாள் வாஸந்தி.

''அவனோட தொல்லை தாங்க முடியலே.''

''ஓ!''

''வேற வேலைக்கு முயற்சி பண்ணிட்டிருக்கேன். அடுத்த வாரமே கிடைச்சிடும்னு நினைக்கிறேன்!''

''நல்லது... அப்படியே செய்! நீ நிம்மதியா இருந்தா அதுவே போதும்.''

''ஆனா, நீ வருத்தப்படற மாதிரி இன்னொரு முடிவும் எடுக்கப் போகிறேன்.''

''என்ன சொல்றே மாலு?''

''அவன் கண்லேயே நான் பட விரும்பலே. வேற விடுதிக்கு மாறப் போகிறேன்.''

''ப்பூ... இவ்வளவுதானா? நான் என்னவோ, ஏதோன்னு பயந்தே போய்ட்டேன்!''

''ஏன் உனக்கு வருத்தமில்லையா?'' என்றாள் ஏமாற்ற மாய்.

''ஏன் வருத்தப்படணும்? நீ போகிற அதே விடுதிக்கு நானும் வந்துட்டாப் போச்சு!''

மாலினி, வாஸந்தியின் கரத்தைப் பற்றி இறுக்கினாள்.

''எனக்காக... நீயாவது இருக்கியே... நன்றி வாஸந்தி!'' என்றாள் நெகிழ்ச்சியுடன்.

* * *

பல்பொருள் அங்காடியிலிருந்து வெளிப்பட்ட மிதுன், பார்சலை காரின் பின் சீட்டில் போட்டு விட்டு, முன் சீட்டில் அமர்ந்து காரை கிளப்பினான்.

அப்போதுதான்...

அவளைப் பார்த்தான்.

எதிர்ப்புற சாலையில் தன் கைனடிக்கில்... சிக்னல் விழக் காத்திருந்தாள்.

மிதுன் பரபரப்பானான்.

''ஏய்...'' கத்த வேண்டும் போலிருந்தது. முடியவில்லை. அவள் முகம் மட்டும் தெரிந்தது. வண்டி எண் தெரிய வில்லை. இறங்கிச் செல்லவும் முடியாது.

நடு ரோடு. அவளோ அடுத்த பக்க சாலையில் சட்டென ஒரு யோசனை உதிர்த்தது.

தன் செல்பேசியை எடுத்தான். காமிரா வசதியுடையது கிடைத்த சில கண நேரத்தில்... அவளை புகைப்படம் எடுத்துக் கொண்டான்.

சிக்னல் விழ... அவள் விரைந்து மறைந்தாள்.

# 5

ஆர்வமாய் கேட்டு வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்த மிதுனை ஆச்சர்யத்துடனும், சந்தோஷத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தார் அருணாச்சலம்.

எப்போதும் காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு பறப்பவன். பிஸினஸ் நினைப்பில் அவசர அவசரமாய் இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு ஓடுபவன். ஆவி பறக்க, வகை வகையான சுவை மிக்க உணவுகள்



மேசை மீது காத்திருந்தாலும், அதை ஒரு நாளும் ரசித்து ருசித்துச் சாப்பிட்டதில்லை. அதெல்லாம் மிதுனின் அம்மா உயிரோடு இருந்தவரைதான். துர்காதான் மகனுக்குப் பார்த்து, பார்த்து பரிமாறுவாள். பல சமயம் ஊட்டியும் விடுவாள். அவனுக்குப் பதினான்கு வயதாகும போது துர்கா இறந்து விட்டாள்.

அம்மாவின் ஏக்கமோ, என்னவோ அன்றிலிருந்து அவன் சாப்பிடுவது கடமைக்காக என்றே ஆகிப் போனது. அருணாச்சலத்தின் நிலையும் அதேதான் என்றாலும் மகனைப் பார்க்கும்போதெல்லாம் கசிந்துருகி விடுவார்.

''என்னப்பா... சாப்பிடாம என்னையே பார்த்துட்டிருக்கீங்க?'' என்றான் அப்பாவை வியப்புடன் நோக்கிய மிதுன்.

''ரொம்ப நாள் கழிச்சு உன் முகத்தில் ஒரு தெளிவு! அதைத்தான் பார்த்துட்டிருக்கேன்!''

''நான் எப்பவும் தெளிவாத்தான் இருக்கிறேன். உங்க பார்வையில்தான் கோளாறு!''

''என் ஒரே மகன் நீ! என் உலகமும் நீதான். எப்பவும் உன்னைப் பத்தியே சிந்திக்கிறவன் நான். உன் முகத்தை, மனசை என்னைத் தவிர யாரால் படிக்க முடியும் மிதுன்?''

மெல்ல தலையசைத்தபடி சிரித்த மிதுன் இரு கைகளையும் மேலே தூக்கி... ''அம்பேல்... உங்களை ஜெயிக்க என்னால முடியாது!'' என்றான்.

''என்ன விஷயம் மிதுன்?''

''நான் நேற்று அவளைப் பார்த்தேன்ப்பா!''

''யாரை?''

''என் கற்பனை தேவதையை!''

''ஆரம்பிச்சிட்டியா கதை விடறதை!''

''நிஜமாதாம்ப்பா சொல்றேன். அவளை நேத்து பார்த் தேன். ஆனா, பேச முடியலை!'' என்றபடி நடந்ததை விவ ரித்தவன் தன் செல்பேசியில் அடக்கியிருந்த அவளின் புகைப்படத்தை காட்டினான்.

''பொண்ணு லட்சுமிகரமா, அழகாத்தான் இருக்கிறா. ஆனா, இதெல்லாம் எந்தளவு சாத்தியம்னு புரியலே எனக்கு. ஜாதி, மதம்னு பகுத்தறிகிற ஈனப் பிறவியில்லே நான். அந்தஸ்து பேதம் பார்க்கிறவனுமில்லே. உன் மனசுப்படி ஒரு வாழ்க்கை அமைஞ்சா அதைவிட பெரிய மகிழ்ச்சி வேறென்ன வேணும்? ஏன்னா... உங்கம்மா வோட நான் வாழ்ந்த வாழ்க்கையும் அப்படிப்பட்டதுதான். ஆனா...''

''சொல்லுங்கப்பா!''

''இந்தப் பொண்ணு யாருன்னே உனக்குத் தெரியாது. ஒருவேளை மணமானவளாகவும் இருக்கலாம்.''

''இல்லேப்பா... நிச்சயம் இருக்க முடியாது. எனக்கு நம்பிக்கை இருக்கு. எப்படின்னு விளக்கி சொல்லத் தெரியலே. மனசு சொல்லுது அவதான் உங்க மருமகள்னு!''

''...............?!''

''என் எண்ணம் உங்களுக்கு முட்டாள்தனமாகத் தோன்றலாம். வெற்றி பெற்ற இளம் தொழிலதிபர், இப்படி உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வித்தியாச மாய் நடந்து கொள்கிறானே என்று! ஆனா, கண்டிப்பா நான் நினைச்சது நடக்கும். அவளை கண் மூடித்தனமா காதலிக்கிறேன். இதயத்துல வச்சி பூஜிக்கிறேன். அவ எனக்கு வேணும்ப்பா! அவளை சீக்கிரமே கண்டு பிடிச்சு



உங்க முன்னாடி நிறுத்தறேன்!'' என்றான் உணர்ச்சி வயப்பட்டவனாய்.

அருணாச்சலம் எழுந்து வந்து மகனின் தலையைக் கோதி விட்டார்.

''உன் மனசுப்படி நடக்கும் மிதுன்'' என்றார்.

* * *

தெரு விளக்குகள் பளிச்சென்று எரிந்து கொண் டிருந்தன. சந்தடி அடங்கி, அவரவர் தங்கள் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அடைக்கலமாகி விட்டிருந்தனர்.

அனு நடையை விரைவுப் படுத்தினாள். வழக்கத்தை விட இன்று வீடு திரும்பத் தாமதமாகிவிட்டது. அதற்கு காரணமும் இருந்தது.

வீட்டிற்குள் நுழைந்த அனு நேரே சமையற்கட்டை நோக்கிப் போனாள்.

'ரொம்ப நேரமாகி விட்டது. முதலில் இரவு சமையலை முடித்துவிட வேண்டும்.'

தோளில் தொங்கிய பையை ஓரமாக வைத்துவிட்டு திரும்பியவள்... வியந்தாள்.

ஏற்கனவே சமைத்து வைக்கப்பட்டிருந்தது.

'யாரோட வேலை இது?' எண்ணும்போதே... அம்மா வந்தாள்.

''ஏன் அனு தாமதம்? அலுவலகத்தில் வேலை அதி கமா?''

''இல்லேம்மா... அது வேறு காரணம். அப்புறம் சொல் றேன். முதல்ல நான் கேக்கறதுக்கு பதிலை சொல்லு.

இதெல்லாம் உன் வேலையா?'' என்றாள் சமையல் மேடையை சுட்டிக் காட்டி.... சற்றே கோபமாக.

''நான்தான் செய்யறேன்னு சொன்னேன். ஆனா, அவள் விடலே...''

''யாரு... அண்ணியா?''

''யாரு... அந்த மகராசியா? அவ காபி குடிச்ச தம்ளரைக் கூட கழுவி வைக்க உடம்பு வணங்காது. சமையலறை யிலே சர்க்கரை எங்கேயிருக்கு. உப்பு எங்கேயிருக்குன்னு கூட தெரியாது அந்த மேனா மினுக்கிக்கு.''

''ப்ச்... தகாத வார்த்தையெல்லாம் பேசாதேம்மா. அவங்களும் நம்ம வீட்டு பெண்தான்ங்கறதை அடிக்கடி மறந்திடறே! வேற யார்தான் சமைச்சா?''

''நான்தான்'' என்றபடி வந்து நின்றாள் இந்திரா.

''நீயா?'' கண்கள் அகன்றன அனுவுக்கு.

''நானேதான்! எனக்குதான் கல்லூரி மூனு மணிக்கே முடிஞ்சிடுதே! நீயும்தான் எவ்வளவு உழைப்பே? இனி மேல் இரவு சமையல் நான்தான் சமைப்பேன்.''

''உனக்கேன்டி சிரமம். அதெல்லாம் ஒண்ணும் வேணாம். நீ படிக்கறதிலே கவனம் செலுத்து!''

''படிப்புல நான் கெட்டிக்கா. அதனால நீ கவலைப் படாதே...''

''சமைக்கட்டுமே அனு! இன்னும் எத்தனை நாளைக்கு நீ இந்த வீட்லே சமைச்சிட்டிருக்க முடியும்? இந்திராவும் சமைக்கப் பழகிக்கட்டும்!'' என்றாள் பார்வதி.

''ஏம்மா... எனக்குக் கல்யாணம் பண்ணி அனுப்பப் போறீங்களா? நம்ம வீடு இருக்கிற சூழ்நிலையிலே இப்ப அதைப் பத்தி என்ன பேச்சு?''



''அபசகுனமா பேசிட்டிருக்காதே! எதெது, எப்பெப்ப நடக்கணும்னு விதிச்சிருக்கோ... அதெல்லாம் நடந்துதான் தீரும். நீ உடை மாற்றி முகம் கழுவிட்டு வா. இந்திரா, அனுவுக்கு ஒரு காபி போட்டு எடுத்து வாம்மா!''

* * *

முகம் கழுவி, இரவு உடைக்குள் புகுந்து... அப்போது தான் மலர்ந்த மல்லிகையைப் போல் பளிச்சென்றிருந் தாள் அனு.

தங்கை கொடுத்த காபியை அருந்தி முடித்தவள், களைத்துப் போய் நுழைந்து கொண்டிருந்த அப்பாவைப் பார்த்தாள்.

உருகிப் போனது மனசு.

கடந்த பதினைந்து நாட்களாய் நாராயணனும் வேலைக்குப் போய் வருகிறார். ஒரு கம்பெனியின் வாட்ச் மேன் வேலை. அனு எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள். நாராயணனின் பிடிவாத குணம் ஏற்கவில்லை. இழந் தவைகளை தன் உழைப்பின் மூலம் சம்பாதித்து விட வேண்டும் என்கிற தன்னம்பிக்கை.

''வாங்கப்பா! இந்திரா அப்பாவுக்கு காபி கொண்டு வா!''

''நீயும் இப்பதான் வந்தியா?''

''ஆமாம்ப்பா! இன்னைக்கு தான் முதல் மாத சம்பளம் வாங்கினேன். கூட்டமில்லாத பஸ்ஸில் வருவது தான் பாதுகாப்பு என்று காத்திருந்ததில் தாமதமாகி விட்டது. இந்தாங்கப்பா!'' என்று சம்பளக் கவரை எடுத்து நீட்டி னாள்.

''நீயே பத்திரமா வச்சுக்கம்மா!''

''அப்பா...'' என்றாள் பதறி.

''தப்பா நினைச்சுக்காதேம்மா! உன்னை புகுந்த வீட்டுக்கு அனுப்பணும்னு நினைச்சேன். உன்னை வேலைக்கு அனுப்பறதுல எனக்கு விருப்பமில்லே அனு. உன் வற்புறுத்தலுக்காகத்தான் சம்மதிச்சேன். இது உன் பணம். சேமிச்சு வை!''

''ஏன்ப்பா என் பணம், உன் பணம்னு பிரிச்சுப் பார்க் கறீங்க? நம்ம குடும்பத்துக்காக நான் உழைக்கிறேன்!''

''பொட்டப்புள்ள... உனக்காவது அந்த எண்ணம் இருக்கே? அது போதும்மா! பொம்பளைப் புள்ளைங்களை வேலைக்கு அனுப்பி, அந்த பணத்துல குடும்பம் நடத்தறது அவ்வளவு மரியாதையான விஷயமா எனக்குத் தெரியலேம்மா! பெத்து வளர்த்தேன். படிக்க வச்சேன். நல்ல இடமாப் பார்த்து கட்டி வைக்கணும். அது என் கடமை. அதுக்கு கூலி தராதேம்மா!''

''அ..ப்...பா!''

''குடும்பத் தலைவன்னு எதுக்கு இருக்கேன்? ஆம் பளைங்க உழைக்கத் தயங்கக் கூடாது. அதான் நான் மறுபடி வேலைக்குப் போக ஆரம்பிச்சிட்டேனே! நான் பார்த்துக்கறேன்ம்மா! இதை பத்திரமா சேர்த்து வை... உன் கல்யாணத்துக்குப் பயன்படும். அப்பா இப்படியெல்லாம் பேசறாரேன்னு வருத்தப்படக் கூடாது. உன் நன்மைக் காகத்தான் சொல்றேன்னு புரிஞ்சுக்கணும் சரியா?'' வாஞ்சையுடன் மகளின் தலையைக் கோதி விட்டார் நாராயணன்.

கண்கள் பனிக்க, தன் தந்தையை பெருமிதமாய் பார்த்தாள் அனு.

* * *



காரை போர்ட்டிகோவில் நிறுத்திவிட்டு உள்ளே வந்த ரஞ்சன் ஆச்சர்யமானான்.

அவனின் தாயார் வேதா சோபாவில் அமர்ந்திருந்தாள்.

''என்னம்மா இன்னைக்கே திடீர்னு? நாளைக்குதானே வர்றேன்னு சொன்னே?''

''தரகர் உடனே வரச் சொல்லி போன் பண்ணினார். அவரும் இப்ப அரை மணி நேரம் முன்பு இங்கே வந்து ஒரு கவர் நிறைய புகைப்படமும், ஜாதகமும் கொடுத் துட்டுப் போய்ட்டார்.''

''அப்படியென்னம்மா அவசரம் எனக்கு? இன்னும் ஒரு வருஷம் போகட்டுமே! அலுவலகத்துல சமீபத்துலதான் பதவி உயர்வு கொடுத்து, இந்த காரும், வீடும் கொடுத் திருக்காங்க. ஒரு தேர்வு எழுதிட்டா ஒரு வருஷத்துக் குள்ளே இன்னொரு பதவி உயர்வு கிடைச்சிடும்!''

''இருபத்தெட்டு வயசுப் பிள்ளை பேசற பேச்சா இது? உன்னை சென்னையிலே தனியா விட்டுட்டு நாங்க மதுரையிலே காலத்தை ஓட்டிக்கிட்டிருக்கோம்.''

''எனக்கு இங்கே எந்தக் கஷ்டமும் இல்லேம்மா. வசதியான வீடு. சமைக்க, துவைக்க ஒரு ஆள். அப்புற மென்ன?''

''என்னயிருந்தாலும் பொண்டாட்டி பார்த்துக்கிற மாதிரி ஆகுமா? மதுரையிலே நம்ம சொந்தத்திலேயே ஏகப்பட்ட பொண்ணுங்க இருக்கு. சொந்தத்திலேயே வேண்டாம். அப்படிப் பார்த்தா சென்னையிலே இருக்கிறப் பொண்ணா பாருன்னு பிடிவாதம் பிடிக்கிறே. இந்தப் புகைப்படத்துல இருக்கிற பொண்ணுங்கள்ல ஒருத்திதான் என் மருமகள். எந்த சாக்கு போக்கும் சொல்லாம... உடனே தேர்ந்தெடு.''

ரஞ்சன் வசீகரமாய் சிரித்தான்.

''விடமாட்டீங்க போலிருக்கே! அப்புறம் என் கண்டிஷன்... நினைவிருக்கில்லே? பொண்ணு கட்டினப் புடவையோட வந்தாப் போதும். இவ்வளவு நகைப் போடுங்க, ரொக்கம் கொடுங்கன்னு கேட்கக் கூடாது.''

''அதான் ஆயிரம் முறை சொல்லிட்டியே... உன்னை மீறி கேட்டுடுவேனா? முதல்ல பாரு...!''

ரஞ்சன் ஒவ்வொரு புகைப்படத்தையும் பார்த்துக் கொண்டே வந்தவன்... அந்தப் புகைப்படத்தின் மீது பார்வை நிலைப் பெற்றது. ஆர்வமாய் பார்த்தான். அந்தப் பெண்ணின் முகம் மனதிற்கு நிறைவைத் தந்தது.

''அம்மா... இந்தப் பெண்ணை பிடிச்சிருக்கு!''

அவன் தந்த புகைப்படத்தைப் பார்த்த வேதாவின் முகமும் மலர்ந்தது.

''எனக்கும் இந்தப் பெண்ணைத்தான் பிடிச்சிருந்தது. பேரென்ன?'' என்றபடி திரும்பிப் பார்த்தவள் ''அனு'' என்றாள்.

* * *

நாராயணனின் உடம்பில் பழைய உற்சாகம் தொற்றிக் கொண்டது.

அவர் பொருளாதாரத்திற்கேற்றபடி வரன் அமைகிறதென்றால் சும்மாவா?

இடம் கவுரவமானதாய் இருந்தால் போதும். திருமணத்தை நல்ல மண்டபத்தில் சிறப்பாய் நடத்தினால் போதும். வேறு எந்த எதிர்பார்ப்பும் இல்லை'' என்று மாப்பிள்ளை வீட்டார் சொன்னதாகத் தரகர் வந்து சொன்னதும்... தாங்க முடியவில்லை ஆனந்தம். இந்த காலத்தில் இப்படியோர் வரனா?



மகேந்திரனும், விமலாவும் பெரிய மனதுப் பண்ணி லீவுப் போட்டுவிட்டு வீட்டில் இருந்தனர்.

அனுவிற்குதான் படபடப்பாய் இருந்தது.

'இப்ப... இந்த கல்யாணம் அவசியம்தானா?' பார்வதியும், இந்திராவும் அவளை அலங்கரித்தனர்.

* * *

கூடம் நிரம்பியிருந்தது.

காபி தட்டை நீட்டிய அனு ரொம்பவே ரஞ்சனைக் கவர்ந்தாள்.

அவளின் பேரழகு கர்வத்தைத் தந்தது.

ஆனால், ரஞ்சனின் உள்ளத்தில் ஒரு சந்தேகம் உதயமானது.

''நான், பெண்ணிடம் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்'' என்றான் தரகரிடம்... ரஞ்சன்.

## 6

ரஞ்சன் அனுவிடம் தனியாக பேசவேண்டும் என்றதும் ''போம்மா... பேசிட்டு வா!'' என்றார் நாராயணன்.

அனுவின் பதட்டம் அதிகமானது.

அவளைவிட அதிக பதட்டம் நாராயணனுக்கு.

நல்ல இடம். நல்லபடி முடிய வேண்டுமே என்கிற கவலை ஒரு பக்கம். தான் சிறைக்குச் சென்ற விஷயத்தை மூடி மறைத்து விட்டிருந்தார். தெரிந்தால் கண்டிப்பாக ஒப்புக் கொள்ள மாட்டார்கள். விசாரித்த வரையில் நேர்மையே சுவாசமாக வாழ்பவன் ரஞ்சன் என்று அறிந்திருந்தார். பொன்னுசாமி கேஸை வாபஸ் வாங்கி விட்டிருந்தாலும்... சிறைச் சென்று வந்தது இல்லையென்றாகி விடுமா?

அனுவின் பின்னேயே ஒரு அறைக்குள் சென்ற ரஞ்சன் சிலை போன்ற அவள் பின்புற அழகை ரசித்தான். நடை அசைவிற்கேற்ப மின்னல் வெட்டியது போல் இடையில் கோடு விழுந்ததில் சொக்கிப் போனான்.

'இந்த அழகு எனக்கே சொந்தமாகப் போகிறதா? இப் போப்பட்ட அழகியை வேறு ஆடவன் கண்களை உறுத் தாமல் இருந்திருக்குமா? காதலிக்கத் தூண்டாமல் தான் இருந்திருக்குமா? அப்படி யாராவது காதலை வெளிப் படுத்தி... இவளும் காதலித்து...

இல்லை... கூடாது... அப்படியிருக்கக் கூடாது. என் மனைவியாக வரப்போகிறவளின் மனதில் என்னைத் தவிர வேறொருவர் நிழல் கூட பதிந்திருக்கக் கூடாது!'

அவன் இயல்பே அதுதான்! புத்திசாலியான ரஞ்சன், நல்ல பல குணங்களைக் கொண்டவன். ஒரே ஒரு சிறு குறை. அதை குறையென்றும் சொல்ல முடியாது. பிறவி குணம். தன் பொருளை தன்னைத் தவிர வேறு யாரையும் தொட விட மாட்டான். தனக்குக் கிடைக்கும் அன்பை வேறு யாரையும் பகிர்ந்து கொள்ள விடமாட்டான். அவ னின் பிடிவாத குணமறிந்துதான் அவனின் பெற்றோர் வேறு குழந்தை பெற்றுக்கொள்ள பயந்து ரஞ்சனுடன் நிறுத்திக் கொண்டனர்.



தன், பேனா, சட்டை, கார், சென்ட் என்று சுயநலமாய் இருந்தான். அப்படிப்பட்டவன் தன் வாழ்நாள் முழுக்க தன்னில் பாதியாக வாழப்போகிற மனைவி விஷயத்தில் எப்படியிருப்பான்?

வெகு நேரம் அவன் மவுனமாய் இருக்கவே, மெல்ல திரும்பி, நிமிராமலேயே 'ம்க்கும்' என்று குரலால் உணர்த்தினாள்.

''நீ... நீங்க... ரொம்ப அழகாயிருக்கீங்க... எ... எனக்கு பிடிச்சிருக்கு... உ... உங்களுக்கு என்னை...?''

''ம்...'' என்று தலையாட்டினாள்.

சிறு கீற்றாய் அனுவின் இதழோரம் புன்னகை நெளிந் தோட... ரஞ்சனுக்கு தைரியம் பிறந்தது.

''என்னைப் பற்றி... நீ... நீ என்றே அழைக்கலாமா?''

''ம்...''

''நன்றி! நீ நல்லாத் தெரிஞ்சுக்கணும். எனக்கு எல்லா விஷயத்திலேயும் சுத்தம் இருக்கணும். நேர்மை இருக் கணும். பொய் பேசினாப் பிடிக்காது. நான் படிச்சவன் தான், நாகரீகமானவன்தான். ஆனா, பெண்கள் குட்டைப் பாவாடையும், ஜீன்ஸும் போட்டா பிடிக்காது உனக்கு...''

''சேலை, சுடிதார் மட்டுமே அணிவேன்!''

''வெரிகுட்! அதே போல் கல்யாணத்துக்கு முன் காதலிக்கிற பெண்களை எனக்குப் பிடிக்காது.''

படக்கென தலை உயர்த்திப் பார்த்தாள்.

''காதல் வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் வரணும். அது கணவன் மனைவிக்கிடையே மட்டும்தான் வர ணும்னு நினைக்கிறவன் நான்!''

வியந்த அனுவுக்கு அவன் மீது மரியாதை அதிகரித்தது.

''பெண் மட்டுமல்ல, ஆணும், சகலத்தையும் துறந்து, கணவனே உலகம்னு தஞ்சமடைகிற மனைவிக்கு பனித்துளி மாதிரியான இதயத்தை தரணும்னு நினைக் கிறவன். எனக்கு காதல் அனுபவம் என்பதேயில்லை... அதேப் போல்...''

''எனக்கும் இல்லை!'' குளிர்ச்சியான பார்வையை வீசியபடி சொன்னாள்.

கண நேரத்தில் ஆயிரம் ரோஜாக்கள் ஒரு சேர மலர்ந்தது போல் பரவசமாய் உணர்ந்தான் ரஞ்சன்.

''இது போதும் அனு! மனசுக்கு நிறைவாய் இருக்கிறது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நம் கல்யாணம் நடக்கணும். அப்புறம், ஒரு முக்கியமான விஷயம்.''

''சொல்லுங்கள்!''

''இப்போது... நீ... செல்வி... அனு! நீ வேலைக்குச் செல்வதை தடையிட முடியாது. ஆனால், திருமணத் திற்குப் பின், என் திருமதி வேலைக்குச் செல்வதை என்னால் அனுமதிக்க முடியாது.''

''உங்கள் விருப்பம்போல் நடந்துக் கொள்கிறேன்!''

இப்போது ரஞ்சன் அவளை குறுகுறுவென காதல் பார்வை பார்த்தான்.

* * *

திருமண ஏற்பாடு துரிதமாக நடந்தது. வேலைக்குச் செல்ல வேண்டாம் என்று பெற்றோர் தடுத்தும், அவர்களைச் சமாளித்து, சமாதானப்படுத்தி அலுவலகம் சென்றாள் அனு.



காரணம்... ரஞ்சனிடமிருந்து வரும் போன்.

திருமணத்திற்கு இன்னும் இரண்டு மாதம் இருந்தது. மாப்பிள்ளை வீட்டார் எதிர்பார்த்தபடி வசதியாய் மண்டபம் பார்த்து அட்வான்ஸ் கொடுத்து விட்டார் நாராயணன்.

கணவனுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள் பார்வதி.

''மோர் விடட்டுமா?'' என்றாள்.

''வேணாம்... போதும்!'' தட்டிலேயே கையைக் கழுவி விட்டார்.

''என்னங்க இது? சரியாக் கூட சாப்பிடலே? வெறும் சாம்பார் சாதத்தோட எந்திரிச்சிட்டீங்க?''

''சாப்பாடே இறங்கலே பார்வதி. கல்யாண நாள் பாட்டுக்கு நெருங்கிட்டிருக்கு. பணப்பற்றாக்குறையா இருக்கு. இருந்தப்ப நான் அள்ளிக் கொடுத்தேன். ஆனா, இப்ப... என்னை நம்பி எவனும் கடன் தரமாட்டேங் கிறான்.''

''வங்கியிலேதான் ஒரு லட்சமிருக்கே... போதாதுங் களா?''

''புரியாமப் பேசறியே... ஒரு லட்சம் எந்த மூலைக்கு? மண்டபத்துக்கும் விருந்துக்குமே சரியாப் போய்டும்.''

''மாப்பிள்ளை வீட்டுக்காரங்கதான் எதுவுமே எதிர் பார்க்கலேன்னு சொன்னாங்களே! வேற என்ன செல விருக்கு?'' ஓரளவு நகையும் சேர்த்து வச்சிருக்கோம்!''

''அதுக்காக அப்படியே அனுப்பிட முடியுமா? அனு நம்ம பொண்ணு. அருமையான பொண்ணு. இது வேணும், அது வேணும்னு ஆசைப்பட்டு இதுவரை எதையும்

கேட்டதில்லே. பெத்தவங்களை தெய்வமா நினைச்சு ஊழியம் செஞ்சப் பொண்ணு. குடும்ப சுமையை பகிர்ந்துக்கனும்னு வேலைக்குப் போனப் பொண்ணு. அவளை நிறைஞ்ச மனசோட புகுந்த வீட்டுக்கு அனுப்பறது நம்ம கடமை பார்வதி. கொஞ்சமாவது சீர் சாமான் வாங்க வேண்டாமா? மாப்பிள்ளை, பொண்ணுக்குன்னு பட்டு எடுக்க வேண்டாமா?''

''நீங்க சொல்றதும் சரிதான்! இப்ப என்னங்க பண்றது?''

''ஒண்ணும் புரியலே... இன்னும் ஒரு லட்சம் தேவைப் படும்.''

''அந்த பாழாப்போன பொன்னுசாமி அம்பதாயிரம் தான் கடன் வாங்கினேன்னு பொய் சொன்னானே... அதை யாவது கேட்டு...''

''அதையும் ஒரு வருஷம் கழிச்சுதான் தருவேன்னுட் டான். விடு... யார் கால்லேயாவது விழுந்து கடன் வாங் கறேன்!''

''ஏங்க... நம்ம மகேந்திரன் கிட்டே கேட்டா என்ன?''

''போயும்... போயும் அவன்கிட்டேயா? கொடுக்கிற மனசுள்ளவனாயிருந்தா... இப்படி வேடிக்கைப் பார்த்துக் கிட்டிருப்பானா? வாயை மூடுவியா?'' அலட்சியமாய் முறைத்து விட்டு அகன்றார்.

* * *

அந்த அலுவலகத்தின் உள் அலங்காரத்திற்காகவே சில லட்சங்கள் இறைக்கப்பட்டிருந்தன என்பது பார்த்த மாத்திரத்தில் புரிந்தது.

வெளிநாட்டு நிறுவனத்தினருடன் சேர்ந்து இயங்கும் வியாபாரம் என்பதால்... லாபம் கொட்டியது. அங்கு பணி



புரிபவர்களுக்கும் நிறுவனம் எந்தக் குறையும் வைக்க வில்லை. தாராளமாய் சம்பளம் கொடுத்தனர். பெண்கள் மட்டும் அனுவுடன் சேர்த்து பனிரெண்டு பேர் பணி புரிந்தனர். அனைவரும் நல்ல நட்புடன் பழகினர். இரண்டு மாதத்தில் அவர்களை எல்லாம் பிரியப் போகி றோமே என வருத்தப்பட்டாள்.

கம்ப்யூட்டரின் முன்பு அமர்ந்து தீவிரமாய் எதையோ ஆராய்ந்து கொண்டிருந்தவளை போன் அழைத்தது.

''அலோ...!''

''அலோ... ரஞ்சன் பேசறேன்!''

''ம்... தெரியுது!''

''என் போனுக்காகவே காத்திட்டிருந்தே போலிருக்கே?''

''அ... அப்படியெல்லாமில்லே...!''

''இரவு நல்லா தூங்கினியா? இல்லே நான் கனவிலே வந்து சில்மிஷம் பண்ணினேனா?''

''அய்யோ... என்னயிது... தப்பு தப்பா பேசிக்கிட்டு?''

''இது தப்பா? நான் உன்னைக் கல்யாணம் பண் ணிக்கப் போகிறவன்தானே?''

''ஆனாலும்... தப்புதானே?''

அவளின் வெகுளித் தனத்தை வெகுவாய் ரசித்தான். அவள் மீது காதலும் அதிகரித்துக் கொண்டே சென்றது.

''உன்னைப் பார்க்கனும் போலிருக்கு அனு? கோவி லுக்கு வர்றியா சந்திக்கலாம்?''

''அ... அதெல்லாம் வேண்டாம். வீட்டுக்குத் தெரிஞ்சா நான் அவ்வளவுதான்!''

"சரி... வீட்டுக்கு வந்து பார்க்கட்டுமா?"

"வாங்க... பெரியவங்க கிட்டே பேசிட்டுப் போங்க. நான் பேச மாட்டேன்!"

"உன்னை கட்டிக்கிட்டு என்ன பாடுபடப் போகிறேனோ? நீதான் என் மனைவின்னு முடிவு பண்ணியாச்சு. அதனால நாளுக்கு நாள் உன் மேல் காதல் அதிகமாய்ட்டேப் போகுது அனு."

"...........?"

"ஏதாவது பேசேன்!"

"எ... என்ன பேசணும்?"

"பேசவேணாம். ஒரு முத்தம் தா!"

"ச்சீ...!" முகம் சிவந்தாள்.

"ஏய்... வெக்கப்படறியா?"

"ம்...!"

"நீயும் என்னைக் காதலிக்கிறேதானே?"

"ம்...!"

"உனக்கு இன்னைக்கு ஒரு தபால் வரும். உருகி... உருகி எழுதியிருப்பேன். அதுக்கு பதில் அனுப்பணும். காத்திருப்பேன்!"

"நானா?"

"பின்னே? இதோ பார்! பேசத்தான் வெக்கப்படறே? கடிதமாவது தைரியமா எழுது. உன் கடிதம் வந்த பிறகு தான் இனி நான் போன் பண்ணுவேன்!" என்று போனை வைத்து விட்டான்.

தவித்துப் போனாள் அனு.



'கடிதம் எழுதுவதா? நானா கையெழுத்து அசிங்கமாய் இருக்குமே!'

அடுத்த அரைமணி நேரத்தில் ரஞ்சன் அனுப்பியிருந்த கடிதம் அவள் கைக்கு வந்து சேர்ந்தது. ஆவலாய் பிரித்தவள் முத்து முத்தான அவன் கையெழுத்தைக் கண்டு பிரம்மித்துப் போனாள்.

உள்ளக் கிடக்கைகளை, ஏக்கங்களை... வார்த்தைகளால் வசீகரம் சேர்த்திருந்தான்.

தான் மிதப்பது போல் உணர்ந்தாள் அனு.

காதலிக்கப்படுவதே கர்வமான விஷயம்தான். அதுவும் நல்ல குணமுள்ள இளைஞனால், அவன் முதன் முதலாய் ஆராதிக்கப்படும் பெண்ணாய் இருந்து விட்டால்... மகிழ்ச்சிக்கு அளவேது?

அவனைப் போலவே... அவன் குணத்தைப் போலவே கையெழுத்தும் அழகுதான்!

அவளுக்கும், பதில் எழுத இதயம் அடம் பிடித்தது.

"என்ன எழுதுவது? எப்படி எழுதுவது? என் கையெழுத்து கோணல் மாணலாய்... பார்க்கவே சகிக்காதே! எழுதா விட்டால் போன் பண்ண மாட்டாரே! அவர் குரல் கேட்காமல் என்னால் இருக்க முடியாதே!"

"என்ன பண்ணலாம்?"

யோசித்தவளுக்கு அந்த எண்ணம் தோன்றியது.

அலுவலக முகவரி அச்சிடப்பட்டிருந்த வெள்ளைப் பேப்பரை எடுத்து பிரிண்டரில் செருகி... பட்டனை தட்ட ஆரம்பித்தாள்.

* * *

கதிரவன் சுட்டெரித்த களைப்பில் ஓய்வெடுக்க மேற்குப் புறமாய் இடம் தேடினான்.

மிதுன் தன் காரை வேகமாய் செலுத்திக் கொண்டிருந்தான்.

ஆறு மணிக்கு ஓட்டல் ரெசிடென்ஸியில் மீட்டிங் இருந்தது.

மணிக்கட்டை திருப்பி நேரத்தைப் பார்த்தவன்... வலது பக்கமாய்... பிரிந்த ரோடில் காரை வளைத்து வேகப்படுத்துவதற்கும்...

எதிரே வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மேலே மோதுவதற்கும் சரியாய் இருக்க...

அதை ஓட்டிக் கொண்டு வந்த பெண் தூக்கி எறியப் பட்டாள்.

## 7

சகலமும் நடுங்கிப் போயிருந்தான் மிதுன்.

கைனடிக் ஒரு புறமும், அந்த இளம் பெண் ஒரு புறமுமாய் வீழ்ந்து கிடக்க... பதறி, காரை விட்டு இறங்குவதற்குள் கூட்டம் சேரத் துவங்கியது.

''அடடா... விபத்து!''

''பொண்ணுக்கு அடிபட்டிருக்கு.''

''செத்துப் போய்ட்டா போலிருக்கு!''



''காரை நல்லா குடிச்சிட்டு ஓட்டிட்டு வந்திருக்கான்!''

ஆளாளுக்குப் பேச...

மிதுன் அவளை நோக்கி ஓடினான்.

தரையெங்கும் ரத்தம் பரவிக் கொண்டிருக்க, குப்புற வீழ்ந்து கிடந்தாள்.

அவளை மெல்லத் திருப்பியவன்...

உச்சமாய் அதிர்ந்தான்.

'இவளா?' பதட்டம் கூடியது. அவளை அப்படியே அள்ளிக் கொண்டான்.

''என்ன சார்? கண் மண் தெரியாம வண்டி ஓட்டிட்டு வந்து மோதி... இப்ப இந்தப் பொண்ணை எங்கே தூக்கிட்டுப் போறீங்க? போலீஸ் வரட்டும்... பதில் சொல்லிட்டுப் போங்க!'' என்றான் ஒருவன்.

மிதுன் அவளை காரின் பின் சீட்டில் கிடத்தினான்.

மறக்காமல் அவள் கைப்பையை எடுத்துக் கொண்டான். தன் விசிட்டிங் கார்டு எடுத்து அந்த நபரிடம் நீட்டினான்.

''போலீஸ்காரங்ககிட்டே இந்த கார்டை கொடுத்திடுங்க. மலர் ஆஸ்பத்திரியிலேதான் இருப்பேன். நான் அவர் கிட்டேயே பதில் சொல்லிக்கிறேன்!'' கூறிவிட்டு காரை சீற விட்டுப் பறந்தான்.

* * *

மிதுனின் மனசு முழுக்க வேதனை அப்பிக் கிடந்தது.

எவளை மீண்டும் காண மாட்டோமா? கண்ணில் விழ மாட்டாளா? என்று அல்லும் பகலும் காத்திருந்தானோ,

அவள் மீது கார் மோதி ரத்த சகதியில் அந்த மயிலை காணும் துர்பாக்கிய சூழ்நிலை வரும் என்று எதிர்பார்க்க வில்லை.

அவள் யார்? பெயர் என்ன? எங்கிருக்கிறாள்? எதுவுமே தெரியாது. அவள் கைப்பையை ஆராய்ந்தான். நான்கு நூறு ரூபாய் நோட்டுகளும், சில்லரை நாணயங்களும் இருந்தன. ஒரு செல்போன் இருந்தது. மற்றபடி எதுவும் இல்லை.

பார்க்க படித்த பெண்ணாய் இருக்கிறாள். பையில் விலாச அட்டை வைத்திருப்பது அவசியமான ஒன்று என்று தெரியாதா?

உடனடியாக போன் செய்து மீட்டிங்கை கேன்சல் செய் தான். காவல்துறை உயர் அதிகாரியை நன்கு தெரியும். அவருக்கும் தொடர்பு கொண்டு நடந்தவைகளை தெரியப் படுத்தினான்.

அப்போது... பையிலிருந்த மாலினியின் செல்போன் அலறியது.

திரையில் 'வாஸந்தி' என்ற பெயர் பளிச்சிட்டது.

எடுத்துப் பேசினான்.

''அலோ...''

''அ... அலோ... யார்... யார் பேசறது?'' எதிர் முனையில் வாஸந்தி பயந்து போய் அலறினாள். ஆண் குரலை கேட்டு.

''அலோ மேடம்... பதறாதீங்க. என் பெயர் மிதுன். இந்த போனுக்கு உரிமையுள்ள பெண் வண்டியில் வரும்போது என் கார், வண்டி மீது மோதி...''

''அய்யோ...!''



''பதறாதீர்கள். பயப்படும் அளவிற்கு ஏதுமில்லை. அடி கொஞ்சம் பலமாகப் பட்டு விட்டது. இன்னும் மயக்கம் தெளியவில்லை!''

''பார்த்து ஓட்ட மாட்டீர்களா? பாவம் என் மாலினி. அவளுக்கு மட்டும் ஏதாவதொன்றானால் நான் உங்களை சும்மா விடமாட்டேன்.''

''மேடம்... எனக்கும் உங்கள் தோழி மீது அக்கறை யிருக்கிறது. அதே சமயம் உங்கள் கோபம் நியாயமானது. என்னை திட்ட வேண்டுமென்றால் நேரில் வந்து திட்ட லாமே! மலர் ஆஸ்பத்திரிக்கு வந்து விடுங்கள். உங்கள் தோழியைப் பற்றிய விபரங்கள் தேவைப்படுகிறது.''

* * *

''**சார்!**'' நர்ஸ் அவன் முன் வந்து நின்றாள்.

''அவங்க எப்படியிருக்காங்க சிஸ்டர்?''

''பயப்பட ஒண்ணுமில்லே... இன்னும் கொஞ்ச நேரத் துல அவங்க மயக்கம் தெளிஞ்சிடுவாங்க. டாக்டர் உங்களை வரச் சொன்னார் சார்!''

மிதுன், மாலினி அனுமதிக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்றான்.

மாலினியை பரிசோதித்து முடித்த டாக்டர் இவனைப் பார்த்ததும் சிநேகமாய் புன்னகைத்தார்.

''வாங்க மிதுன்!''

''இப்ப எப்படியிருக்காங்க டாக்டர்?'' என்றபடி மயக் கத்தில் ஆழ்ந்திருந்த மாலினியை கவலையுடன் பார்த்த படி கேட்டான்.

தலையில் பெரிய கட்டு. கன்னத்திலும், கையிலும் சிறாய்ப்பு. மூடியிருந்த இமைகள் நீளநீளமாய் விறைத்து

பட்டாம்பூச்சி அமர்ந்திருந்தாற்போல் மாயையை ஏற் படுத்தியிருந்தது. மயக்கத்தில் இருந்தாலும் முகத்தின் கனிவும், சிறு முறுவலும் உறைந்திருந்தன. தலைமுடி அலையலையாய் தலையணையில் பரவியிருந்தது.

அவளை அப்படிப் பார்க்கையில் நெஞ்சை கத்தியால் கீறியது போல் வலித்தது.

''கவலைப்பட ஒன்றுமில்லை மிதுன். தலையில் தான் சற்றே ஆழமான காயம். விழுந்த இடத்தில் கல் போன்ற கூர்மையான பொருள் இருந்திருக்கும். எட்டு தையல் போட் டிருக்கிறேன். ஆனாலும், குறைந்தது நான்கைந்து நாட்கள் இங்கே தங்கியிருப்பது அவசியம். அப்புறம், இந்தப் பெண்ணைப் பற்றிய தகவல் ஏதும் கிடைத்ததா மிதுன்?''

''கிடைத்தது டாக்டர். பெயர் மாலினி. இந்தப் பெண்ணின் தோழியின் பெயர் வாஸந்தி. அந்தப் பெண் இன்னும் சற்று நேரத்தில் வந்து விடுவார். அதன் பின் தான் முழு விபரமும் தெரிய வரும்.''

''அந்தப் பெண் வந்தால் என் அறைக்கு வரச் சொல் லுங்கள்.''

''கண்டிப்பாக!''

டாக்டர் அகன்றதும், மாலினியின் அருகில் நாற் காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

'மா...லி...னி! என்ன அழகான பெயர்? நீ யாரென்றேத் தெரியாமல், உன்னைப் பார்க்கும் முன்பே உன்னை என் உயிர் தேடிக் கொண்டிருந்தது. என்றால் நம்புவாயா மாலினி? ஆனால், உன்னை ரத்தக் காயத்துடனா சந்திக்க வேண்டும்? மனசு ஆறவில்லை கண்ணே! என்னை மன்னிச்சிடு. என்னால் தானே உனக்கு வேதனை?'



அவள் திருமணமாகாதவள் என்பதை கழுத்தையும், காலையும் பார்த்து உணர்ந்தான்.

நெகிழ்ச்சியுடன் அவள் நெற்றியில் விழுந்த கூந்தலை ஒதுக்கினான்.

மாலினியிடம் ஒரு சிறு அசைவு பிறந்தது. நெற்றி சுருங்கி, இமைகள் அசைந்தன.

குப்பென மலர்ந்தான் மிதுன்.

அடுத்த சில நொடிகளில் கண்களைத் திறந்தாள்.

தலையின் பாரம், வலி, சூழ்நிலை, மருந்து நெடி... என குழப்பமாய் உணர்ந்தவள்... தன்னருகே... தன்னையே ஆவலாய் பார்த்துக் கொண்டிருந்த முற்றிலும் அறிமுக மில்லாத அந்த புதிய இளைஞனைப் புரியாமல் நோக்கி னாள்.

''மிஸ்.மாலினி... உங்களுக்கு ஒன்றுமில்லை. நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள்!'' என்றான்.

'என் பெயர் இவனுக்கு எப்படித் தெரியும்?' இன்னும் குழம்பினாள்.

மிதுன் உடனே டாக்டரை அழைத்து வந்தான்.

ஓரளவு மாலினிக்கு தான் விபத்தில் தூக்கியெறியப் பட்டது நினைவிற்கு வந்தது.

டாக்டர் வந்தார்.

''எப்படி உணர்கிறீர்கள் மிஸ்.மாலினி?''

''தலை வலிக்கிறது டாக்டர்'' என்றவள் மிதுனின் முகத்தை கேள்விக்குறியோடு பார்த்தாள்.

''என்னை மன்னிச்சிடுங்க மிஸ். மாலினி! என்னோட கார்தான் உங்கள் வண்டிமேல் மோதி...''

''இல்லை சார்! தவறு என் மீதுதான்! நான்தான் குழப்பத்துடன் வண்டியை... ப்பா... வலிக்குது!'' என்று தலையை பிடித்துக் கொண்டாள்.

''ஓய்வெடுங்க... பேசாதீங்க... நர்ஸ்...'' என்று அழைத்தார் டாக்டர். தூங்குவதற்கு ஒரு ஊசியைப் போட்டார்.

வாஸந்தி அரக்கப் பரக்க ஓடி வந்தாள். தோழியைப் பார்த்து அழுதாள். மிதுனை ஆத்திரம் தாளாமல் திட்டினாள்.

''என்ன சார்... பணக்கார திமிரா? பாருங்க என் மாலினியைப் பாருங்க...''

''வாஸந்தி... ப்ளீஸ்... அவரைத் திட்டாதே! என் கவனக் குறைவாலதான் இந்த விபத்து நேர்ந்தது. என் வண்டியில் பிரேக் பிடிக்கவில்லை'' என்று மாலினி சொன்னது மிதுனுக்கே புது தகவலாய் இருந்தது.

''சாரி... சார்!'' என்றாள் வாஸந்தி.

ஆனால், அந்த தகவல் பொய் என்பதை மாலினி மட்டுமே அறிவாள். மிதுனின் முகத்தில் இருந்த மனித நேயம் அவளுள் மரியாதையை தோற்றுவித்திருந்தது.

பேசிக் கொண்டிருக்கும்போதே... மாலினியின் விழிகள் உறக்கத்தில் சொருகின.

* * *

''அலோ...!'' ரஞ்சனின் கரகரப்பான, கம்பீரமான குரல் காதில் பாய்ந்த வேகத்தில் அனுவின் உடல் சிலிர்த்தது.

''ம்... சொல்லுங்க!''

''என்ன அனு இப்படி ஏமாத்திட்டே?''

''ஏமாத்திட்டேனா? நான்தான் கடிதம் அனுப்பினேனே!''

''அனுப்பினே சரி. உன் கையால எழுதி அனுப்பி இருக்கலாமே? அதுலேதான் ஒரு கிக் இருக்கும்.''



''ஊகூம் மாட்டேன். என் கையெழுத்து நல்லாயிருக்காது... கிண்டல் பண்ணுவீங்க!''

''பண்ணமாட்டேன்... எழுது!''

''வற்புறுத்தாதீங்க!'' என்றாள் தயவாய்.

அதற்குமேல் ரஞ்சனுக்கும் வற்புறுத்த மனம் வரவில்லை.

நேற்றுக் கூட கனவில் வந்து என்னை எப்படியெல்லாம் ஆட்டிப் படைத்தாய் தெரியுமா?''

''என்ன பண்ணினேன்?''

''நான் குளிக்கும்போது என் முதுகில் சோப்பு போட்டு...''

''ச்சீய்...''

''ஏய்... என்ன ச்சீய்? கல்யாணமாகிட்டப் பிறகு, நீதான் என்னை தினமும் குளிப்பாட்டி, உடையுடுத்தி...''

''அய்யோ... நான் மாட்டேன்!'' வெட்கத்திலும், பயத்திலும் உடல் தூக்கி வாரிப் போட்டது.

ரஞ்சன் ரசித்துச் சிரித்தான்.

அவர்களின் தினசரி நாட்கள் ஏக்கமும், வெட்கமும், பயமும், விளையாட்டுமாய் கழிந்தது. ரஞ்சன் மட்டுமல்ல, அனுவும் தன் வருங்கால கணவனை உயிருக்குயிராய் நேசித்தாள். ஒவ்வொரு நிமிடமும் அந்தக் காதல் விலைவாசிப் போல் அதிகரித்துக் கொண்டேச் சென்றது. திருமண நாளுக்காக, கொக்கைப் போல் காத்திருந்தனர்.

* * *

நர்ஸ் உடல் துடைத்து, உடைமாற்றியிருந்தாள். காயங்கள் ஆறத் துவங்கியிருந்ததால்... கட்டிலில் சாய்ந்தமர்ந்திருந்த மாலினி படித்துக் கொண்டிருந்த புத்தகத்திலிருந்து அடிக்கடி கண்கள் விலகி வாசலைப் பார்த்தாள்.

'மிதுன் வருகிற நேரம் இது!'

'ஏன் இன்று இன்னும் வரவில்லை?'

அவள் நினைத்து முடிக்கவில்லை. ஜீன்ஸ், ஜிப்பா சகிதம் கம்பீரமாய் நடந்து வந்து கொண்டிருந்தான் மிதுன்.

அவனைக் கண்டதும் ரத்த ஓட்டம் துரிதமாயின.

இந்த நான்கு நாட்களும் மிதுன் அலுவலகம் செல்லாமல் மாலினி எவ்வளவு சொல்லியும் கேளாமல் அருகிலிருந்து கவனித்துக் கொண்டான்.

''ஏன் சார் உங்களுக்குத் தொந்தரவு? நர்ஸ் இருக்காங்க. பார்த்துக்குவாங்க!''

''எனக்கு எந்த தொந்தரவுமில்லை மாலினி. வாகனத்தில் சென்று கொண்டிருந்த மயிலை இப்படி ஆஸ்பத்திரியில் படுக்க வச்சிட்டேனே! மனதை உறுத்துகிறது'' என்றான்.

மிகப் பெரும் பணக்காரனாயிருந்தாலும் அவனின் மென்மையான, அருமையான குணம் அவன் மீது பெரும் மரியாதையை உண்டாக்கி இருந்தது.

இப்போதெல்லாம் ஒரு குழந்தையைப் போல் அவன் வருகைக்காக காத்திருந்தாள். இதுவரை பார்த்தேயிராத தாயை அவன் முகத்தில்தான் பார்த்திருந்தாள்.

''வாங்க சார்!''

''நீங்கள் இப்படி அமர்ந்திருப்பதைப் பார்க்கும்போது ரொம்ப சந்தோஷமாயிருக்கிறது. இன்றைக்கு வீட்டிற்குப் போய் விடலாம் என்று டாக்டர் சொல்லி விட்டார்'' என்றான் மிதுன்.

சட்டென மாலினியின் முகம் வாடியது.



'வீடா? எனக்கேது வீடு?'

''என்னாச்சு?''

''ஒ... ஒண்ணுமில்லே!''

''பணம் கட்டிட்டு வந்திடறேன்!''

சென்றவனின் முதுகையே பார்த்திருந்தாள் மாலினி.

இந்த நான்கு நாட்களில் அவர்கள் நட்பு இறுகியிருந்தது. அவளொரு அனாதை, தொட்டில் குழந்தையாய் ஆசிரமத்தில் கண்டெடுக்கப்பட்டு, கருணை உள்ளங்களால் வளர்க்கப்பட்டு, ஆளாக்கப்பட்டவள் என்று அறிந்த பின்பு மிதுனின் அன்பு அதிகரித்திருந்தது.

புண்பட்டிருந்த மாலினிக்கு அவனின் நட்பு இதமாயிருந்தது.

'இன்றுடன் ஆஸ்பத்திரி வாசம் முடிகிறது. இனி மிதுனைப் பார்க்க முடியாதா?'

தன்னுள் கேள்வி... எழ, திடுக்கிட்டாள் மாலினி.

'என்னாச்சு எனக்கு? நானா இப்படி நினைக்கிறேன்?' குளத்தில் விழுந்த கல்லாய் மனம் கலங்கினாள்.

# 8

''சார்... உங்களைப் பார்க்க உங்கம்மா வந்திருக்காங்க.'' என்றான் பியூன்.

வாடிக்கையாளர்களுக்கு என்ட்ரி போட்டுவிட்டு டோக்கன் கொடுத்துக் கொண்டிருந்த மகேந்திரன் கண்கள் சுருங்கப் பார்க்கான்.

''அம்மாவா?''

''ஆமா சார்... கூட்டம் நிறைய இருக்குன்னு வாசல் லேயே நிக்கறாங்க. கூப்பிட்டும் உள்ளே வரலே!''

''ரகுராமா... கொஞ்சம் இந்த பாஸ்புக்கை கவனி... இதோ வந்திடறேன்!'' பக்கத்தில் அமர்ந்திருந்த சக ஊழியரிடம் கெஞ்சலாய் கூறிவிட்டு எழுந்தான்.

அடுத்த நாள் விடுமுறை என்பதால் வங்கியில் கூட் டம் அதிகமிருந்தது.

அணிந்திருந்த ரவிக்கை வியர்வையில் நனைந்து உடலோடு ஒட்டியிருந்ததால்... சேலைத் தலைப்பால் உடம்பை போர்த்தியபடி வாசலில் ஒரு ஓரமாய் நின்றிருந் தாள் பார்வதி.

''என்னம்மா... இங்கே வந்திருக்கே?'' என்றான் வியப் பாய்.

இதுவரை அவனைத் தேடி வீட்டிலிருந்து யாரும் வந்ததில்லை.

''சு... சும்மாதான்!'' சங்கடமாய் சிரித்தபடி முகத்தை தலைப்பால் துடைத்தாள்.

உடம்புக்கு முடியாதப்ப எதுக்கு வெயில்லே அலை யறே? வீட்டிலே வச்சு பேச முடியாத விஷயமா? சொல் லும்மா... என்ன விஷயம்?''

சட்டென கைகூப்பி... கண் கலங்கினாள்.

''விளக்கேத்து மகேந்திரா... அனு வாழ்க்கையிலே விளக்கேத்து!''

''அ...ம்...மா!''

''அப்பா மேலே உனக்கு கோபமிருக்கலாம். ஆனா, உங்கப்பா ரொம்ப நல்லவர்டா. ரெண்டு பொண்ணுங்களை



கரையேத்தணுமேனு நம்பக்கூடாதவங்களை நம்பி மோசம் போய்ட்டார். அதனால பாதிக்கப்பட்டது யார்? உன் மேலே பாசம் வச்சிருக்கிற அனுதான். இந்திராவுக்கு இப்ப அவசரமில்லே. உழைச்சி கரையேத்தலாம். ஆனா, அனு?''

''.........?!''

''நீரடிச்சு நீர் விலகுமா? அப்பா பேசினதை மனசிலே வச்சுக்காதே மகேந்திரா. அனுவோட கல்யாணத்துக்காக ஏறக்கூடாதப் படியெல்லாம் ஏறி கையேந்தறார். கிடைக் கலே. இப்படியொரு நல்ல இடம் மறுபடி கிடைக்குமா? அவளை கரையேத்த கைகொடுத்து உதவு மகேந்திரா. உரிமையிலே கேட்கலே.. கெஞ்சிக் கேக்கறேன். என் பொண்ணை வாழ வை!''

''கண்ணைத் துடைம்மா முதல்ல! அப்பாதான் என்னைத் தப்பா புரிஞ்சுக்கிட்டார்னா... நீயுமா?''

''ம..கே..ந்..தி..ரா!''

''அனு உங்களுக்கு பொண்ணுன்னா... எனக்கு யாரு? அவ வாழ்க்கையிலே எனக்கும் அக்கறையிருக்கும்மா! சொந்தமா வீடு வாங்கணும்னு என்னோட கனவு. வாடகை வீட்லே எவ்வளவு நாள்தான் வாழ்க்கையை ஓட்ட முடியும்? சீக்கிரம் சம்பாதிக்கலாம்னுதான் ஷேர் ஆட்டோ வாங்க நினைச்சேன். அப்பாவை பணம் கேட்டேன். கிடைக்கலே. என்னை நம்பலே! யோசிச்சுப் பார்க்கறப்ப அப்பாவோட கோணத்துல அவரோட எச்சரிக்கை உணர்வு சரிதான்னு தோணுச்சு. மறுபடி அவர் வேலைக் குப் போறது எனக்கே கஷ்டமாதான் இருக்கு. நான் போக வேணாம்னு சொன்னா மட்டும் கேட்கவாப் போறார்?

அனுவுக்கு கல்யாணம் முடிவானதுமே அலுவலகத்திலே லோன் போட்டுட்டேன். ரெண்டு நாள்ல கிடைச்சிடும். ஏற்கனவே நிறைய லோன் வாங்கிட்டேன். அதனால எழுபத்தஞ்சாயிரம்தான் கிடைக்கும். வெளியில இருபத்தஞ்சாயிரம் கடன் வாங்கித் தர்றேன்!''

''பகவானே...!'' சந்தோஷத்தில் மூச்சடைக்க, ஆனந்தக் கண்ணீருடன் மகனைப் பார்த்துச் சிரித்தாள் பார்வதி.

''என் வயித்திலே பார் வார்த்திட்டே மகேந்திரா!''

''விஷயம் தெரிஞ்சு விமலா கொஞ்சம் சத்தம் போடுவா. கண்டுக்காதீங்க. பணத்தை உன்கிட்டே கொடுத்திடறேன். நீயே அப்பாக்கிட்டே கொடுத்துடு!''

''ஏன்... நீயே அவர்கிட்டே கொடேன்!''

''வேணாம்மா... அவருக்குதான் சங்கடம்.''

ஐந்து விரல்களும் ஒன்று போல் இருப்பதில்லைதான்! ஆனால் ஊறி திளைத்திருப்பதென்னவோ ஒரே ரத்தத்தில் தானே?

பெரும் பாரம் ஒன்று சட்டென்று காணாமல் போயிருந்தது பார்வதிக்கு.

* * *

**மா**லினிக்கு ஆர்லிக்ஸ் கலக்கிக் கொடுத்தாள் வாஸந்தி.

''இவ்வளவு வேணாம் வாஸந்தி. பாதி போதும்!''

''உடம்பிலேர்ந்து எவ்வளவு ரத்தம் போயிருக்கு தெரியுமா? மறுபடி எப்ப சேர்க்கறது? ஒழுங்கா எல்லாத்தையும் குடி!'' செல்லமாய் அவள் தோளில் ஒரு அடி அடித்தாள்.

''நாளைக்கு அலுவலகம் போகலாம்னு இருக்கேன்.''



''என்ன விளையாடறியா? உடம்பு இன்னும் முழுசாத் தேறலே... ஒரு வாரம் போகட்டும்!''

''புரியாமப் பேசறியே. இந்த அலுவலகத்திலே சேர்ந்து இருபது நாள்தான் ஆகுது. நீண்ட விடுப்பெல்லாம் எடுத்தா... ஒரேயடியா போய்ட்டு வாம்மான்னு அனுப்பி வச்சிடுவாங்க! மறுபடி ஒரு வேலையைத் தேடி செட்டில் ஆகறதெல்லாம்... சாமானியமான விஷயமா?''

''உன்னை இப்படி உட்கார வெச்சாரே மிதுன்... அவர் நினைச்சா... இதைவிட சிறப்பா, அதிக சம்பளத்திலே ஒரு வேலை ஏற்பாடு பண்ண முடியுமே... அவரைக் கேட்டுப் பாரு!''

''சேச்சே... என்ன பேசறே வாஸந்தி! அவர் என்னமோ பெரிய குற்றம் செய்த மாதிரியும், அதுக்குப் பரிகாரமா இம்மாதிரியான உதவிகளைச் செய்தாகணும்ங்கற மாதிரி பேசறே! மிதுன் ரொம்ப நல்லவர் வாஸந்தி. நான்தான் ஏதோ யோசனையில் வேகமா கார் மீது மோதிட்டேன். ஆனா, அதுக்காக ஆஸ்பத்திரியிலே அப்படி இப்படி நகராம பக்கத்திலேயே இருந்துப் பார்த்துக்கிட்டாரே... அதிலிருந்து அவருடைய மனித நேயம் புரியலியா? பல வர்த்தக நிறுவனங்களுக்கு உரிமையாளர். நேரப் பற்றாக் குறையுடன் காலில் சக்கரத்தை கட்டிக் கொண்டு பறக்கிற ஜாதி. எனக்காக அவர் செலவழித்தது மணிக்கணக்கல்ல... நாள் கணக்கு!''

''குற்ற உணர்வு... உறுத்துது... செலவழித்தார். அவ்வளவுதான். அதுவும்கூட விளம்பர நோக்கம்தான். ஆஸ்பத்திரியில் அந்த பணக்கார தொழிலதிபரைப் பற்றி பெருமையாகப் பேசிக் கொள்ள வேண்டுமே... அதற்காகத்தான். மனித நேயமிக்கவராயிருந்தால் உன்னை இங்கு வந்து பார்த்திருக்க வேண்டாமா?''

''உன் எதிர்பார்ப்பு மிக அதிகம் வாஸந்தி!''

''மாலினி உன்னைத் தேடி மிதுன் என்பவர் வந்திருக் கிறார். சீக்கிரம் வா!''

அறைக்குள் தலையை மட்டும் காட்டி தகவல் சொல்லி விட்டுப் போனாள் சௌதாமினி.

மாலினி, 'இப்ப என்ன சொல்லுகிறாய்?' என்பதுபோல் பார்த்தாள் வாஸந்தியை.

இதென்ன பெரிய விஷயம்? என்பதுபோல் பார்த்து விட்டு மாலினியைப் பின் தொடர்ந்தாள்.

வரவேற்பறையில் காத்திருந்த மிதுன் இவர்களைப் பார்த்ததும் எழுந்து நின்றான்.

''வணக்கம் சார்!'' என்றாள் மாலினி.

''வணக்கம். இப்போது எப்படியிருக்கிறது உடம்பு?''

''நாளைக்கு அலுவலகம் செல்லும் அளவிற்கு!''

''என்னது... நாளைக்கு அலுவலகம் செல்கிறீர்களா?''

''இதற்கேன் இத்தனை அதிர்ச்சி?''

''அதிராமல் உடம்பிலிருந்து எவ்வளவு ரத்தம் வெளி யேறி இருக்கிறது தெரியுமா? கண்டிப்பாக நீங்கள் ஒரு மாதமாவது முழு ஒய்வில் இருக்க வேண்டும் மாலினி.''

''கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் முடிகிற காரியமா சார்? இந்த வேலைக்கு சேர்ந்து முழுதாய் ஒரு மாதம் கூட ஆகவில்லை... பிறகெப்படி?'' என்றான் புன்னகை மாறாமல்.

''யோசிக்காமல் இருப்பேனா? பிடியுங்கள்!'' என்றபடி பழுப்பு நிற கவர் ஒன்றை நீட்டினான்.

''என்ன இது?''



''அடுத்த மாதம்... எங்களது கிளை நிறுவனத்தில் பணிக்கு சேர்வதற்கான நியமனக் கடிதம்!''

''சா..ர்!'' திகைத்துப் போனாள் மாலினி.

அவளைவிட அதிக அதிர்ச்சியில் தாக்குண்டிருந்தாள் வாஸந்தி.

''தயவு செய்து மறுக்கக் கூடாது மாலினி!''

''நீங்க இதுவரை எனக்காக செய்ததே அதிகம் சார். மேலும் மேலும் உதவிகள் செய்து என்னைக் கடனாளி யாக்காதீங்க.''

''இது கடனும் கிடையாது. கடமையும் கிடையாது. என்னை உங்க நண்பனா நினைச்சுக்குங்க. தயக்கம் வராது. மேடம் நீங்களும் கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்க!''

''நான் ஏற்கனவே சொல்லிட்டேன் சார். மாலினி... இதுலே யோசிக்க என்ன இருக்கு? வாங்கிக்க!'' என்ற வாஸந்தியின் மனதில் மிதுன் கோபுரமாகிப் போனான்.

* * *

அதன் பிறகு மிதுன் அடிக்கடி விடுதிக்கு வந்து மாலினியை பார்த்து விட்டுச் சென்றான்.

மாலினி பூரண குணம் பெற்று மிதுனின் அலுவல கத்துக்குச் சென்றாள். அந்த அலுவலகத்துக்கு மிதுன் எப்போதாவதுதான் வருவான்.

மிதுனின் வேண்டுகோளுக்கிணங்க... அவள் அவனை பெயர் சொல்லி அழைக்க ஆரம்பித்தாள். அவனின் நட்பு மாலினிக்கு சமயத்துக்கேற்ற அருமருந்தாய் இருந்தது.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவளைப் பொழுது போக்கான இடங்களுக்கு அழைத்துச் சென்றான்.

அன்று...!

''மாலினி...''

''சொல்லுங்க!''

''நாளை உங்களுக்கு முக்கியமான வேலை ஏதாவது இருக்கிறதா?''

''நாளை ஞாயிறு ஆயிற்றே! விடுமுறை நாள்... விடுதியில் ஈ ஓட்டிக் கொண்டிருப்பேன்!''

''நல்லதாகப் போய் விட்டது. நாளை உங்களின் மதிய உணவு எங்கள் வீட்டில்!''

''அய்யோ... அதெல்லாம் எதற்கு?'' சங்கடமாய் மறுத்தாள்.

''எதற்கு சங்கடப்படுகிறீர்கள்? இந்த விடுதியை விட எங்கள் வீடு பரவாயில்லை என்றளவில் இருக்கும் பயப்படாதீர்கள்!''

''கிண்டல் பண்ணாதீர்கள். உங்கள் நட்பு கிடைத்ததே எனக்கு பெரிய விஷயம்தான். உங்கள் வீட்டிற்கெல்லாம் சாப்பிட வருமளவிற்கு எனக்கு தகுதியில்லை. மிதுன்!''

''இப்படி பேசுவதே எனக்குப் பிடிக்கவில்லை. என் நட்பிற்கு மாலினி தரும் மரியாதை இவ்வளவுதானா?'' முகம் சிறுத்துப் போனது.

அதற்கு மேல் மாலினியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

* * *

பிரம்மித்துப் போனாள் மாலினி.

'இதையா வீடு என்றான்? ப்பா... எவ்வளவு பெரிய மாளிகை? இப்பேர்ப்பட்ட பணக்காரனா... எனக்கு சமமாய் பழகி நட்பு பாராட்டுவது?' கண்கள் பனித்தன.



கேட்டிற்கு அப்பால் விசாலமான புல்வெளி. சீராக பராமரிக்கப்பட்ட தோட்டம்.

நாய், பூனை மட்டுமின்றி கூண்டுகளில், அணில், முயல், கிளிகளும் இருந்தன.

மகனுடன் உள்ளே நுழைந்து கொண்டிருந்த பெண்ணைப் பார்த்ததும் அசந்து போய்விட்டார் அருணாச்சலம்.

'நம்ம வீட்டுக்கு நீங்க எதிர்பார்க்காத ஒரு விருந்தாளி வரப் போறாங்க என்று மிதுன் சொன்னது இவளைத்தானா? பரவாயில்லை... பெண் லட்சணமாகத்தான் இருக்கிறாள்!'

''மாலினி... இவர்தான் என் அப்பா. அப்பா இது மாலினி!''

மகனை குறும்பாய்ப் பார்த்து தலையாட்டியபடி மாலினிக்கு ''வணக்கம்மா!'' என்றார்.

''வணக்கம் சார்!''

''என்ன பண்ணிட்டிருக்கே?'' விசாரிக்க ஆரம்பித்தார்! இடையில் அமர்க்களமான உணவு.

அருணாச்சலத்துக்கு மாலினியை ரொம்பவே பிடித்து விட்டது. அவளின் பேச்சு, அடக்கம், குணம் வெகுவாய் ஈர்த்தது. அவள் யாருமற்ற அனாதை என்றறிந்த பின்... பரிதாபம் எழுந்தது.

முக்கியமான போன் வரவும் பேசிவிட்டு, அது சம்பந்தமாய் கோப்பு ஒன்றை தேடிக் கொண்டிருந்தான் மிதுன்.

அருணாச்சலம் மாலினியை தன் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு குறு மேசையின் மீது ஏகப்பட்ட பெண்களின் புகைப்படங்கள். அழகழகாய்... ஓவியம் போல்...

''என்னம்மா அப்படிப் பார்க்கிறே? பொண்ணுங்க எப்படி இருக்கு?''

''ரொம்ப அழகாயிருக்காங்க. யார் இவங்க?''

''மிதுனுக்காக பார்த்த வரன்கள்!''

''ஓ!''

''ஆனா, இவர்கள்ல ஒருத்தியக்கூட அவனுக்குப் பிடிக்கலையாம்!''

''பிடிக்கலையா? ஏன்?'' வியந்தாள்.

''அவன் மனசிலே ஒருத்தி!''

''மிதுன் காதலிக்கிறாரா? ஆச்சர்யமாயிருக்கே?''

''இவ்வளவுப் பழகறான்... உங்ககிட்டேயே சொல்லலே பார்! அவளை அவளுக்கேத் தெரியாம போட்டோ கூட எடுத்துட்டான். பார்க்கறியா?''

''ஆவலாயிருக்கேன் சார்! காட்டுங்க...''

அருணாச்சலம் மிதுனின் செல்பேசியை எடுத்து அந்த புகைப் படத்தைக் காட்டினார்.

மாலினியின் விழிகள் திகைப்பில் விரிந்தன.

ஒரு கணம் இதய ஓட்டம் நின்று போனது.

# 9

உறக்கம் வராமல் எழுந்தமர்ந்தாள் மாலினி. மின் விசிறி நோயாளியைப் போல் தெம்பின்றி சுழன்றுக்



கொண்டிருந்தது. வியர்வையில் கழுத்துப் பகுதி பிசு பிசுத்தது.

பக்கத்து கட்டிலில் அயர்ந்த உறங்கிக் கொண்டிருந் தாள் வாஸந்தி.

எழுந்து பால்கனிக்கு வந்தாள். யாரோ அட்டாக் சொன்னது போல் மரங்கள் அசைவின்றி இருந்தன.

மிதுன் நினைவிற்கு வந்து இம்சித்தான்.

'என்னை நேசிக்கிறீர்களா மிதுன்? என்னையா? போயும், போயும் என்னையா? என்னைப் பற்றி என்னத் தெரியும் உங்களுக்கு? அந்தஸ்தில் மட்டுமல்ல... எல்லா வற்றிலும் எட்டாத தூரத்தில் உள்ளவள் நான்! வேண்டாம் மிதுன். நான் உங்களுக்கு வேண்டாம். அந்த எண் ணத்தை உங்களிடமிருந்து முற்றிலும் அழித்தாக வேண் டும்.' தீர்மானித்தாள்.

அவள் முடிவை ஆமோதிப்பது போல் மரங்கள் அசைந்தன.

* * *

பதினைந்து நாட்களாக தவித்து, மருகி, ஒரு வழியாய் அன்று மிதுனிடம் பேசிவிட வேண்டும் என்று அவனை வரவழைத்திருந்தாள் மாலினி.

மிதுன் அமைதியாய், புன்னகை மாறாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தந்தை மூலம் தன் காதல் விஷயம் மாலினிக்கு தெரிந்து விட்டது என்றறிந்ததும் பயந்தாலும், தன் வேலை மிச்சமாயிற்றே என்ற நிம்மதி எழாமல் இல்லை. யோசிக் கட்டும் என்று பேசாமல் இருந்தான்.

மழைக்கால காளான் போன்ற அமைப்பிலிருந்த குடையின் கீழ் இருவரும் அமர்ந்திருக்க... ஓட்டலின் பணியாள் பழரசங்களை கொண்டு வந்து வைத்தான்.

''வேலை பிடிச்சிருக்கா மாலினி?''

''ம்!''

''முதலில் பழரசம் சாப்பிடுங்கள்!''

பருகினாள்.

''முக்கியமான விஷயம் பேசவேண்டும் என்றீர்களே?''

''என் நண்பர் புத்திசாலி, திறமையானவர் என்று எண்ணி இருந்தேன். ஊகூம்... கிடையாது. அவசர புத்திக் காரர், ஆராயாமல் முடிவெடுப்பவர்!''

''எதை அடிப்படையாக வைத்து இப்படியொரு சான்றிதழ்?''

''என்னை நேசிக்க தேர்ந்தெடுத்ததை வைத்து?''

''என் தேர்வில் என்ன குற்றம்?''

''போதும் மிதுன் விளையாட்டு. இது வாழ்க்கை, அவசரப்பட்டு முடிவெடுக்கிற விஷயமில்லை!''

''என்னைப் பிடிக்கவில்லை என்றால் நேரடியாக சொல்லி விடலாமே மாலினி. எதற்காகச் சுற்றி வளைத்து...''

''கொல்லாதீர்கள் மிதுன். அருமையான ஆண் மகன் நீங்கள். உங்களை மணக்க எந்தப் பெண்ணும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.''

''ஓகோ... அப்படியானால் என்னிடம் கொடுத்து விடேன் உன் மனதை!''

''இல்லை மிதுன்... நான்... நான் உங்களுக்கு ஏற்றவள் அல்ல. என்னைப் பற்றி என்னத் தெரியும் உங்களுக்கு?''



''........!'' மிதுன் புருவங்கள் உயர அவளையே நோக்கினான்.

''நான்...'' என்று விசும்பலுடன் மனதில் அடக்கி வைத்திருந்த அத்தனையையும் கொட்டினாள் மாலினி.

''இப்போது சொல்லுங்கள்... எந்த வகையில் நான் உங்களுக்கு ஏற்றவளாயிருக்க முடியும்?''

''எனக்குப் புரியவில்லை மாலினி. நான் உன்னை நேசிக்கிறேன். இப்போது உன்னைப் பற்றி நீ சொன்ன எதுவும் என்னைப் பாதிக்கவில்லை! சொல்லப் போனால் உன் மீது காதல் இன்னும் அதிகமாகி விட்டது என்றுதான் சொல்வேன்!''

''மி...து...ன்!'' தாங்க மாட்டாமல் கண்ணீர் பொங்கியது.

''அச்சச்சோ... எதுக்கு அழறே மாலினி? இதோ பார்... நான் உன்னிடம் ஒரே ஒரு கேள்வியைதான் கேட்கப் போகிறேன். அதற்கு மட்டும் பதிலைச் சொல்லு! என்னைப் பிடிச்சிருக்கா, இல்லையா?''

''பிடிச்சிருக்கு... ஆனா?''

''போதும்! இதற்கு மேல் எதுவும் பேச வேண்டாம். மனசை வேதனைப்படுத்துகிற சம்பவங்கள் அத்தனையையும் மறந்துவிட்டு, இனி ஒவ்வொரு நிமிஷத்தையும் மகிழ்வோட எதிர்கொள்ளத் தயாராயிரு!''

''உங்களுக்கு என் மேல் வெறுப்பே வரலியா?''

''என்னையே நான் வெறுக்க முடியுமா? ம்... சொல் மாலினி!'' ஒற்றை விரலால் அவள் முகவாயைத் தொட்டு நிமிர்த்தினான்.

தண்ணீரில் நீந்தும் மீன்களாய் கண்ணீரில் அலை பாய்ந்த கண்களில் சிறு பல்பு எரிந்தது.

கனிவோடும், காதலோடும், கண்ணியத்தோடும் ஆண் மகன் தருகிற நேசத்திற்கு முன் சொர்க்கம் கூட இரண்டாம் பட்சம்தான்!

''எனக்காகவே பிறந்து வளர்ந்தவன் நீ! உன்னை நேசிப்பதற்காகவே படைக்கப்பட்டவன் நான்! என் எதிர்பார்ப்பு... உன் இதயம் மட்டுமே!''

''யாருமற்ற அனாதையாய் பிறந்து வளர்ந்தவளை ஏற்றுக் கொள்ள பெரிய மனசு வேணும். அதைவிட என் பிசகுகளை பெரிது படுத்தாமல்...'' சொல்லிக் கொண்டிருக் கும்போதே தன் கரத்தால் அவள் வாயைப் பொத்தினான்.

''பேச வேண்டாம்... கசடுகளை மறந்து விடு! இனி நடக்கப் போகும் நம் திருமணத்தைப் பற்றி பேசு!''

மாலினி அவன் கரங்களைப் பற்றி கண்களில் வைத்துக் கொண்டாள். கண்ணீர் கரங்களைச் சுட்டது. வாய் மொழி உணர்த்த முடியாத உணர்வுகளை அந்த கண்ணீர் உணர்த்தியது.

அதற்கடுத்து வந்த நாட்களில் திருமண ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன. அருணாச்சலம் இப்படியொரு நாளுக்காகத்தானே காத்திருந்தார்? இருபது வயது குறைந்த வராக அவரே எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக் கொண்டார். ஒரு மாதம் வெளிநாட்டில் தேனிலவு கொண் டாட, தங்கும் விடுதி உட்பட முன்பதிவு செய்தார். தந்தையின் குதூகலம் கண்டு உள்ளம் நிறைந்துப் போனான் மிதுன்.

மாலினி புதியதாய் பிறந்திருந்தாள். மிதுனின் காதல் அவள் அழகை கூட்டியிருந்தது. அவளுக்கு இப்படியோர்



வாழ்க்கை அமைந்ததில் அவளைவிட வாஸந்திக்குத் தான் அதிக மகிழ்ச்சி.

திருமண நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

* * *

அந்த சிறிய வீட்டில் கல்யாணக்களை நிறைந் திருந்தது. அந்த வீட்டு உறுப்பினர்களுக்காக வாங்கி வந்திருந்த உடைகளடங்கிய பார்சல்கள் பரப்பப்பட் டிருந்தன. மகன் சமயமறிந்து உதவியதால்... தன் செய லுக்காக உள்ளுக்குள்ளேயே வருந்திக் கொண்டிருந்தார் நாராயணன்.

''பார்வதி!''

''என்னங்க?''

''இதை மகேந்திரனுக்கும், விமலாவுக்கும் கொடுத்து விடு!''

''நீங்களே... இதை!''

''புரிஞ்சுக்கடி! சொன்னதைச் செய்...!''

பார்வதி அவர் தந்த உடைகளை மகேந்திரனின் அறைக்கு எடுத்துச் சென்றாள்.

இருவரும் இருந்தனர்.

''மகேந்திரா... விமலா...! இப்படி வாங்க ரெண்டு பேரும்.''

''என்னம்மா?''

''உனக்கும், விமலாவுக்குமான உடைகள். அப்பா கொடுத்தார்.''

''எதற்கும்மா வீண் செலவு?'' என்றபடி வாங்கிக் கொண்டான்.

''கடைத்தேங்காயை எடுத்துதானே வழிப்பிள்ளை யாருக்கு உடைச்சிருக்கார் உங்கப்பா...'' என்றாள் நக்கலாய் விமலா.

பார்வதியின் முகம் வாடிப் போயிற்று.

பதில் பேசாமல் வெளியேறினாள்.

''நம்மை எப்படியெல்லாம் அவமானப்படுத்தினார் உங்கப்பா? இந்த கல்யாணத்தை எப்படிதான் நடத்துகிறார் பார்ப்போம்? என்று எண்ணியிருந்தேன். எல்லாவற்றை யும் கெடுத்தீர்களே! என்னை ஒரு வார்த்தைக் கேட்காமல் சுளையாய் ஒரு லட்சம் கொடுத்து விட்டீர்களே... சே!''

''அனு என் தங்கை விமலா!''

''அதற்காக?''

''உன் தங்கை மேல் அக்கறை இருக்கும்போது, அதைவிட ஒருபடி அதிகமாகவே அனுமேல் அக்கறை வருவது இயல்பு. இந்தப் பேச்சை இத்தோட விடேன் ப்ளீஸ்!''

விமலா கணவனை எரித்து விடுபவளைப் போல் பார்த்தாள்.

''இந்த அக்கறையை வளர விடக் கூடாதே! என்ன செய்யலாம்?'' குதர்க்கமாய் யோசித்தாள்.

* * *

''எந்தனுயிரே... எந்தனுயிரே... கண்கள் முழுதும் உந்தன் கனவே!'' பாடலின் இசை செல்பேசியில் கிணுகிணுக்க, அவசர அவசரமாய் கைகளைத் துடைத்துக் கொண்டு அடுப்படியிலிருந்து வெளிப்பட்டாள் அனு.

சுற்றுமுற்றும் பார்த்தவள், செல்பேசியுடன் கொல்லைப் புறம் சென்றாள்.



செல்பேசியை ரஞ்சன் அவளுக்காக பரிசளித்திருந் தான். நள்ளிரவு வரை பேசிக் கொண்டிருப்பார்கள். அந்தளவிற்கு அவர்களிடையே காதல் இறுகியிருந்தது.

''என்ன பண்ணிட்டிருக்கே அனு?''

''ஞாயிறாயிற்றே? நிதானமாய் சமைத்துக் கொண்டிருக் கிறேன்.''

''அருமையாய் சமைக்கிற மனைவி வாய்ப்பது அதிர்ஷ்டம் என்பார்கள். நான் அதிர்ஷ்டக்காரன்.''

''உங்களுக்கு என்னவெல்லாம் பிடிக்கும்?''

''உன்னை!''

''ப்ச்... கிண்டல் வேண்டாம். சாப்பிடறதைப் பத்தி கேட்கிறேன்!''

''நானும் அதைத்தான் சொல்றேன். உன் கன்னத்தை, உன் இதழ்களை, உன்...''

''போதும்... போதும்!'' சிணுங்கினாள்.

''இந்த மாதம் சம்பளம் கொடுத்து விட்டார்களா?''

''இன்னும் இரண்டு நாளில் வந்துவிடும்!''

''சம்பளம் வாங்கிய உடன் வேலையை ராஜினாமா செய்து விடு!''

''ச... சரிங்க!''

''இன்னும் பதினைஞ்சு நாள்ல கல்யாணத்தை வச்சுக் கிட்டு நீ அலுவலகம் சென்று வருவது சரியல்ல!''

''சரிங்க!''

கிசுகிசுப்பாய் பேசிக் கொண்டு, முகத்தில் வெட்கத்தை பூசிக் கொண்டு நின்றிருந்தவளைப் பார்க்கும்போது எரிச்சல் மண்டியது விமலாவுக்கு.

பேசிவிட்டு திரும்பியவள் அண்ணியைப் பார்த்ததும் சங்கடத்துடன் சிரித்தாள்.

''என்ன... வேலையை ராஜினாமா செய்ய சொல்றாரா?''

''ஆ... ஆமாண்ணி!''

''ரொம்ப கவுரவம் பார்க்கிறவர் போலிருக்கு. உங்கப்பா ஜெயிலுக்குப் போனது தெரிந்தால் என்னாகும்? கவன மாயிரு!''

அனுவின் முகம் பயத்தில் வெளிறிப் போனது.

* * *

அன்றுதான் ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு வந்திருந்தான் கோபி.

அவனின் அம்மா பழரசத்துடன் அருகில் வந்தமர்ந் தாள்.

பாதியாய் இளைத்து, முகம் வெளிறி, தாடி மண்டி படுத்திருந்த மகனைப் பார்க்கையில் பெற்ற வயிறு பற்றியெரிந்தது.

''கோபி... இதை குடிச்சிடுப்பா!''

''வேணாம்மா...'' பார்த்தாலே குமட்டுது!''

''வயிறெல்லாம் புண்ணாகியிருக்காம் கோபி. பழரசம் தான் ஆகாரமே! குடிப்பா...!''

''எதுக்கும்மா... எதுக்காக என்னைக் காப்பாத்தினீங்க?'' வேதனையில் முகம் சுருங்கிப் போனது.''

''ஏன்டாப்பா என்னைக் கொல்லாமல் கொல்றே? எனக்குன்னு யாரிருக்கா? வாயைக் கட்டி, வயித்தைக் கட்டி வளர்த்து ஆளாக்கினது, எவளோ ஒருத்திக்காக உயிரை விடறதுக்கா? பெத்த தாயை மறந்துட்டேயில்லே?'' முருகேஸ்வரி அழ ஆரம்பித்தாள்.



அப்போது... கோபியின் நண்பர்கள் வந்தனர்.

''அம்மா... இவனை நாங்க பார்த்துக்கறோம். நீங்க வேற வேலை இருந்தா போய்ப் பாருங்கம்மா!''

''நல்லா புத்தி சொல்லு முகிலா!''

''சரிம்மா!''

''இதைக்குடி கோபி!''

''அனுவைப் போய்ப் பார்த்தியா திவாகர்?''

''மறுபடி எதுக்கு அவளைப் பத்திப் பேச்சு? மற... அவளோட பழகினதையெல்லாம் மற.... அவ்வளவு தான் சொல்லுவேன்!''

''நான் அவளுக்காக விஷம் சாப்பிட்டு சாக முயன்றதை சொன்னியா? தெரிஞ்சா... ஓடி வந்திருப்பாடா என் அனு!''

''எல்லாமே அவளுக்குத் தெரியும். அவன் எக்கேடோ கெட்டுப் போகட்டும்... எனக்கு கவலையில்லை... மறுபடி அவன் பேரைச் சொல்லிக்கிட்டு என்கிட்டே பேச முயற்சி பண்ணினா... போலீஸ்ல பிடிச்சி குடுத்துடு வேன்னு மிரட்டறா!''

''அனுவா... என் அனுவா அப்படிப் பேசினா? இருக்காது... நான் நம்ப மாட்டேன்!''

''முட்டாள்! நீதான்டா குழம்பிப் போயிருக்கே... அவ தெளிவா இருக்கா... கல்யாணம் நிச்சயமாகியிருக்கு. இன் னும் பதினஞ்சு நாள்ல ''பிரின்ஸ் பேலஸ்''ல கல்யாணம்!''

''இல்லை...!'' அடிவயிற்றிலிருந்து கத்தினான்.

''அமைதியா இருடா! பொம்பளை அவளே தைரியமா முடிவெடுக்கிறப்ப... உனக்கென்னடா ஆம்பளை சிங்கம்!''

சற்று நேரம் அழுது அடங்கிய பின் தெளிவானான் கோபி.

''எங்கே இருக்கு அந்த மண்டபம்?''

''ஜீவரத்தினம் சாலையிலே...!''

''இல்லேடா... ஜீவா சாலையிலே! ஏன் கேட்கறே?''

''விடமாட்டேன் திவாகர். என்னை காதலிச்சு ஏமாத்திட்டு எவனையோ கட்டிக்கப் போகிறாளாமா? அந்த அனுவை வாழவிட மாட்டேன்... என்ன பண்ணப் போகிறேன் பார்!'' கண்களில் தீ ஜ்வாலை தெரிந்தது.

நண்பர்கள் பயத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

# 10

சட்டை மாட்டி புறப்பட்ட மகனை வியப்புடன் பார்த்தாள் முருகேஸ்வரி.

''கோபி...''

''ம்...''

''எங்கே கிளம்பறே?''

''அவசியம் சொல்லணுமா?''

''ஏன்டா இப்படிப் பேசறே? சாகப் பொழைக்கக் கிடந்து நேத்துதான் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்தே! சரியா எந்திரிச்சி நிக்கக் கூட முடியலே. சாப்பிடவுமில்லே.



இந்த சுட்டெரிக்கிற வெயில்ல எதுக்காக வெளியேப் போகணும்?''

''அவளைப் பார்க்கப் போகிறேன்!''

''யாரு... அனுவையா?''

''ஆமாம்!''

''உனக்கென்ன பைத்தியமாப் பிடிச்சிருக்கு? உன்னை வேண்டாம்னு தூக்கியெறிஞ்சிட்டுப் போனவ பின்னாடி ஏன் அலையணும்? அவ என்ன பெரிய ரதி? அவளை விட அழகானப் பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன் கோபி! உன் பெரியப்பா. நல்ல இடத்துலே வேலையாப் பார்த்து சேர்த்து விடறேன்னு சொல்லி இருக்கிறார். நாளைக்கு நீயும், நானும் வேளச்சேரிப் போய் அவரைப் பார்த்துட்டு வரலாம். அவர் கூட உனக்காக ஒரு பொண்ணைப் பார்த்து வச்சிருக்கிறாராம்!''

''ஆனா... அந்தப் பொண்ணு அனு இல்லியேம்மா!''

''ஏன்டா பைத்தியம் பிடிச்சவன் மாதிரி அவப் பேரையே சொல்லிக்கிட்டிருக்கே?''

''மறக்க முடியலியேம்மா! அவ மேலே ரொம்ப பாசம் வச்சிட்டேன்ம்மா!''

''அவளுக்குதான் கல்யாணமாகப் போகுதே! மறந்துடுப்பா...

''முடியலேம்மா! கடைசியா அவளை சந்திச்சு என் அன்பை புரிய வைக்கப் போகிறேன்...''

''கோ...பி!''

''பயப்படாதேம்மா! இனி கண்டிப்பா தற்கொலை முயற்சியிலே இறங்க மாட்டேன். அனுவை அந்த

முடிவுக்குப் போக வைப்பேன்!'' சொல்லிவிட்டு விருட்டென்று வெளியேறிப் போக...

பயத்தில் முருகேஸ்வரியின் உடல் நடுங்கிற்று.

* * *

கடல் அலைகள் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

பூக்கூடைகளும், சுண்டல் பாத்திரங்களும் அடிக்கடி அவனைத் தாண்டிச் சென்றன.

காற்றில் கவுச்சி வாடை கலந்திருந்தது.

மணலில் மல்லாந்துப் படுத்திருந்தான் கோபி. கண்களோரம் ஈரம்.

''அவசரப்பட்டு விட்டாயே அனு! நான் செய்தது தவறுதான். மறைக்காமல் ஒப்புக் கொண்டேனே! அதற்காவது மன்னித்திருக்கலாமே! ஒரேயடியாய் என்னை வீசி எறிந்து விட்டாயே! என்னால் மறக்க முடியவில்லையடி! எவ்வளவு எளிதாய் என்னை மறந்து விட்டு, இன்னொருவனை மணக்க சம்மதித்திருப்பாய்? நெஞ்சம் எரிகிறது. என்னை பைத்தியக்காரனைப் போல் புலம்ப வைத்து விட்டு, நீ மட்டும் சந்தோஷமாய், கல்யாணம், புருஷன், குழந்தை என்று வாழ வேண்டுமா?'

பேண்ட் பாக்கெட்டிலிருந்து கத்தை கடிதங்களை எடுத்தான்.

அத்தனையும் அவன் காதலி அனு எழுதியது.

காதலால் கசிந்துருகி... அன்பு சொட்ட சொட்ட எழுதப் பட்டிருந்தன அத்தனையும்.

''அப்படிப்பட்ட அனுவா என்னை உதறித் தள்ளியது?'' அவனால் நம்பவும் முடியவில்லை. நிஜத்தை ஜீரணித்துக் கொள்ளவும் முடியவில்லை.



''டேய் கோபி... நீ இங்கேயா இருக்கே?''

ஆச்சர்யமானக் குரல் கேட்டுத் திரும்பினான்.

திவாகர்!

சோர்வாய் எழுந்தமர்ந்தான் கோபி.

''உன்னை எங்கேயெல்லாம் தேடறது?''

''என்னையா? ஏன்?''

''காலையிலே போனவன் இன்னும் வீடு திரும்பலியேன்னு உங்கம்மா பயந்துப் போய் என்னைத் தேடி வந்தாங்க! நானும் உன்னை எல்லா இடத்திலேயும் தேடிப் பார்த்துட்டு கடைசியா இங்கே...''

''கடல்ல விழுந்து செத்திருப்பேனோன்னு நினைச்சு வந்தியா?'' விரக்தியுடன் சிரித்தான் கோபி.

''சந்தேகப்பட வைக்கறியே!''

''ப்ச்... அந்த நிலையை கடந்து வந்துட்டேன் திவாகர். இப்ப என் எண்ணமெல்லாம் வேற...''

''அனுவை பார்க்கப் போறதா சொன்னியாமே... நிஜமா?''

''ம்...'' என்று தலையாட்டினான்.

''ஏன்டா இப்படியிருக்கே? உன் தகுதிய நீயே ஏன் குறைச்சுக்கறே?''

''..........?!''

''சரி... சரி... அவளைப் பார்த்தியா? என்ன சொன்னா?''

''பார்க்கலே... பார்க்க முடியலே...''

''கல்யாணமாச்சே... அந்த வேலையிலே பிசியாயிருப்பா!''

''அவ வேலைய ராஜினாமா செய்துட்டாளாம். தன் இருப்பிடத்தையும் காலிப் பண்ணிட்டா!''

''ஓ!''

''ஆனா, அவளை நான் சும்மா விடப் போறதில்லே திவாகர்!''

''என்னடாப் பண்ணப் போகிறே? கல்யாணத்தை நிறுத்தப் போறியா?''

''சேச்சே!''

''பின்னே?''

''கல்யாணமாகட்டும்... அப்புறம் வச்சுக்கறேன் என் வேலையை!''

''வம்புல மாட்டிக்கப் போகிறே கோபி. வேணாம் விட்ரு!''

''அட்வைஸ் பண்ணாதே! ஒரே ஒரு உதவிய மட்டும் செய்! அவளைக் கட்டிக்கப் போகிறவனோட விபரமும் விலாசமும் வேணும்.''

''மன்னிச்சிடு கோபி. இதெல்லாம் வேண்டாம்.''

''நீயென்னடா உதவி பண்றது? நானே தெரிஞ்சுக்கறேன்.

''ஜீவா ரோடுல இருக்கிற பிரின்ஸ் மண்டபத்திலே தானே கல்யாணம்? யாரோட உதவியும் எனக்கு வேண டாம்'' கோபியின் கண்களில் வெறி தாண்டவமாடியது.

* * *

பிரின்ஸ் திருமண மண்டபம்!

ரஞ்சன் - அனு!

மண்டப முகப்பில் வைக்கப்பட்டிருந்த அலங்கார போர்டில் ஜிகினாப் பொடியில் பெயர்கள் பளபளத்தன.



இந்திரா... வருகிறவர்களை பன்னீர் தெளித்து சந்தனம் கொடுத்து வரவேற்றுக் கொண்டிருந்தாள்.

பார்வதி சம்பந்தியம்மாளுடன் பேசிக் கொண்டிருக்க, நாராயணன் சமையல்கட்டுக்கும் வாசலுக்குமாக அலைந்து கொண்டிருந்தார்.

மகேந்திரன் வந்திருந்தவர்களுக்கு குளிர் பானம் கொடுத்துக் கொண்டிருந்தான்.

விமலா ஒரு ஓரமாய் அமர்ந்து இந்திராவையேப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அழகான இளம் வாலிபன் ஒருவன் சிரிக்க சிரிக்க.. பேசிக் கொண்டிருக்க, அவன் என்ன நகைச்சுவையை சொன்னானோ, தெரியவில்லை... வயிற்றைப் பிடித்துக் கொண்டு சத்தம் வராமல் சிரித்தாள்.

அந்தக் காட்சி நல்ல விதமாய்ப் படவில்லை. விமலா வுக்கு.

எழுந்து அங்கே செல்லுமுன் அந்த இளைஞன் நகர்ந்து விட்டிருந்தான்.

''என்ன இந்திரா இதெல்லாம்?'' என்றாள் சினத்துடன்.

புரியாமல் விழித்த இந்திரா, ''என்ன அண்ணி?'' என்றாள்.

''யார் அவன்?'' போகிறவனை சுட்டிக் காட்டினாள்.

''என் தோழியின் அண்ணன்!''

''ஓகோ... அதனால்தான் சுற்றுப்புற சூழ்நிலை மறந்து அவனுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாயா? இப் போதிருக்கிற வீட்டு சூழ்நிலையில் இதெல்லாம் அவ சியமா?''

''என்ன சூழ்நிலை? என்ன அவசியம்? ஒன்றுமே புரியவில்லை அண்ணி!''

''நல்லா நடிக்கிறே? அனுவோட கல்யாணம் நடத்த பணம் புரட்டவே நாக்கு வெளியே தள்ளிப் போச்சு உங்கப்பாவுக்கு. என் புருஷன் மட்டும் கை கொடுக்க லேன்னா... இந்த மேளச் சத்தம் கேட்டிருக்குமா? இப் போதைக்கு அடுத்த கல்யாணம்பத்தி நினைச்சி பார்க்கத் தான் முடியுமா? நீ பாட்டுக்கு காதல், கல்யாணம்னு கனவு காணாதே! அவ்வளவுதான் சொல்லுவேன்!''

இந்திரா இதயத்தில் முள் குத்தியதுப் போல் துடித்துப் போனாள். அவசர அவசரமாய் கண்கள் வியர்த்தன. யாரும் பார்க்காதவாறு உடனே நாசுக்காய் துடைத்துக் கொண் டவள், ''அண்ணா... ரமேஷ் அண்ணா!'' என்று அழைத்தாள்.

சென்றுக் கொண்டிருந்த இளைஞன் உடனே, ஓடி வந்தான்.

''என்னம்மா?''

''ராகவி அக்கா அறையிலே இருப்பா... நான் கூப்பிட் டேன்னு சொல்றீங்களாண்ணே?''

''அனுப்பறேன்ம்மா!''

நகர்ந்து சென்ற பின் இந்திரா அண்ணியையே உறுத் துப் பார்த்தாள்.

''இப்ப புரிஞ்சுதா அண்ணி அவர் எனக்கு என்ன உறவுன்னு? எனக்கும் என் குடும்ப கவுரவத்தைக் காப்பாத்தற பொறுப்பு இருக்கு அண்ணி! என் தாயோட தவிப்பும், தகப்பனோட கஷ்டமும் எப்படிப்பட்டதுன்னு எனக்குத் தெரியும். நாராயணனோட பொண்ணுங்களுக்கு தப்புப் பண்ணத் தெரியாது... புரிஞ்சுக்குங்க!''

'கூடவே பொறந்தவனா? அண்ணன்னு சொன்னதும் நம்பிடுவேனா?' தனக்குள் முணுமுணுத்தபடி அங்கிருந்து சென்றாள்.



ரஞ்சனின் அம்மா, பார்வதியிடம் தொண தொணத்துக் கொண்டிருந்தாள்.

''முகூர்த்தத்துக்கு இன்னும் அரை மணி நேரம் தான் இருக்கு. மண்டபம் நிறையலியே!''

''வந்துடுவாங்க சம்பந்தியம்மா... இப்பல்லாம் கல் யாணம் முடிஞ்ச பிறகுதான் வரவே ஆரம்பிக்கிறாங்க!''

''அப்படியே இருந்தாலும்... வந்திருக்கிறவங்க கூட பெரும்பாலும் எங்க பக்கத்து உறவுக்காரங்கதான்!''

''என்னவென்று பதில் சொல்வாள்? தங்கள் குட்டு வெளிப்பட்டு விடக் கூடாதென்று பெரும்பாலான சுற்றத் திற்கும், நட்பிற்கும் அழைப்பிதழே தரவில்லை என்றா?''

''கடவுளே... என் மகளின் திருமணம் நல்லபடி நடந்தேற வேண்டும்!''

வந்து கொண்டிருக்கும் ஆபத்தை உணராமல் கட வுளிடம் மேலும் ஒரு மனு போட்டாள்.

''அதோ.. வந்துக்கிட்டுதான் இருக்காங்க. நேரமாச்சு... வாங்க மணவறைக்குப் போகலாம்!''

பார்வதி பதைக்கும் நெஞ்சுடன் முன்னேச் செல்ல... பின்னேயேச் சென்றாள் சம்பந்தியம்மாள்.

மணமகனின் அறை!

பாட்டும், கூத்துமாய் அமர்க்களப்பட்டுக் கொண் டிருந்தது.

''முதலிரவு இன்னைக்கேவா? இல்லே ராகு பார்க் கிறான், கேது கேட்கிறான், செவ்வாய் கூப்பிடறான்னு தள்ளி வச்சிருக்காங்களா?'' என்றான் சுந்தர்.

''டேய்... சும்மாயிருடா!'' பட்டு சட்டையை நீவி விட்டபடி வெட்கப்பட்டான்.

''டேய்... ரஞ்சன் வெக்கப்படறான்டோய்...!''

''சும்மா சொல்லக்கூடாது. ரஞ்சனின் தேர்வு பிரமாதம். ஜோடிப் பொருத்தம் அமர்க்களம்!''

''கல்யாணத்துக்கு முன்னாடி கடற்கரை, சினிமான்னு ஜாலியா ஊர் சுத்துனியா?''

நண்பர்கள் கலாய்த்துக் கொண்டிருந்தனர்.

''சேச்சே... என் அனு அப்படிப்பட்டவளில்லை. அலுவலகம் சென்று கொண்டிருந்தாலும் என்னை சந்திக்க அனுமதிக்கவில்லை'' கண்களில் பெருமை மின்னியது.

''ரஞ்சனை அழைச்சிட்டு வாங்கப்பா... முகூர்த்த நேரம் நெருங்குது!'' ரஞ்சனின் தகப்பனார் குரல் தர.... நண்பர்கள் புடைசூழ அழைத்து வரப்பட்டான் ரஞ்சன்.

மணமகளின் அறையில் தேவதையைப் போல் அமர்ந்திருந்தாள் அனு.

அவள் நெஞ்சம் ரயில் தண்டவாளத்தைப் போல் தடதடத்துக் கொண்டிருந்தது.

'திருமணம் நல்லபடி நடக்குமா? மறைத்து வைக்கப் பட்ட உண்மை யார் மூலமாவது வெளிப்பட்டு விட்டால்? கல்யாணப் பெண்ணுக்கே உரிய நாணமும், இன்ப கனவுகளும், காணாமல் போய்... அனுவை அச்சம் மட்டுமே ஆட் கொண்டிருந்தது.

''பெண்ணை அழைச்சிட்டு வாங்கோ!'' ஐயரின் குரல் அறைவரை எட்டியது.

அதே நேரம் கோபி... மண்டபத்தை நோக்கி ஆட் டோவில் விரைந்து வந்து கொண்டிருந்தான்!



# 11

ஷெர்வானி உடையில், கரை புரண்ட உற்சாகத்தில் பத்து வயது குறைத்திருந்தார் அருணாச்சலம்.

திருமண மண்டபம் இருந்த தெரு முழுக்க வந்திருந் தவர்களின் கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

நகரத்து தொழிலதிபர்கள் பெரும்பான்மையினர் ஆஜ ராகி இருந்தனர். வந்தவர்களை வாசல் வரை வந்து வரவேற்று அழைத்துச் சென்றார் அருணாச்சலம்.

திருமண செலவிற்காக பல லட்சங்களை வாரி இறைத்திருந்தார்.

இளையராஜா, குன்னக்குடி கச்சேரி, ஐம்பது வகையான சாப்பாடு, நகரத்தில் உள்ள எல்லா அனாதை இல்லங் களுக்கும், முதியோர் இல்லங்களுக்கும் ஒரு நாள் சாப்பாடு என அட்டகாசப்படுத்தினார்.

''வாங்க... வாங்க செட்டியார்! நேற்றே வரவேற்புக்கு உங்களை எதிர்பார்த்தேன்... வாங்க!'' வாயெல்லாம் பல்லாக, கிட்டத்தட்ட அணைத்துக் கொண்டார் அருணாச் சலம்.

''கடைசி நேரத்தில் ஒரு முக்கிய அலுவல் விஷயமாய் வர முடியாமல் போய் விட்டது. அருணாச்சலம் மன்னித் துக் கொள்ளுங்கள்!'' என்றார் பவ்யத்துடன் ஏகாம்பரம்.

''பெரிய வார்த்தையெல்லாம் எதற்கு? வாங்க... குழந்தைகளை வாழ்த்துங்க!''

''அருணாச்சலம் ஒரு நிமிஷம்!''

''சொல்லுங்க!''

''நான் அந்தஸ்தில் குறைந்தவனா?''

''எதற்கிந்த கேள்வி?''

''அல்லது... என் மகளுக்கு தகுதி குறைச்சல் என்று நினைத்து விட்டீர்களா?''

''உங்கள் மகள் தாரா தங்க விக்கிரகம் ஆயிற்றே... ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?''

''ஒரு நாள் உங்களிடம் நாம் சம்பந்தியாகி விடலாம் என்று பேசினேன். அதற்கு நீங்களும் மகிழ்ச்சியுடன் பேசி முடிவுப் பண்ணிவிடலாம் என்றீர்கள்... நினைவிருக் கிறதா?''

''அதெல்லாம் இப்போது எதற்கு ஏகாம்பரம்?'' சங்கடத்தில் நெளிந்தார்.

''ஒரு அனாதைப் பெண்ணைவிட என் மகள்...''

''ஏகாம்பரம் ப்ளீஸ்...'' இடைமறித்தார் அருணாச்சலம்.

''என் மருமகள் அனாதையல்ல. அவளுக்கு நாங்கள் இருக்கிறோம். நல்ல குணவதி. அது போதும் எங்களுக்கு. உங்களுக்கு மகளை மருமகளாக்கிக் கொள்ள என் விருப்பம் மட்டும் போதாது. மிதுனோட விருப்பம் அவ சியம். இந்த சூழ்நிலையில் இந்தப் பேச்சு அவசியமற்றது என்று நினைக்கிறேன்'' சுர்ரென்று புறப்பட்ட கோபத்தை அடக்கி இதமாய் பேசினார்.

அதன் பிறகு அந்த நாகரிக மனிதர் வாயைத் திறக்க வில்லை.

மேடையில் சடங்குகள் நடந்து கொண்டிருந்தன. புரோகிதர் மந்திரங்களை சொல்ல... திரும்ப சொல்லிக் கொண்டிருந்தனர் மணமக்கள்.



அருணாச்சலம் அவர்கள் அருகில் நின்று கொண்டார்.

மிதுன் ஓரக்கண்ணால் மாலினியைப் பார்க்க... மாலி னியும் மெல்லத் திரும்பி அவனைப் பார்த்தாள். அவள் கண்களில் கண்ணீர்.

''ஏய்... என்ன இது?'' அவளுக்கு மட்டும் கேட்கும்படி கிசுகிசுத்தான்.

யாரும் அறியா வண்ணம் இரு கரங்களையும் சேர்த்து கூப்பினாள்.

அதில் அவளின் மனநிலை புரிந்தது.

கனிவும், காதலுமாய் தேக்கி முறுவலித்தவன், கண் களாலேயே சாந்தப்படுத்தினான்.

* * *

''கெட்டிமேளம்... கெட்டி மேளம்!''

நாதஸ்வர இசை முழங்க, மேளம் கொட்ட... அட் சதைகள் மழையாய் பொழிய பரவசத்துடனிருந்த ரஞ்சன், பதட்டத்துடன் இருந்த அனுவின் கழுத்தில் மங்கல நாண் பூட்டினான்.

வாசலில் ஆட்டோ வந்து நின்றது. அதனுள் அமர்ந் திருந்த கோபியின் கண்கள் கலங்கின. வலிக்க... வலிக்க யாரோ இதயத்தைப் பிடுங்குவது போலிருந்தது.

ஆட்டோவில் இருந்தபடியே மண்டபத்தைப் பார்த் தான்.

மணமக்களைச் சுற்றி ஒரே கூட்டம். கேமிரா வெளிச்சம் சூழ்ந்திருந்தது. கிடைத்த சில கண இடைவெளியில் அலங்கார பொம்மையாய் தெரிந்தனர் - அனுவும், ரஞ்சனும்.

சட்டென கண்களை மூடிக் கொண்டான்.

கொடுமையிலும், கொடுமை காதலியின் திருமணத்தை காதலன் கண்ணால் காண்பது!

வாய்விட்டுக் கதற வேண்டும் போலிருந்தது. தன்னை சுற்றி இருள் சூழ்ந்த பிரமை!

முடிந்து போனதா? என் காதல் விடை காணாத கேள்வி யாகி விட்டதா? எத்தனை இரவுகள் உறக்கம் தொலைத் திருப்பேன்... அனுவின் இனிய நினைவுகளால்? எத்தனை நாள் சாப்பிடாமலிருந்திருக்கிறேன்... பசி மறந்து.

இனி... என் இமைகள் நிரந்தரமாய் ஒன்று சேரப் போவதில்லை. என் உணர்வுகள் மொத்தத்தையும் பிடுங்கி காலில் போட்டு நசுக்கிய பின்... இனி என்ன இருக்கிறது என் வாழ்க்கையில்? நான் காதல் தோல்வியில் தாடி வளர்த்து, விட்டத்தை வெறித்துப் பார்த்து இள மையை காளான் அரிக்க... சருகாகி, மண்ணோடு மண் ணாகி மறைய வேண்டும். நீ? புத்தம் புதிதாய் ஒரு ஆணின் கையால் தாலியைக் கட்டிக் கொண்டு, கட்டி லிலும் கட்டிக் கொண்டு அவன் மார்பில் தலை வைத்து வெட்கம் கெட்டு சுகமாய் தூங்குவாய் அப்படித்தானே?

ஒரே காதல்! ஆனால் தோல்வியில் அடிபடுவது நான் மட்டும் தான்!

இதென்ன நியாயம்?

நான் வாழாத வாழ்க்கையை நீ மட்டும் வாழலாமா?

விட மாட்டேன்டி! அனு... உன்னை அணு அணுவாய் துடிக்க வைக்கலே! பார்... புது கோபியை பார்க்க காத்திரு! கண்களில் அரக்கத் தனம்.



''ரஞ்சன்... அனு'' மண்டப முகப்பில் பளபளத்த போர்டை வெறுப்பாய் பார்த்தவன்... கிண்டலாய் சிரித்தான்.

மடியில்... பரிசு பார்சல்!

'என் ஆருயிர் காதலியே... கல்யாணமும், அதுவுமாய் நான் உனக்கு பரிசு தராவிட்டால்... அப்புறம் உன்னை காதலித்ததற்கு என்ன அர்த்தம் இருக்கிறது?'

''சார்... நீங்க சொன்ன கல்யாண மண்டபம் இதுதான்!'' பொறுமையிழந்த ஆட்டோ டிரைவர் சொன்னான்.

''தெரியும் சார்... ஒரு நிமிஷம் பொறுங்க!'' என்றவன் பேனாவை எடுத்து, 'ரஞ்சன்' என்று அழுத்தமாய் எழுதி, அனுப்புநர் பகுதியில் 'கோபி' என்று எழுதினான்.

இரண்டு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

''தம்பி... இங்கே வாப்பா!''

இருவருமே ஓடி வந்தனர்.

''என்னண்ணா?''

''கால்ல அடிபட்டிருக்கு... இறங்கி நடக்க முடியாது. இதை மாப்பிள்ளைக்கிட்டே சேர்த்திடறியா?''

''சரிங்கண்ணா!'' பார்சலை வாங்கிக் கொண்டு ஓடினர். ஆட்டோ டிரைவர் கோபியை ஒரு மாதிரிப் பார்த்தான்.

''எடுப்பா... அண்ணாசாலை போ!''

ஆட்டோ புறப்பட்டது.

* * *

''சாப்பிட்டீங்களா?'' வெளியேறிக் கொண்டிருந்தவர் களை மடக்கி விசாரித்துக் கொண்டிருந்தான் மகேந்திரன்.

''சாப்பிட்டேங்க...!''

''பார்த்தா சாப்பிட்ட மாதிரி தெரியலியே... கையைக் காட்டுங்க!'' கையைப் பற்றி முகர்ந்தவன். ''என்ன சார் இது? நம்ம வீட்டுக் கல்யாணமில்லையா? நீங்களே சாப்பிடாமல் போனால் எப்படி?'' உரிமையாய் கடிந்து கொள்கிறான்.

''இன்னொரு கல்யாணத்திற்குப் போக வேண்டி யிருக்கு மகேந்திரன்...!''

''அதுக்காக? போங்க சார்... போய் சாப்பிடுங்க!'' மறு படி உள்ளே அனுப்பி வைத்தவன், தாம்பூலப் பை கொடுக்கும் இடத்தில் நின்றிருந்த அப்பாவையும், அம்மாவையும் பார்த்து விட்டு நெருங்கி வந்தான்.

நாராயணன் அவ்வப்போது துண்டால் முகத்தை துடைத்துக் கொண்டிருக்க... பார்வதி தணலில் நிற்பது போல் முகத்தை வைத்திருந்தாள்.

''ஏம்மா... ஒரு மாதிரியாயிருக்கே? உடம்புக்கு ஏதாச்சும் பண்ணுதா?''

''பயமாயிருக்குடா! மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு நம்ம விஷயம் தெரிஞ்சிடுச்சின்னா?''

''யார் வந்து சொல்லப் போகிறா? நீங்களே காட்டிக் குடுத்துடுவீங்க போலிருக்கே?''

''நம்ம பக்கத்து மனுஷங்க கல்யாணத்துக்கு அதிகமா வரலியேன்னு சம்பந்தியம்மா கேட்டாங்க!'

''இதெல்லாம் பெரிய விஷயமே இல்லேம்மா! சமாளிச் சுக்கலாம். முகத்தை நார்மலா வச்சுக்குங்க. அப்பா... உங்க முகத்துலதான் நிறைய பதட்டம் தெரியுது!''

''சரி... சரி!'' என்றபடி சங்கடத்துடன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.



மகனிடம் நேரடியான பேச்சு வார்த்தை இல்லை.

மகேந்திரன் சங்கடத்தை உணர்ந்தவனாய் சிரித்தபடி நகர்ந்தான்.

* * *

மண்டபம் காலியாகத் துவங்கியது.

மணமக்களுக்கு பாலும் பழமும் கொடுக்கப்பட்டது. சீர் சாமான்களை ஒரு லாரியில் ஏற்றி மணமகன் வீட்டிற்கு அனுப்பினர். நாராயணன் தன்னால் முடிந்தவரை திரு மணத்தை கவுரவமாகவே நடத்தினார்.

ரஞ்சனின் அப்பா நாராயணனிடம் வந்தார்.

''என்ன சம்பந்தி ஒரு மாதிரி இருக்கீங்க?''

''ஓ... ஒண்ணுமில்லையே! த... தலைவலி... அவ் வளவுதான்!''

''அப்புறம் சம்பந்தி ஒரு முக்கியமான விஷயம்!''

''எ... என்ன விஷயம்?''

''ஏன் பதர்றீங்க? எல்லாம் நல்ல விஷயம்தான்! சாந்தி முகூர்த்தம் எங்கே வைக்கறதா திட்டம்?''

''வழக்கமா பொண்ணு வீட்லேதானே சம்பந்தி நடக்கும்? ஏன் கேட்கறீங்க?''

''தப்பா நினைச்சுக்கக் கூடாது. எங்க குடும்ப வழக் கப்படி மாப்பிள்ளை வீட்லேதான் நடத்துவோம்!''

''அதெப்படிங்க? சம்பிரதாயப்படி...'' என்று ஆரம் பித்த கணவனின் காதில் கிசுகிசுத்தாள் பார்வதி.

''விவாதம் பண்ணாதீங்க... அவங்க இஷ்டப்படி அவங்க வீட்லேயே நடக்கட்டும். இதனால எந்தப் பிரச்னை யும் வந்துடக் கூடாது இல்லையா?''

''அதுவும் சரிதான்!'' என்றவர் அவர் பக்கம் திரும்பி, ''உங்க விருப்பப்படியே நடத்துங்க சம்பந்தி!'' என்றார்.

* * *

மணமக்களுக்காக அலங்கரிக்கப்பட்ட கார் காத்திருந்தது. ரஞ்சனுக்கு வந்த பரிசு குவியல்கள் சின்ன வேனில் ஏற்றப்பட்டது.

அனு கண்ணீருடன் பெற்றவர்களை ஏறிட்டாள்.

''சேச்சே... அழக்கூடாது அனு! சமர்த்தா நடந்துக்க. நல்லப் பொண்ணுன்னு பேர் வாங்கணும்!''

''சரிப்பா... உடம்பைப் பார்த்துக்குங்க. அம்மா... வேளா வேளைக்கு மருந்து மாத்திரை சாப்பிடணும்.''

''என்னைப் பத்தி கவலைப்படாதே அனு!''

''இந்திரா... நீதான் அப்பா, அம்மாவை!'' அதற்கு மேல் பேச முடியாமல் தங்கையை கட்டி அணைத்துக் கொள்ள... இருவரும் அழுது விட்டனர்.

அவர்களை சமாதானப்படுத்துவது பெரும் பாடாகி விட்டது.

மகேந்திரனும், விமலாவும் மணமக்களுடன் புறப்பட்டனர்.

ரஞ்சனின் விரல்கள் யாரும் அறியாதவாறு அனுவின் இடுப்பில் கோலம் போட...

நெளிந்தாள்.

வெட்கத்தில் குறுகிப் போனாள்.

''மதியம்... நன்றாக உறங்கி ஓய்வெடுத்துக் கொள்!''

மெல்ல காதில் ஓதினான்.



''ஏன்?'' என்பது போல் கணவனை ஏறிட்டாள்.

''இரவெல்லாம் கண் விழிக்க வேண்டாமா? அதற்கு தான்!''

சிணுங்கக் கூட முடியவில்லை அனுவிற்கு. பக்கத்தில் விமலா அமர்ந்திருந்தாள்.

ஆனால், உடல் முழுக்க ஏகாந்த உணர்வு வியாபிக்கத் தொடங்கியிருந்தது. இரவுக்காக மனம் காத்திருந்தது.

* * *

கட்டில் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஊதுபத்தியின் நறுமணம் அறை முழுக்கப் பரவியிருந்தது.

ரஞ்சன் ஆவலுடன் அமர்ந்திருந்தான்... அனுவிற்காக!

ஒரு புறம் பரிசுப் பொருட்கள் குவிக்கப்பட்டிருந்தன.

அனுவை அலங்கரித்து அழைத்து வந்த விமலா, ''சமர்த்தா நடந்துக்க. ரெண்டு மாசத்துக்குள்ளே விசேஷ செய்திய சொல்லு! இல்லேன்னா... அடுத்து ஆடி வந்திடுது. அதுவேறு சீர்... கீர்னு என் புருஷனுக்கு செலவு வச்சிடாதே!'' என்றாள்.

அனு அவமானத்தால் கூனிக் குறுகிப் போனாள்!

## 12

''ஒரு நிமிஷம்... இப்படி வாம்மா அனு!'' ரஞ்சனின் தாயார் வேதா அழைத்தாள்.

அவள் கையில், பாதாமும், குங்குமப் பூவும் போட்டு சுண்டக் காய்ச்சிய பால் அடங்கிய வெள்ளிக் குவளை இருந்தது.

அனு அவள் காலைத் தொட்டு வணங்கினாள்.

''தீர்க்காயுசா... தீர்க்க சுமங்கலியா இரும்மா! முதல்ல இதைப்பிடி!'' சலங்கை ஒலி எழுப்பிய வெள்ளி கொத்துச் சாவியை அவளிடம் நீட்டினாள்.

''எ... என்ன இது?'' என்றாள் சங்கடமாய்.

''இந்த வீடு மட்டுமல்ல... என் மகனையும் இனி நீதான் கவனிச்சுக்கப் போகிறே! பிடிம்மா. பெருமைக்காக சொல்ல வில்லை... நிஜமாகவே ரஞ்சன் மேல் ஒரு அருமையான பிள்ளையைப் பார்க்கவே முடியாது. பொய் சொல்றவங் களை மட்டும் மன்னிக்கவே மாட்டான். அவன் மனம் புரிந்து நல்லபடி நடந்துக்கம்மா! இந்தா... இதையும் பிடி! மத்த விஷயங்களை உங்க அண்ணி சொல்லியிருப் பாங்கன்னு நினைக்கிறேன்!'' என்றாள் சிரித்தபடி.

குவளையைப் பெற்றுக் கொண்டவளின் இதயம் தடதடத்தது.

''இந்தக் காலத்துப் பொண்ணுங்களுக்கு நாம என்ன சொல்லித் தர்றது? அதான் புத்தகத்திலேயும், டி.வி.யி லேயும் பார்த்துத் தெரிஞ்சுக்கறாங்களே!'' என்றாள் விமலா.

''அதுவும் சரிதான்! உனக்குக் கல்யாணமாகி ரெண்டு வருஷம்தானே ஆச்சு? இந்தக் காலத்துப் பொண்ணு தானே? நீயும், புத்தகம் படிச்சுதான் தெரிஞ்சுகிட்டியா?'' சாதாரணமாய் சிரித்தபடி வேதா கேட்டாலும், சுருக்கென தைத்தது விமலாவுக்கு.



'பணக்கார குசும்புங்கறது இதுதானா? அனுவின் எதிரி லேயே மூக்கறுத்து விட்டாளே! மாமியார்க்காரி அப்படி சொன்னதும் இவள் முகத்திலும் தான் எவ்வளவு சந் தோஷம்? அப்புறம் வச்சுக்கறேன் உன்னை!' கறுவிக் கொண்டவள் மோகனாவைப் பார்த்து அலட்டலாய்ச் சிரித்தாள்.

''அ... அப்படியெல்லாமில்லே... பாலுக்கும், தண் ணீருக்கும் வித்தியாசம் தெரியாத வெகுளிப் பெண்ணாய் தான் நான் வளர்ந்தேன். சொல்லப் போனா... இன்னும் கூட எனக்கு சமைக்கத் தெரியாது. அனு சமையல்ல கெட்டி! வெளுத்து வாங்குவா...!''

''என் பிள்ளை ரொம்ப கொடுத்து வச்சவன்னு சொல்லு'' என்று மருமகளின் கன்னத்தை வருடி பாராட்டு சான்றிதழைக் கொடுக்க...

விமலாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

''நேரமாகலையா? உங்க பிள்ளை வந்து அனுப்பி வைம்மான்னு கேட்கறதுக்குள்ளே உள்ளே அனுப்பி வையுங்க!''

''அதுவும் சரிதான்! இதோப் பாரும்மா அனு. சரியா பத்து மாசம்தான் உனக்கு கெடு! அதுக்குள்ளே வட்டியும், முதலுமா எனக்கொரு பேரப்பிள்ளை வந்தாகணும். சொல்லிட்டேன்!'' முகத்தை கடினமாக வைத்திருப்பது போல் பாவனை செய்தாள்.

உள்ளுக்குள் உதறலெடுத்த பயத்தை மீறி அனுவை வெட்கம் பிடுங்கித் தின்றது.

மெல்ல அடியெடுத்து... கொலுசுச் சப்தம் ஒலிக்க கதவைத் திறந்து அறைக்குள் சென்றவளின் பின்னே... இன்பக் கனவுகளும் தொடர்ந்து சென்றன.

விமலாவுக்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லை. அனுவை தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டாடும் மோகனாவைப் பார்க்கையில்... கண்களில் காரம் உறைத்தது. இதுப் போல் ஒரு நாளும் என் மாமியார் பிரியமாய் இருந்ததில்லையே'' என்று ஆதங்கப்பட்டாள்.

அதற்கெல்லாம் காரணம் தன் அகங்கார போக்குதான் என்பதை உணர மறுத்தாள்.

கூடத்தில் அமர்ந்து கோழித் தூக்கம் போட்டுக் கொண்டிருந்த மகேந்திரனின் தோளைப் பற்றி உலுக்கினாள்.

''என்ன இது அசிங்கமா நாற்காலியிலேயே உட்கார்ந்தபடி தூங்கறீங்க?''

''பயங்கர அசதி விமலா. ஒரு போர்வை கேள். அப்படி ஓரமா படுத்துக்கறேன்!''

''என்னது படுத்துக்கப் போறீங்களா? கிளம்புங்க வீட்டுக்குப் போகலாம்!''

''வீட்டுக்கா? என்ன விமலா புரியாமப் பேசறே?''

''எல்லாம் புரிஞ்சுதான் பேசறேன். இங்கே உட்கார்ந்துக்கிட்டு என்ன பண்ணப் போகிறோம்? நம்ம வீட்டுக்கு போய் தூங்கலாம்... கிளம்புங்க!''

''இவங்க தப்பா நினைச்சுக்க மாட்டாங்களா?''

''இங்கே இருந்தாதான் தப்பு! புறப்படுங்கன்னா... இவ்வளவு விவாதம் பண்ணிட்டிருக்கீங்க?''

அவளின் குரல் உயரவும்... மேற்கொண்டு ரசாபாசமாகி விடக்கூடாதென்று அவளோடு புறப்பட்டான் மகேந்திரன்.

* * *



விசாலமான அறை அது! நட்சத்திர ஓட்டலின் அறை போன்று நேர்த்தியான உள் அலங்காரத்துடன் இருந்தது... மேலும் அழகூட்டப்பட்டிருந்தது.

சாட்டின் போர்வை விரிக்கப்பட்டிருந்த கட்டில் மீது மனம் மயங்கும் மல்லிகைப் பூக்கள் இறைக்கப் பட்டிருந்தன. கட்டிலைச் சுற்றி சரம் சரமாய் ரோஜாப் பந்தல். போதாததற்கு ஏசியோடு கலந்திருந்த ரூம் ஸ்ப்ரேயர்.

தட்டில் பழங்கள், இனிப்பு வகை.

அங்காரப் பதுமையாய் உள் நுழைந்த காதல் மனைவியை கிறக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் மிதுன்.

வெண்பட்டுப் புடவையும் சில நகைகளும் மாலினியை தேவதையாக்கி விட்டிருந்தது.

பத்தாவது முறையாய்... அணிந்து பழக்கமில்லாத பட்டு வேட்டி இடுப்பை விட்டு விலக... மறுபடி இறுக்கி கட்டிக் கொண்டு ''வா... மாலினி'' என்றான்.

நெருங்கிய மாலினி அவன் காலில் விழ, ''அட.... என் இதெல்லாம்...'' என்று தடுத்து அவனும் குனிய... மறுபடி வேட்டி அவிழ... ஒரு கையால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

நிமிர்ந்த மாலினி களுக்கென்று சிரித்து விட்டாள்.

''எனக்குப் பழக்கமில்லாத உடை இது!'' சங்கடமாய் சிரித்த மிதுன் சரிப்பண்ணிக் கொண்டு கட்டிலில் அமர்ந்தான், அவளையும் அமர வைத்தான்.

மாலினியின் உடம்பில் அவன் கரம் பட்டு இரத்தம் அசுர வேகத்தில் சூடேறியது.

''எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கு மாலு... பிடிச்சிருக்கா? இனி உன்னை இப்படித்தான் கூப்பிடப்

போகிறேன்!'' அவள் கையை எடுத்து தன் கைகளுக்குள் பொத்திக் கொண்டான்.

''ம்...!'' என்றாள் சிவந்த முகத்துடன்.

''வாழ்க்கையில் நான் ஆசைப்பட்ட விஷயங்கள் அத்தனையும் கிடைத்திருக்கிறது... ஒன்றைத் தவிர...''

''............?!''

''அம்மா! அம்மா மட்டும் உயிரோடிருந்தால் அந்த பாசத்தையும் முழுமையாக அனுபவித்திருப்பேன்! உனக்கொன்று தெரியுமா மாலு? நீ என் அம்மா சாயலோட இருக்கிறே! உன்னைப் பார்க்கிறதுக்கு முன்பே எனக்கு மனைவியா வரப்போகிறவ இப்படித்தான் இருக்கணும்னு மனசுக்குள் நான் வரைஞ்ச அதே பெண்ணாய் உன்னை முதன் முதலா பார்த்தப்ப... என்னால நம்பவே முடியலை...''

''இப்பக்கூட என்னால நம்ப முடியலை... நிஜமாகவே நமக்குக் கல்யாணமாகி, என் பக்கத்திலே நீ உட்கார்ந்திருக்கிறதெல்லாம் கனவு போலிருக்கு மாலு!''

''..........?!''

''நான் ஆசைப்பட்ட பெண்ணே மனைவியாய் கிடைச்சதை எண்ணுகிறப்ப... கடவுள் மேலே நிறைய நம்பிக்கை வருது... நான் கடவுளால் நிறையவே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன் மாலு!''

''என்னங்க நீங்க... பெரிய வார்த்தையெல்லாம் பேசறீங்க. நானில்லே சொல்லணும் இதையெல்லாம் பெத்தவங்க யாருன்னே தெரியாம அனாதை ஆஸ்ரமத்திலே வளர்ந்த எனக்கு இப்படியொரு வாழ்க்கை கிடைச்சிருக்குன்னா... எத்தனை ஜென்மத்துல செய்த புண்ணியமோ?'' கண்களில் வைரத் துண்டுகளாய் கண்ணீர் பளபளத்தது.



''சேச்சே... என்னடா இது? முத முதலா வாழ்க்கையைத் துவங்கப் போகிறோம்... கண் கலங்கிக்கிட்டு... கண்ணைத் துடை முதல்ல. சரி... அந்தப் பேச்சு வேண்டாம். குடும்பத் தலைவனா ஆகிட்டேன். எப்படி குடும்பத்தைப் பெருக்கறதுன்னு பேசி முடிவெடுத்துட்டு... அதற்கான ஆக்கப் பூர்வமான நடவடிக்கையிலே இறங்குவோமா?'' குறும்பும், குறுகுறுப்புமாய் பார்வையால் அவளைத் துளைத்தான்.

''ச்சீய்...!'' கரங்களால் முகத்தை பொத்திக் கொண்டாள்.

''அட... இப்படி வெக்கப்பட்டா எப்படி? அப்படி என்ன சொல்லிட்டேன் நான்?''

''.........?''

''நாம தேனிலவு கொண்டாட சுவிட்சர்லாந்து போக எல்லா ஏற்பாடும் பண்ணிட்டார் உன் மாமனார். அவர் உடம்புக்கு முடியாதப்ப அவரை விட்டுட்டு வெளிநாடு போக... மனசு கேக்கலே. அதனால கேன்சல் பண்ணிட்டேன்!''

''நல்ல காரியம் பண்ணீங்க!''

''ஆனா. அப்பாவுக்கு மனசு வருத்தம்தான். தன் குடும்ப வாரிசு குளுகுளு பிரதேசத்துல உருவாகணும்னு ஆசைப்பட்டுட்டார்... இப்ப என்ன பண்ணலாம்? நீயே சொல்லு!''

''கடவுளே!'' அவன் பேச்சில் பொதிந்திருந்த அர்த்தம் உணர்ந்து ஏகத்திற்கு வெட்கப்பட்டாள்.

''நாளன்னிக்கு மூணாறு போகிறோம். அங்கேயும் குளுகுளுன்னு தான் இருக்கும். வாழ்க்கையை அங்கே

ஆரம்பிக்கலாமா? இல்லே... இந்த அறையே ஊட்டி மாதிரிதான் இருக்குங்க... இங்கேயே ஆரம்பிச்சிடலாம்னு சொல்வியா?''

''ச்சீய்...!'' வெட்கம் தாளாமல் அவன் தோளில் முகம் புதைத்துக் கொள்ள... இறுக அணைத்துக் கொண்டான் மிதுன்.

''சரி... சரி... புரியுது. என் குடும்பத் தலைவி சிக்னல் கொடுத்துட்டா!'' உற்சாகமாய் கத்தியபடி விளக்கை அணைத்தான் மிதுன்.

* * *

திவாகரும், முகிலனும், கோபியை ஆச்சர்யமாகப் பார்த்தனர்.

இன்று அனுவின் திருமணம் நடந்து முடிந்து விட்டது. அதை எண்ணி எண்ணி வேதனைப்பட்டு சாப்பிடாமல் கதவை மூடிக் கொண்டு கண்ணீர் விட்டுக் கொண்டிருப் பான் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக... நண்பர்களை அழைத்து உயர்வகை ஓட்டலில் மதுபானம், பிரியாணி அது இது என்று விருந்து வைக்கிறான் என்றால்?''

''என்ன முகில் அப்படிப் பார்க்கிறே? பிரியாணி சூப்பரா இருக்கு... சாப்பிடு...!''

''நிஜமாகவே கோபிதானா நீ?''

''என்ன சந்தேகம்?''

''எதுக்கிப்போ இந்த விருந்து?'' என்று கேட்டான் திவாகர்.

''அனுவுக்கு கல்யாணம்டா! என் அனுவாச்சே? ரெண்டு வருஷம் பயங்கரமா காதலிச்சேன்டா. அவளுக் குக் கல்யாணம். அதுக்காகத்தான் இந்த விருந்து!''



''நீ நினைச்சது நடக்கலே. காதல் கைகூடலே. பிறகேன் விருந்து? உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலே!''

''நான் எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறேன் தெரியுமா? அதான் உங்களோட பகிர்ந்துக்கறேன்!''

முகிலனும் திவாகரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''சும்மா சொல்லக் கூடாதுடா... அனுவோட புருஷன்... சினிமா கதாநாயகன் மாதிரி அழகாயிருக்கான்டா!''

''நீ கல்யாணத்துக்குப் போயிருந்தியா?'' அதிர்ச்சி யுடன் கேட்டான் திவாகர்.

''ஏன் போகக்கூடாதா? பரிசுக் கூட கொடுத்தேன். ஆனா, தூர இருந்தே பார்த்தேன். பெரிய இடத்து சம்பந்தம். அதான் அனு... என்னை தூக்கியெறிஞ்சிட்டா.''

''..........?!''

''ஆனா... குளவிக் கூட்டை கலைச்சா என்னாகும்?'' கண்களில் வெறி மின்ன நக்கலாய்க் கேட்டான் கோபி.

''..........?!''

''அனு கலைச்சிட்டா... பாவம்... கொட்டப் போகுது!'' பயங்கரமாய் சிரித்தான்.

நண்பர்களுக்குப் புரிந்து விட்டது.

* * *

அனுவிற்கு உடம்பெல்லாம் உதறியது. தன்னோடு சேர்த்தணைத்திருந்த ரஞ்சன் வியந்தான்.

''என்ன அனு?''

''ஒ... ஒண்ணுமில்லே...!''

''பதட்டமாயிருக்கா?''

''ம்... த... தலைவலிக்குது!''

''சரி... பேசிக்கிட்டிருக்கலாமா?''

''ம்...!''

''ரஞ்சன் எழுந்தமர்ந்து மிருதுவானப் புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

ஒரு பக்கமாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பரிசு பார்சல் மீது பார்வை போனது.

''உருப்படியாய் ஒரு வேலை செய்வோமா? இந்த பார்சல்களை பிரித்துப் பார்ப்போமா?''

''ம்...!''

எழுந்தான் ரஞ்சன்.

# 13

குவிந்திருந்த பரிசுப் பார்சல்களில் முன் நின்றவன்... இடுப்பில் கைவைத்து பெருமூச்சு விட்டான்.

''இதையெல்லாம் பிரித்துப் பார்ப்பதற்குள் விடிந்தேப் போய்விடும் போலிருக்கே!''

''.....?!''

''சரி... நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்!'' என்றபடி தன் புது மனைவியின் பக்கத்தில் வந்தமர்ந்தான் ரஞ்சன்.

அவளை விழுங்கி விடுபவனைப் போல் பார்த்தான்.



எதிர்நோக்கும் திடமின்றி தலை கவிழ்ந்தாள் அனு.

தோளில் கைப்போட்டு மெல்ல அணைத்தான்.

நடுக்கம் இன்னும் குறையவில்லை.

வியப்புடன் நோக்கியவன், ''என்ன அனு பயமா இருக்கா?''

''ஆமா... இ.. இல்லே!''

''ஏன் இவ்வளவு தடுமாற்றம்?''

''ஒ... ஒண்ணுமில்லீங்க!''

''நான் என்ன புதியவனா? நன்கு பேசி பழகியிருக்கிறோம் அல்லவா? உன்னிடம் வெட்கத்தை விட பயத்தைத்தான் அதிகம் காண்கிறேன்!'' என்றபடி அவளை ஆழமாய் நோக்கினான்.

'கடவுளே... என்னை காட்டிக் கொடுத்து விடாதே! என் பயத்தைப் போக்கு!'

''அப்படியெல்லாமில்லீங்க... இந்த சூழ்நிலை... ஒரு மாதிரி...!''

மனைவியின் அறியாமையை ரசித்தான்.

''சரி... சரி... நான் உன்னை எதற்காகவும் கட்டாயப் படுத்தப் போறதில்லை. உன் பயம் விலகும் வரை, உன் பதட்டம் மறையும் வரை காத்திருக்கிறேன்... சரியா?''

''ம்...!''

''உனக்கு என்னவெல்லாம் பிடிக்கும்?''

''எனக்கென்று தனிப்பட்ட விருப்பமென்று இனி எதுவுமில்லை. உங்களுக்கு எதெல்லாம் பிடிக்குமோ... அதுதான் எனக்கும் பிடிக்கும்.''

''......?''

''பெண்கள் இப்படி இருப்பதுதான் நல்லது. என்றாலும் நான் ஆசைப்பட்டு உனக்கு எதையாவது வாங்கித் தர நினைப்பேன். அதற்காகவாவது உனக்கு பிடித்தவை களை தெரிந்து கொள்வது நல்லதல்லவா?''

''நீங்கள் ஆசைப்பட்டு என்ன வாங்கிக் கொடுத்தாலும் அன்புடன் வாங்கிக் கொள்வேன்!''

''இதற்குதான் தலையணை மந்திரம் என்பார்களோ?''

''எதை?'' என்றாள் புரியாமல்.

''என் இதயத்தை எடுத்து உன் காலடியில் சமர்ப்பிக்க வேண்டும் போல் அழகாக பேசுகறாயே... அதை...''

''சேச்சே... நானல்லவா உங்கள் காலடியில் வீழ்ந்து கிடக்க வேண்டும்? நான் எப்படியெல்லாம் நடந்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?''

''என்னைக் கட்டுப்பெட்டி என்று எண்ணிவிட மாட்டாயே!''

''சேச்சே... நானே அப்படித்தானே வளர்ந்தேன்!''

''ரொம்ப நல்லதாப் போச்சு! அதிகாலையிலேயே எந்திரிச்சிடணும்!''

''எப்பவுமே அதிகாலையில் எழுவதுதான் வழக்கம்!''

''எழுந்ததும் குளிச்சிட்டு, வாசல் பெருக்கி கோலம் போடணும். முக்கியமா மஞ்சள் பூசி குளிக்கணும்.''

அனு தன் கணவனை இமைக்காமல் பார்த்தாள்.

''காலையிலேயே பூஜையை முடிச்சிட்டுதான் சமைக் கப் போகணும். அலுவலக யோசனையிலே சில சமயம் எனக்கு சாப்பிடப் பிடிக்காது. அப்பவெல்லாம் தாஜா பண்ணி நீதான் எனக்கு ஊட்டி விடணும்!''



''..........!''

''வீட்டிலும் நீ சேலைதான் உடுத்தணும். இரவு உடை நம் கலாச்சாரத்திற்கு எதிரானது என்பது என் கருத்து. வெளியில் செல்லும்போது சேலை தவிர, சுடிதார் அணிய லாம்!''

''சரிங்க...!''

''இன்னொரு முக்கியமான விஷயம்!''

''சொல்லுங்க!''

''அவசியமின்றி, அநாவசியமாய் பிற ஆண்களிடம் பேசக்கூடாது.''

''.........?!''

''எனக்கு சொந்தமான உன் மீது வக்கிர புத்தியுள்ள ஆண்களின் பார்வை படக்கூடாது.''

அந்த வார்த்தை அனுவை சங்கடப்படுத்தியது.

'இவரென்ன... இவ்வளவு குறுகிய மனப்பான்மை உள்ளவராய் இருக்கிறாரே! எந்த துறையை எடுத்துக் கொண்டாலும் இருபாலாரும் சேர்ந்தல்லவா பணியாற்று கிறார்கள்? அன்றாட நடைமுறை வாழ்க்கையில் கூட வேலைக்குச் செல்லாத பெண்கள் பல ஆண்களுடன் பேச வேண்டிய சூழ்நிலை உள்ளதே!' உள்ளத்தின் ஓரம் பயம் முளை விட்டது.

''என்ன அனு... என்ன இவர் குறுகிய மனப்பான்மை யுடன் பேசுகிறாரே என்று யோசிக்கிறாயா? என்னை சந்தேக புத்தி கொண்டவன் என்று தீர்மானித்து விடாதே! அவசியமின்றி ஆண்களிடம் பேச வேண்டாம் என்று தான் கூறினேனேயொழிய... அவசியப்பட்டால் பேச

வேண்டாம் என்று கூறவில்லை. நான் உன்னை அளவுக் கதிகமாய் நேசிக்கிறேன் அனு! உன் மீது எவர் கண்ணும் பட்டு விடக் கூடாது. அதனால்தான் வேலைக்குப் போக வேண்டாம் என்றேன்'' அவன் தயவாய், கிசுகிசுப்பாய் கூற...

உருகிப் போனாள் அனு!

''இவருக்கு என் மீது இவ்வளவு நேசமா?'' நெஞ்சம் விம்மித் தணிந்தது. அதுவரை சூழ்ந்திருந்த பதட்டம் குறையத் தொடங்கியது. வீட்டைப் பற்றிய பயம் சிந்தையிலிருந்து நகர்ந்தது.

ரஞ்சன் சற்றே நகர்ந்து நெருங்கினான். அவள் கையைப் பற்றி நெஞ்சில் வைத்துக் கொண்டான்.

''என் ஆசைகள் சராசரியானவை தான் அனு! அதற்காக என்னைத் தவறாக எடை போட்டு விட மாட்டாயே!''

''ஊகூம்!'' என்றவள் மெல்ல அவன் தோளில் தலை சாய்த்தாள்.

அது போதுமே ரஞ்சனுக்கு!

இடக்கரத்தால் வளைத்து தன்னோடு நெருக்கினான்.

அனு புதிய சுகத்தில் கண்மூட.... நெற்றியில் முத்தமிட்டான் ரஞ்சன்.

கிறங்கிப்போன அனு... தன்னை மறந்தாள்.

* * *

கற்பூர வாசனையும், சாம்பிராணி வாசமும் மூக்கை நெருட வேதா கண் விழித்தாள். பக்கத்தில் படுத்திருந்த அவளின் கணவர் பரமேஸ்வரனும் அசைந்தார்.

''வேதா...'' என்றார் கண்களைத் திறவாமலேயே.



''என்னங்க?''

''ஏதோ புகையிற வாசம் வரலே?''

''புகையுற வாசமில்லே... சாம்பிராணி வாசம்தான் வருது!''

''என்னன்னு எந்திரிச்சு போய்தான் பார்த்துட்டு வாயேன்!''

அவிழ்ந்திருந்த கொண்டையை சரி பண்ணிக் கொண்டு வெளியில் வந்தவளின் முகம் ஆச்சர்யத்தில் அகன்றது.

அனு குளித்து முடித்து பூஜையறையில் தீபாராதனை காட்டிக் கொண்டிருந்தாள்.

கண் மூடி பிரார்த்தித்து விட்டு வெளியில் வந்தவள் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த அத்தையைப் பார்த்து விட்டுச் சிரித்தபடி அருகில் வந்தாள்.

''எந்திரிச்சிட்டீங்களா அத்தை? பல் விளக்கிட்டு வந்திடறீங்களா... காபி போட்டுக் கொண்டு வர்றேன்!''

''அஞ்சு நிமிஷம் போகட்டும் அனு! சீக்கிரமே எந்திரிச்சிட்டியா என்ன?''

''ஆமாம் அத்தை... பழகிப் போச்சு!''

''சும்மா சொல்லக் கூடாதும்மா... இந்த வீடு இப்ப தான் பளிச்சுன்னு இருக்கு... எல்லாம் நீ வந்த நேரம் அனு!'' என்றபடி வந்தார் பரமேஸ்வரன்.

''என்ன மாமா நீங்க?'' என்றாள் வெட்கத்துடன்.

''நிஜத்தைதாம்மா சொல்றேன்! மதுரையிலே சொந்த வீடு இருக்கு. அதிலே விசாலமான பூஜையறையும் உண்டு. ஆனா, ஒரு நாள் கூட உன் மாமியார் காலையிலே எந்திரிச்சு பூஜை பண்ணி நான் பார்த்ததில்லை. என் வீடு சாம்பிராணி புகையைக் கூட கண்டதில்லை!''

''என்னைப் பத்தி குறை சொல்லலேன்னா... பொழுதே போகாதே உங்களுக்கு! நான் என்ன பண்ணட்டும் அனு? உடம்பிலே ஏகப்பட்ட வியாதி. மாத்திரை விழுங்க லேன்னா தூக்கம் வராது. எப்படிம்மா என்னால அதிகாலைல எந்திரிக்க முடியும்?''

''தவறாக எண்ணலேன்னா ஒரு விஷயம் கேக்கலாமா மாமா?''

''சொல்லும்மா!''

''நீங்களும், அத்தையும் தனியே எதற்கு மதுரையிலே இருக்கணும்? இங்கேயே இருக்கலாமே! உங்க மனசு குளிர பணிவிடை செய்ய நான் இருக்கிறப்ப...''

பரமேஸ்வரன் மருமகளை கனிவுடன் பார்த்தார்.

''கேக்கவே சந்தோஷமா இருக்கு தாயி! என் மருமகளே கேட்டுட்டப் பிறகு மறுப்பேனா? பிறந்து வளர்ந்த வீடு அது! இருக்கட்டும்! பரவாயில்லை. வித்துடலாம். ஒண் ணரை வருஷம் பொறுத்துக்கம்மா. வேலையிலிருந்து ரிடையராகிடுவேன். ஆனதும் நேரே இங்கே வந்துட றோம். நீ என்ன சொல்றே வேதா?''

''பாரேன் அனு இந்த மனுஷனை? நானும் என் பிள்ளையும் பலகாலமா இதே பல்லவியதான் விடாமப் பாடினோம். காதுலே வாங்கினாரா? இப்ப... மருமகள் சொன்னதும் சரணாகதியாய்ட்டாரே!''

''வயசான காலத்துல மகன், மருமகள், பேரப்பிள்ளைங் கன்னு அதுங்ககூட காலத்தைக் கழிக்கிறதுலதான்டி சுகமே இருக்கு. இப்ப நாம மட்டும் என்ன, முதியோர் இல்லத்துல வாழற மாதிரி தனியாத்தானே வாழ்ந்திட்டிருக்கோம். தவிர...''



''.........?!''

''உன் முகத்தையே பார்த்து, பார்த்து போரடிச்சுப போச்சு.''

''பாவி மனுஷா!'' செல்லமாய் கையை ஓங்கினான் வேதா.

காலம் கடந்தும் ரசனை மாறாமல், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துக் கொண்டு வாழ்க்கை நடத்தும் அந்த தம்பதிகளின் அன்பு நெகிழச் செய்தது.

* * *

''அனு...'' குளியலறையிலிருந்து குரல் கொடுத்தான் ரஞ்சன்.

''என்னங்க?''

''துவாலை எடுக்க மறந்துட்டேன். சீக்கிரம் கொண்டு வா!''

படுக்கை விரிப்பை மடித்துக் கொண்டிருந்த அனு, அப்படியே போட்டு விட்டு துவாலையுடன் ஓடினாள்.

திறந்த கதவு... துவாலையுடன் அவளையும் உள் ளிழுத்துக் கொண்டு மூடிக் கொள்ள...

ஐந்து நிமிடத்திற்குப் பிறகு... முகத்தில் அதீத வெட்கத் துடன் முழுக்க நனைந்தபடி வெளிப்பட்டாள் மூச்சிரைக்க.

''தனியா குளிக்கிறாளாம்... தனியா! இனி என் கூட சேர்ந்துதான் குளிக்கணும் சரியா?'' என்றான் ரஞ்சன்.

''ச்சீய்...!'' வெட்கத்துடன் முகத்தை பொத்திக் கொண்ட அனுவை கட்டிலில் தள்ளி விட்டான்.

அவனும் விழுந்தான்.

* * *

பகல் பொழுது!

அனுவின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தான் ரஞ்சன்.

அவள் கையைப் பற்றி உள்ளங்கையில் முத்த மிட்டான்.

நெளிந்தாள்.

''நான் அதிர்ஷ்டக்காரன் அனு! என் மனசுக்கேற்ற வளாய் வாய்ச்சிருக்கே!''

''உங்களை விட நான் தான் யோகக்காரி. அற்புதமான கணவன், அருமையான மாமனார், மாமியார்னு நல்ல வாழ்க்கை அமைஞ்சிருக்கே?''

''சும்மா சொல்லக்கூடாது... அருமையா சமைக்கிறே! அப்பாவும், அம்மாவும் உன்னை வாயார புகழ்றாங்க. எனக்கு இதைவிட வேறென்ன வேணும் சொல்லு!''

அவன் கரத்தைப் பற்றி கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டாள் அனு.

''மாலை நாம் கோவிலுக்குப் போய்ட்டு அப்படியே நகைக் கடைக்குப் போகிறோம்!''

''எதற்கு?''

''ரொம்ப சந்தோஷமாயிருக்கேன். என் பொண்டாட் டிக்கு ஏதாவது பரிசு தரணும்னு நினைக்கிறேன்!''

''அதெல்லாம் எதுக்குங்க?''

''மூச்... பேசக்கூடாது...'' அவள் இடுப்பில் கை போட்டு இழுத்தான்.

''ம்... விடுங்க... பரிசுப் பார்சலை பிரிக்கவே இல்லையே?'' அவனிடமிருந்து விடுபட்டு, நினைவு படுத்தினாள்.



''அட... ஆமாம்! எத்தனை பேர் கிலுகிலுப்பையும், பால் பாட்டிலும் அனுப்பியிருப்பானுங்களோ... வா... பிரித்துப் பார்ப்போம்!'

அடுக்கியிருந்த பரிசுப் பார்சல்களின் அருகே சென்றான் ரஞ்சன்.

அனுவும் சென்றாள்... அதில் வைக்கப்பட்டுள்ள வெடி குண்டு பற்றி அறியாமல்!

# 14

''நீயும் எங்களோட உட்கார்ந்து சாப்பிடேன்ம்மா!'' என்றார் பரிமாறிய மருமகளிடம் அருணாச்சலம்.

''ஆமாம்... நீயும் எங்களோட சாப்பிடேன் மாலு!'' என்றான் மிதுன்.

''எனக்கென்னங்க அவசரம்? உங்க ரெண்டு பேருக் கும் இப்படி பரிமாறுவது ரொம்ப பிடிச்சிருக்கு. மணி யடிச்சதும் தட்டை எடுத்துக்கிட்டு, போடறதை சாப்பிட்டு வாழ்ந்த விடுதி வாழ்க்கையிலிருந்து முற்றிலும் வித்தி யாசமான அனுபவம் இது! தவிர, உங்க ரெண்டு பேருக்கும் எது பிடிச்சிருக்கு எது பிடிக்கலைன்னு தெரிஞ் சுக்கலாமே!''

''இனி, விடுதி வாழ்க்கையை பத்தி பேசாதேம்மா, பாவம்.. எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கே? தலைவலி,

காய்ச்சல்ன்னாக் கூட தாய்மடி தேடிப்படுக்க உனக்கொரு உறவும் இல்லாம வளர்ந்த வலி.. எங்களால புரிஞ்சுக்க முடியுது மாலினி. கடவுளுக்கு உன்னை ரொம்ப பிடிச் சிருக்கு. அதனாலதான் நீ எங்ககிட்டே வந்து சேர்ந் திருக்கே. உனக்கு எந்த குறையும் இருக்காது. பாசத்தைக் கொட்ட நாங்க இருக்கோமே!''

மாமனாரின் அனுசரணையான வார்த்தையில் நெக் குருகிப்போனாள் மாலினி.

''இப்ப நான் வாழறவாழ்க்கையை இந்த நிமிஷம் கூட கனவா, நனவான்னு நம்ப முடியலை மாமா! இன்னொரு இட்லி வைக்கவா?''

''வேணாம்மா.. பொங்கல் நல்லாயிருக்கு... அதை வை!''

''பொங்கல்ல... நெய் அதிகமாயிருக்கு. உங்களுக்கு ஆகாது. இட்லிய வச்சுக்குங்க!'' அவளாகவே இட்லியை வைத்து சாம்பார் ஊற்றினாள்.

''என்னம்மா இப்படி பண்ணிட்டே?''

''நீங்க என்மேலே அக்கறை காட்டலாம்.. நான் உங்க மேலே அக்கறை காட்டக் கூடாதா? இனி உங்களுக்கு தேவையான பத்திய சாப்பாடெல்லாம் நானே என் கையால்தான் சமைப்பேன்!''

''என்னடா மிதுன் உன் பொண்டாட்டி பயங்காட்டறா?'' பரிதாபமாய் விழித்தார் அருணாச்சலம்.

''இத்தனை வருஷமும் நம்ம வீட்டு வேலைக்காரங் களுக்கு தண்ணி காண்பிச்சிங்களே.. இப்ப மாட்டிக்கிட் டீங்களா? இந்த விஷயத்திலே நான் தலையிடமாட் டேன்.. நீங்களாச்சு, உங்க மருமகளாச்சு!'' என்றான் ருசித்து சாப்பிட்டபடி மிதுன்.



''என்னடா நீயும் இப்படி பேசறே? கடைசி காலத்திலே வாய்க்கு ருசியா சாப்பிட்டுட்டு போறேனே...!''

''அதென்ன கடைசி காலம்? உங்க பேரக்குழந்தைங்க கல்யாணத்தையெல்லாம் நடத்தி வைக்க வேணாமா? அதுவரைக்கும் வாய்க்கு ருசியா பத்திய சாப்பாடை சமைச்சி போடறேன்!''

''நேத்துதான் கல்யாணமாச்சு! இப்பவே இந்த வேலை எல்லாம் கவனிக்கணுமா? ஏன் மிதுன் தேனிலவுக்கு சுவிட்சர்லாந்து போகிற எண்ணமில்லையா உனக்கு? ரெண்டு மாசம் உலகத்தை சுத்திட்டு வாங்களேன்!''

''வெளிநாட்டுக்கு இப்போதைக்கு போகிற எண்ண மில்லைப்பா. பக்கத்திலே இருக்கிற மூணாறுக்கு போக லாம்னு நினைச்சிட்டு இருக்கோம்!''

''ஏன் மிதுன் பிடிவாதம் பிடிக்கறே? சில விஷயங் களை, சில சந்தோஷங்களை அனுபவிக்கிறதுக்குன்னு காலம் நேரம் உண்டு. நம்மகிட்டே வசதி வாய்ப்புக்கும் குறைச்சல் இல்லே. பிறகேன்?''

''உங்க உடம்புக்கு முடியாம இருக்கிறப்ப... கடல் தாண்டி போக மனசு வரலேப்பா. வற்புறுத்தாதீங்க. நம்ம நாட்டிலேயும் இயற்கை அழகு கொஞ்சும் இடங்கள் நிறைய இருக்கே. அதை உதாசீனப்படுத்திட்டு எதற்கு வெளிநாட்டுக்கு ஓடணும்!'' பக்குவமாய் பேசி அப்பா வின் வாயடைத்தான்.

''நல்லா பேச கத்துக்கிட்டே... என்னமோ செய்!'' எழுந்து கை கழுவச் சென்றார் அருணாச்சலம்.

அப்பா நகர்ந்ததும் சட்டென மாலினியின் இடுப்பில் கிள்ளினான் மிதுன்.

''ஆ''வென அலற முற்பட்டவளை இழுத்து அவன் வாயிலிருந்த வடையை, அவள் வாய்க்குள் அடைத்தான் வாயாலேயே!

''மாலினி.. துவாலை எங்கேம்மா?''

துவாலையுடன் சென்று நீட்டினாள்.

''என்ன பொண்ணும்மா நீ.. அவன்தான் அர்த்தமில்லாம பேசறான்னா... நீயும் வாயை மூடிக்கிட்டிருக்கியே...''

''..........?!'' விழுங்கக் கூட அவகாசமின்றி வாயை கெட்டியாக மூடிக்கொண்டு மாமனாரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''தேனிலவெல்லாம் வாழ்க்கையிலே ஒருமுறைதான் வரும். நம்ம ஊரை எப்ப வேணும்னாலும் பார்த்துக்கலாம். சுவிட்சர்லாந்து எவ்வளவு அழகான ஊர் தெரியுமா? நீ மிதுனை வற்புறுத்து. போயே ஆகணும்னு சொல்லு... என்ன?''

''ம்...''

''ஏம்மா ஒரு மாதிரியிருக்கே? என்னாச்சு உனக்கு?''

மாலினி கஷ்டப்பட்டு விழுங்கினாள்.

''ஒ... ஒண்ணுமில்லே மாமா!''

புரிந்துக் கொண்ட பெரியவர் வெட்கத்துடன் சிரித்தபடி நகர்ந்தார்.

''நீ போய் சாப்பிடும்மா!''



''கடவுளே.. மாமாவுக்கு தெரிஞ்சு போச்சு... எல்லாம் உங்களாலதான்!'' சிணுங்கியபடி கணவனின் அருகில் வந்தாள்.

''இனி, தினமும் நான்தான் உனக்கு ஊட்டி விடுவேணாம்... கிட்டேவா!'' இட்லியை விண்டு தன் வாயில் போட்டுக் கொண்ட மிதுன் குறும்புடன் அழைத்தான்.

''அய்யோ..நான் மாட்டேன்ப்பா!''

ஓட எத்தனித்தவளை ஒரே எட்டில் பிடித்து... அவள் முகத்தை நோக்கி குனிந்தான்.

* * *

தொலைக்காட்சி பெட்டியின் முன் அமர்ந்திருந்தான் கோபி.

படத்தில் வந்த நகைச்சுவைக்கு வாய்விட்டு சிரித்த மகனை... அப்போதுதான் உள்ளே நுழைந்த முருகேஸ்வரி ஆச்சர்யமாய் நோக்கினாள்.

கையிலிருந்த காய்கறிகள் அடங்கிய பிளாஸ்டிக் கூடையை ஓரமாய் வைத்து விட்டு.. அவனையே மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

திரும்பிய கோபி, ''என்னம்மா அப்படிப் பார்க்கிறே?'' என்றான்.

''ஒண்ணுமில்லேப்பா!''

''உன் மனசிலே நீ என்ன நினைக்கிறேன்னு நான் சொல்லட்டுமா?''

''..........?!''

''நேத்து அனுவுக்கு கல்யாணம் முடிஞ்சிடுச்சே.. இவன் சாப்பிடாம கொள்ளாம மூலையிலே சுருண்டு படுத்து கரையான் அரிக்கிற மாதிரி கவலைகள் அரிச்சு நாசமாய் போய்டுவான்னு பயந்ததுக்கு நேர்மாறா டி.வி. பார்த்துக்கிட்டு ஜாலியா சிரிச்சுக்கிட்டிருக்கானேன்னு ஆச்சர்யப்படறே.. சரியா?''

''சரியோ, தப்போ.. உன்னை இப்படிப் பார்க்கிறப்ப நிம்மதியா இருக்கு கோபி.''

''இந்த நிம்மதி தொடரும்மா. அதற்கு நான் உத்தர வாதம். சீக்கிரம் சமையல் பண்ணும்மா. சாப்பிட்டதும் வேலை விஷயமாய் பெரியப்பாவைப் போய் பார்க்க லாம்னு இருக்கேன்!''

உச்சிக் குளிர்ந்துப் போனாள் முருகேஸ்வரி.

''அரைமணி நேரம் பொறுத்துக்க கோபி... இதோ சமைக்க ஆரம்பிச்சிடறேன்!''

''சரிம்மா... எனக்கும் முக்கியமான வேலையிருக்கு. கோப்புக்குள்ளே சான்றிதழ்களை எல்லாம் ஒழுங்கா அடுக்கி வைக்கணும்!'' தொலைக்காட்சிப் பெட்டியை அணைத்து விட்டு தன்னறைக்குள் சென்றான்.

அலமாரியை திறந்து சிவப்பு நிற கோப்பு ஒன்றை எடுத்தான்.

அவனுக்கு அனு எழுதிய கத்தைக் கடிதங்களை ஒழுங்குப்படுத்தி அடுக்கி வைத்தான்.

இடையில்...

கோபியின் தோளோடு தோள் உரசியபடி அனு நின் றிருந்த புகைப்படம் இருந்தது.



எடுத்தவன், அதையே சில நிமிடங்கள் வெறித்துப் பார்த்தான்.

கண்களில் கரகரவென சுரந்தது.

'ஏமாத்திட்டியே அனு.. ஏமாத்திட்டியேடி பாவி! ஆனா.. உன்னை சும்மா மட்டும் விட்டுடவே மாட்டேன். நான் யார்னு இப்ப உன் புருஷனுக்கும் தெரிஞ்சிருக்குமே! இதுதான் ஆரம்பம். இனி போகப் போக என்ன நடக்கப் போகுதுன்னு பார். என் கூட வாழாத வாழ்க்கையை நீ எவன் கூடவும் வாழ அனுமதிக்க மாட்டேன்!'' கன்ன தசைகள் துடித்தன.

* * *

அனு ஒவ்வொரு பரிசு பார்சலையும் ரஞ்சனுக்கு வசதியாக கட்டிலின் மேல் வைத்தாள்.

புத்தம் புதிய மஞ்சள் கயிறின் மினுமினுப்பும், முகத் தின் பளபளப்பும், மனதை கிள்ளும் அழகுடன் இப்படி யும், அப்படியும் நகர்ந்த மனைவியை பார்க்கும் போது.. மலையாய் அமர்ந்திருந்த பரிசு பார்சல்கள் மலைப் பையும், சலிப்பையும் தந்தன.

பேப்பர் பிரித்து பரிசுப் பொருள் காணும் ஆவல் வடிந்து, தேவதையவளின் துகிலுரிக்கும் ஆசையுடன் பொருள் பொதிந்த பார்வையை வீசினான் ரஞ்சன்.

கண்டுவிட்ட அனு, பெருமிதப்பட்டாலும் கண்டும் காணாமல் காரியமே கண்ணானாள்.

''அனு...''

''என்னங்க?''

''அனு...''

''சொல்லுங்க!''

''இந்த வேலையை அப்புறம் வச்சுக்கலாம்.''

''ஏன்?''

''நீ இப்படி வா!''

''இன்னும் சற்று நேரத்தில் கோவிலுக்கு செல்ல வேண்டும். நினைவிருக்கட்டும். அதற்குள் இதை முடித்து விடுவோம்!''

சொல்லியதோடல்லாமல் ஒரு பார்சலை எடுத்து மடியில் வைத்து பிரிக்கவே ஆரம்பித்து விட்டாள்.

''பிடிவாதம் அதிகம் உனக்கு!'' அவனும் வேண்டா வெறுப்பாய் பிரிக்க ஆரம்பித்தான்.

''காலம் முழுக்க உங்களுடன்தான் இருக்கப் போகிறேன். என்ன அவசரமாம்!''

''அவ்வளவு ஆசை!''

''அதற்கும் காலநேரம் உண்டு!''

''அந்த விதி புதுமண தம்பதியர்க்கு தளர்த்தப்பட்டு விட்டது!''

''என் கணவர் நல்ல பேச்சாளர் என்பதில் மிக்க மகிழ்ச்சி.. அடடா.. அற்புதமான பரிசு!'' கண்ணாடியில் செய்யப்பட்ட இராமன் - சீதை சிலையை எடுத்தவள் விழியகன்றாள் ஆச்சர்யமாய்.

ரஞ்சனும் ஆர்வமாய் வாங்கிப் பார்த்தான்.

மற்றவற்றையும் பிரித்தனர்.



விதவிதமான வடிவங்களில் இரவு விளக்கு, குக்கர், கடிகாரம், சென்ட், இவற்றின் மத்தியில் குறும்புக்கார நண்பனொருவன் பெரிய அளவில் பூரிக்கட்டை அனுப்பியிருந்தான்.

ரசித்து, சிரித்தபடி அனுப்பியவர்களைப் பற்றிய விபரங்களை கூறிக் கொண்டிருந்த ரஞ்சன் அந்த பார்சலை எடுத்தான்.

அனுப்பியவரின் பெயர் 'கோபி' என்றிருக்க யோசித்தான்.

கோபியா? அப்படி யாரும் எனக்குத் தெரியாதே!

மெல்ல பிரிக்கத் தொடங்கினான்.

சின்னப்பெட்டி.

திறந்தான்.

உள்ளே இரண்டு கடிதம். ஒன்று புதுத்தாளில் ரஞ்சனுக்கு எழுதப்பட்ட கடிதம்.

குழப்பத்துடன் பிரித்தவன் அதிர்ந்தான்.

*''அணில் தின்ற பழம் ருசிக்கும்! நான் கடித்துப் போட்ட எச்சில் பழத்தை தின்னும் ரஞ்சனுக்கு என் பரிதாபமான வணக்கங்கள். சுற்றி வளைக்க விரும்பவில்லை. எனக்கும் உன் புதுமனைவி அனுவுக்கும் மூன்று வருட காதல்! வசதியும் வாய்ப்பும் அதிகமுள்ள நீ கிடைத்ததும் என்னை தூக்கி எறிந்து விட்டாள். ரோஷமுள்ள எந்த ஆணும் இப்படிப்பட்ட மனைவியுடன் வாழமாட்டான். அனு என் காதலி என்பதற்கு ஆதாரமாய் அவள்*

*எனக்கு எழுதிய கடிதத்தையும் இணைத்துள்ளேன். ஆதாரங்கள் இனி தொடரும்...''*

*இப்படிக்கு...*

*கோபி.*

உடல் வியர்த்தது, ரத்தம் கொதித்தது.

அடுத்த கடிதத்தை பிரித்தான்.

கணினியில் டைப் அடிக்கப்பட்டிருந்தது கடிதம்.

*''என்னுயிர் கோபி!*

*'இனி உன்னுடன் சினிமாவிற்கு வரமாட்டேன். கையும் சும்மாயிருப்பதில்லை. வாயும் சும்மா யிருப்பதில்லை. அப்படி என்ன வெறி? உன் பல் பட்டு என் கீழுதடு புண்பட்டு விட்டது. மற்றவர் களின் கேலிக்கும், கேள்விக்கும் ஆளாகி... சமாளிப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. ஆனாலும்.. திருடா.. என் இரவு உறக் கத்தை திருடி விட்டாய். பழுதுப்பட என் உதடும் துடிக்கிறது. ஆனால்... இனி.. திருமணத்திற்கு பிறகுதான்!'*

*உன்னவள்...*

*உன் அனு!*

பூமி இரண்டாய் பிளந்து ரஞ்சனை மட்டும் உள் வாங்குவதுப் போலிருக்க.. ''அனூ'' என்று கத்தினான் ரஞ்சன்.



# 15

இப்படியொரு மோசமான சூழ்நிலை ரஞ்சனின் வாழ்க்கையில் என்றுமே ஏற்பட்டதில்லை. உபயோகப் படுத்தும் பொருட்களைக் கூட பார்த்து பார்த்து தேர்வு செய்பவன். உயிர்பிரியும்வரை உடனிருக்கும் இல்லக் கிழத்தி இழிவானவள் என்று அறிந்தால்... எப்படி இருக்கும் அவனுக்கு?

ரத்தம் கொதித்து மண்டைக்கு ஏறியது.

கணவனின் கத்தலும், ஆவேசம் படர்ந்த முகமும் ஏதோ விபரீதம் என்று உணர்ந்துக் கொண்டாள் அனு.

''எ... என்னாச்சு?''

ஒன்றுமறியா அப்பாவியைப்போல் பேசிய அவளைப் பார்க்கையில் ஆத்திரம் அதிகரித்தது.

'பனித்துளிப்போல் களங்கமில்லா ஒரு பெண் மனைவி யாக வரவேண்டும்என்று காத்திருந்தது.. போயும், போயும் இவளுக்காகவா? எவ்வளவு பெரிய ஏமாற்றம்? நான் ஆரம்பத்திலேயே கேட்டேனே... காதல் அனுபவம் உண்டா என்று?! இல்லை என்றாளே! ஏமாற்று, பொய், புரட்டு, என்று மொத்த உருவமாய் என் மனைவியா? எவனோ காதலித்து, எவனோ தொட்டு, அனுபவித்த எச்சிலைப் போயா நான் மோகத்துடன்.. சீச்சீ...'

அவன் விகாரமுகம் மேலும் பயத்தைத்தர அவனைத் தொட்டு உலுக்கினாள்.

''என்னாச்சு உங்களுக்கு?''

''ச்சீ.. தொடாதே!''

''எ.. என்னது?'' திகைத்துப் போனாள்.

''ஏமாத்திட்டேயில்லே?''

''ஏமாத்தினேனா? நானா? யாரை?''

அதிர்ந்தாலும் பயந்தாள். 'மறைத்த உண்மை தெரிந்து விட்டதோ?'

''நடிக்காதே.. உன் பவிசு என்னன்னு எனக்கு தெரிஞ்சு போச்சு. அதான் புட்டு புட்டு வச்சிட்டானே உன் மாஜி காதலன்!''

''என்னது?'' பூமி சுற்றியது அவனுக்கு.

''போதும் நடிச்சது. படிச்சுப்பார் உன் கேவலத்தை?'' முகத்தில் வீசி எறிந்தான்.

குழம்பிப்போன அனு அவசர அவசரமாய் எடுத்துப் படித்தாள்.

உடம்பெங்கும் தீப்பற்றிக் கொண்டதுப் போல் துடித்துப் போனாள்.

''அய்யோ.. எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க. இந்த கடிதத்துக்கும், எனக்கும் எந்த சம்பந்தமுமில்லீங்க. இந்த.. இந்த கோபி யாருன்னே...''

''தெரியாதுன்னு சொல்லப் போறியா?'' என்றான் கேலியாய்.



''ஆமாங்க... அவன் யாருன்னே எனக்குத் தெரியாது. அந்த கடிதத்தை நான் எழுதலே!''

''தெரியும்... இப்படிதான் சொல்லுவேன்னு எனக்குத் தெரியும். நீதான் முன்னெச்சரிக்கையா உன் கைப்பட கடிதம் எழுத மாட்டாயே! எனக்கும் கம்ப்யூட்டரில்தானே கடிதம் தயாரித்து அனுப்பினே?''

''என்னை நம்புங்க.. எனக்கும் இதற்கும் எந்த சம் பந்தமுமில்லை. கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்தவ நான். பெற்றோரின் கஷ்டம் உணர்ந்து வளர்ந்தவ.. நான் எந்த தப்பும் பண்ணலேங்க...''

''ச்சீ.. மறுபடி மறுபடி பொய் சொல்லாதே! நீ வேலை செய்த கம்பெனியின் லெட்டர் பேடில் அடிக்கப்பட்ட கடிதம். ஆதாரம் என் கையில் இருக்கும் போதே.. மறுத்துப் பேச எவ்வளவு நெஞ்சழுத்தம்? இதோ பார்.. எவனோ சாப்பிட்ட எச்சிலை சாப்பிடறதை விட தூக் கிலே தொங்கறதை பெருமையா நினைக்கிறவன் நான்! கிளம்பு...''

''எ.. எங்கே?''

''எங்கேயாவது போ! உங்கப்பன் வீட்டுக்குப் போவியோ... யார் வீட்டுக்குப் போவியோ எனக்குத் தெரியாது. நமக்குள்ளே உள்ள உறவு முடிவுக்கு வந் தாச்சு.''

''இதோ பாருங்க அவசரப்பட்டு முடிவெடுக்காதீங்க. சத்தியமா நான் எந்த தப்பும்...''

''என்னை கொலைகாரனாக்காதே.. போய்டு!'' பயங் கரமாய் கத்தினான்.

அதன்பின் நடந்ததெல்லாம் விரும்பத்தகாதது. ரஞ்சனின் பெற்றோரும் விபரமறிந்து, அதிர்ச்சியில் வாயடைத்துப் போயினர்.

'போகவே மாட்டேன்' என்று அடம்பிடித்த அனுவின் முடியை கொத்தாகப் பற்றி இழுத்து வந்தான்.

அனு அவன் காலை கெட்டியாக பிடித்துக் கொண்டாள்.

''என்னை நம்புங்க. உங்களைத் தவிர யாரையும் நான் நினைச்சதேயில்லீங்க. வாழாவெட்டியாக என்னை வீட்டுக்கு அனுப்பினா என் அம்மா அப்பா உயிரையே விட்டுருவாங்க...'' கதறினாள்.

''அதைப்பத்தி எனக்கு கவலையில்லை.. ஒரு விபச்சாரிக்கு என் வீட்டில் இடமில்லை! வா.. நானே கொண்டு போய் விட்டுட்டு.. உன்னைப் பெத்த அந்த தெய்வங்களை நாக்கை பிடுங்கிக்கறா மாதிரி நாலு வார்த்தை கேட்கிறேன்... வா!'' அவளை தர தர வென காருக்கு இழுத்துச் சென்றான்.

அதுவரை கெஞ்சிக் கொண்டிருந்த அனு, விபச்சாரி என்ற வார்த்தையில் சிதறிப்போனாள். ஆட்டுக்குட்டியாய் அவன் பின்னேயே சென்றாள் மவுனமாய்.

* * *

''சாப்பிடவாம்மா... அப்பா நீங்களும் வாங்க. எல்லாம் தயாராயிருக்கு!'' என்றழைத்தாள் இந்திரா.

''எனக்கு பசிக்கலே இந்திரா. அனு இல்லாம வீடே வெறிச்சோடி போச்சு.''



''காலைலேர்ந்தே நீ சரியா சாப்பிடலே.. இப்படி இருந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும்? வாம்மா.. வந்து சாப்பிடு. அனுக்கா இல்லாதது எனக்கும் ரொம்ப கஷ்டமாகத்தான் இருக்கு. ஆனா, அக்காவுக்கு ஒரு நல்ல இடத்துலே வாழ்க்கை கிடைச்சிருக்கு. அதுக்காக சந்தோஷப்படுவோமே... வாம்மா!''

''என்னமோடி... மனசே சரியில்லே.. ஏங்க.. இந்திரா சாப்பிட கூப்பிடறா!''

''அ...'' என்றபடி அப்போதுதான் அவர்களை கவனித்தார் நாராயணன்.

''என்னங்க யோசனை?''

''மனசுக்குள்ளே ஏதோ ஒரு நெருடல் பார்வதி. நான் ஜெயிலுக்குப் போய் வந்த விஷயம் மாப்பிள்ளை வீட்டுக்குத் தெரிஞ்சுப் போச்சுன்னா? நம்ம அனுவோட கதி?''

''ஒண்ணும் ஆகாதுங்க. நல்லதையே நினைப்போம். நாளைக்கு நாம சம்பந்தி வீட்டுக்குப் போய் மறுவீடு சம்பிரதாய நிகழ்ச்சி பத்தி பேசி நாள்குறிச்சிட்டு வருவோம்.''

''சரி'' என்று தலையாட்டியபோது...

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

இந்திரா உற்சாகமாய் குரல் கொடுத்தாள்.

''அம்மா, அனு அக்காவும் அத்தானும் வந்திருக்காங்க!''

''என்ன?'' ஆச்சர்யமாய் வாசலுக்கு வந்தனர் இருவரும்.

''வாங்க.. வாங்க மாப்பிள்ளை.. வாம்மா... அ...'' வரவேற்ற நாராயணனின் முகம் மாறியது.

அனு நின்றிருந்த கோலமும், மாப்பிள்ளை முகத்தில் தெரிந்த கோபமும் கலவரத்தை தோற்றுவித்தது.

''அம்மா...'' என்றழுதபடி ஓடிவந்து அம்மாவை கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

''என்னாச்சுடி.. ஏன் அழறே?'' பதறிப் போனாள் பார்வதி.

''மாப்பிள்ளை... என்ன விஷயம்? ஏன் இப்படி?''

கேட்ட நாராயணனை ஏளனமாய் ஏறிட்டான் ரஞ்சன்.

''மூடி வச்சு கழுத்தறுத்திட்டீங்களே... மனுஷங்களா நீங்க?''

''மன்னிச்சிடுங்க மாப்பிள்ளை.. நான் ஜெயிலுக்கு போய் வந்ததை மறைச்சிட்டேன். தப்புதான்.. மன்னிச் சிடுங்க. அதுக்காக என் பொண்ணை தண்டிச்சிடாதீங்க மாப்பிள்ளை!'' தழுதழுத்தபடி கை கூப்பினார் நாரா யணன்.

ரஞ்சனுக்கு மற்றுமோர் அதிர்ச்சி.

''எ.. என்னது? நீங்க ஜெயிலுக்குப் போய் வந்தீங்களா? இதென்ன புதுக்கதை?''

''கடவுளே.. நானே உளறிக் கொட்டிட்டேனே!''

''இன்னும் என்னென்ன மறைச்சி வச்சிருக்கீங்க? என் முகத்துல என்ன இளிச்சவாயன்னு எழுதி ஒட்டியிருக்கா? நல்ல குடும்பம்னு வந்தேன். பெரிய நாமத்தை போட்டுட்டீங்க. நல்ல பொண்ணுன்னு நினைச்சேன். ஒரு சாக்கடையை என் தலையிலே கட்டியிருக்கீங்க!''



சப்தம் கேட்டு அறைக்குள்ளிருந்து மனைவியுடன் வெளிப்பட்ட மகேந்திரன், ''எதுக்கு மாப்பிள்ளை எல்லோரையும் தரக்குறைவா பேசிட்டிருக்கீங்க? என்ன நடந்தது?''

''விளக்கி சொல்ற அளவுக்கு நல்ல விஷயமில்லே இது! எவனையோ காதலிச்சி, ஆட்டம் போட்டு அலுத்துப் போனதும் கழட்டி விட்டிருக்கா உன் தங்கச்சி.''

''மிஸ்டர் ரஞ்சன்... வார்த்தைய அளந்துப் பேசுங்க. என் தங்கச்சி அப்படிப்பட்டவயில்லே.''

''இந்த கையை நீட்டி பேசறதெல்லாம் என்கிட்டே வேண்டாம். ஆதாரமில்லாமப் பேசறதுக்கு நான் ஒண் ணும் முட்டாள் இல்லே. இந்தா.. பார் உன் தங்கச்சியோட யோக்யதையை!'' கடிதத்தை அவன் வீசி எறிந்தான்.

எடுத்து படித்த மகேந்திரன் செயலிழந்துப் போனான்.

தங்கையை ஒரு புழுவை பார்ப்பதுப் போல் பார்த்தான்.

''நீயா இப்படி?''

''இல்லேண்ணா... எனக்கும் அந்த கடிதத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை. அதை நான் எழுதலே!''

''என்ன மகேந்திரா... என்ன இருக்கு கடிதத்துலே?'' நெஞ்சம் பதற நாராயணன் கேட்க.. அவரிடம் கடிதத்தை நீட்டினான் மகேந்திரன்.

கைகள் நடுங்க வாங்கிப் படித்தவர் திகைத்துப் போனார்.

''அனு..என்ன இதெல்லாம்?''

''சத்தியமா எனக்கு ஒண்ணும்...!''

''சீ.,.. வாயை மூடு! அதான் எல்லாமே எழுதி யிருக்கியே! பூனை மாதிரி இருந்து எங்களை முட் டாளாக்கிட்டியே! என் பணத்தைக் குடுத்து ஏமாந்துதான் நான் ஜெயிலுக்குப் போனேன். அதையே ஒரு பெரிய கொலை குற்றம் போல நினைச்சி குமைஞ்சுப் போனேன். ஆனா.. நீ?''

''அவதான் சத்தியம் பண்றாளே... பெத்தப் பொண்ணை நீங்களே சந்தேகப்பட்டா எப்படி? அனு என் பொண்ணு.. தப்பப் பண்ணத் தெரியாது அவளுக்கு!''

''உங்க குடும்ப சண்டைய அப்புறம் வச்சுக்குங்க. நான் நகைக்கோ, பணத்துக்கோ ஆசைப்படலே. கவுரவமான குடும்பமா இருக்கணும். பெண் குணவதியா இருக்க ணும்னு மட்டும்தான் எதிர்பார்த்தேன். இது ரெண்டுமே இல்லேன்னு ஆனப்பிறகு எனக்கு உங்கப் பொண்ணு வேணாம். சட்டப்படி நோட்டீஸ் அனுப்பறேன். கோர்ட் டுல சந்திப்போம்!''

''மாப்பிள்ளை.. அவசரப்படாதீங்க!'' அலறிய பார்வதி யின் குரல் அவன் செவியில் விழுமுன் காரெடுத்து கிளம்பி விட்டான்.

ஒரு ஓரமாய் நின்றபடி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த விமலாவின் இதழோரம் குறுநகை நெளிந் தோடியது.

அனு கூனிக் குறுகி ஒரு மூலையில் அமர்ந்து அழும் சப்தத்தை தவிர வேறெந்த ஒலியும் இல்லை.



அவர்களின் மவுனமே அவளை குற்றவாளியாக்கி இதயத்தை குத்தி கிழித்துக் கொண்டிருந்தது.

ஒரே நாளில் தன் திருமண வாழ்க்கை முடிவுக்கு வரும் என்று கற்பனையில் கூட எண்ணியதில்லை.

அன்று யாருமே சாப்பிடவில்லை.

இந்திராவுக்கு கூட ஆச்சர்யமாயிருந்தது.

'அனு அக்காவா இப்படி?'

அனுவிற்கு அவள் ரத்தபந்தமே அந்நியமாகிப் போனது. இனி என்ன செய்வது என்று புரியவில்லை. ஆனால், வேறு போக்கிடம் இல்லை என்பது மட்டும் நிதர்சனமாய் தெரிந்தது.

மகேந்திரன் தங்கையை வெறுப்புடன் நோக்கினான்.

''ஒரு நாள் கூத்துன்னு தெரிந்திருந்தால்.. கடன் வாங்கி அநியாயமாய் செலவு செய்திருக்க மாட்டேன். போச்சு. மானம், மரியாதை, பணம் எல்லாமே போச்சு!''

அறைக்குள் பேசினது.. அட்சர சுத்தமாய் அனுவின் காதல் விழுந்தது.

நாராயணன் இடிந்துப் போய் விட்டார்.

''நான் என்னடி பாவம் பண்ணினேன்? இந்த வயசுல அடுக்கடுக்கா எனக்கேன் இத்தனை சோதனை? ரொம்ப நம்பிக்கை வச்சிருந்தேனே... கெடுத்துட்டாளே!''

அப்பாவின் அழுகுரல் வேதனையை மீறி எரிச்சலை தான் தந்தது அவளுக்கு.

'என் தரப்பு நியாயங்களை கேட்கக் கூட வாய்ப்பு தராமல் என்னை குற்றவாளியாக்க இவர்களுக்கு என்ன உரிமை இருக்கு?'

வேதனைப் பட்டு பட்டு இறுகிப் போயிருந்த அனு தெரிந்தாள்.

'எதற்கு அழுகிறேன்? என் மனதிற்கு நான் நல்லவள். அவ்வளவுதான். யாரைப் பற்றியும் எனக்கு கவலை இல்லை. இனி ஆக வேண்டியதை கவனிப்போம். இதற் கெல்லாம் காரணமான கோபியை முதலில் கண்டு பிடிப் போம். அதுவரை இதுபோன்ற வார்த்தைகளை அலட் சியப்படுத்த வேண்டும்!'

காலை!

குளியலறை நோக்கிச் சென்றவளின் முன் போய் நின்றாள் விமலா.

''என்கிட்டேயாவது முன்னாடியே சொல்லியிருக் கலாம் அனு! எப்படியாவது அந்த கோபிக்கே உன்னை கல்யாணம் பண்ணி...!''

''ரொம்ப நன்றி அண்ணி! மறுபடி ஒரு சந்தர்ப்பம் வாய்த்தால் கண்டிப்பாக உங்களிடம் சொல்கிறேன்!'' நிதானமாக பதில் கூறிவிட்டு குளியலறைக்குள் புகுந்துக் கொண்டாள் அனு.

அந்த பதிலடி.. அதில் தெறித்த ஏளனம்.. விமலாவின் முகத்தில் அறைந்ததுப் போலிருந்தது.

## 16

அந்த வீட்டின் சூழ்நிலை முற்றிலும் மாறிப்போயிருந் தது. இரண்டே நாளில் அனு அந்நியப்படுத்தப்



பட்டிருந்தாள். நடந்ததெல்லாம் கனவா, நிஜமா என்ற பிரம்மிப்பிலிருந்து விடுபடவே அவளால் இயலவில்லை எனும்போது இதுநாள் வரை அன்பைக் கொட்டிய ரத்த பந்தங்களின் போக்கில் தெரிந்த மாற்றம் வியப்பைத் தந்தது.

அண்ணி எப்போதும் அப்படிதான்! சில சமயம் எண்ணெயில் விழுந்த கடுகாய் பொரிவாள். சில சமயம் தண்ணீரில் ஒட்டாத எண்ணெயாய் விலகி இருப்பாள். அவள் குணம் பழகிப்போன ஒன்று என்பதால் அவளால் ஏற்படும் வேதனையை பெரிதுபடுத்தவேண்டிய அவசிய மில்லை. அண்ணன் அவளின் கட்டுப்பாட்டில் இருப்ப தால் அவனின் குற்றச்சாட்டுகளை கூட பெரிதுபடுத்த வேண்டியதில்லை.

ஆனால், அம்மா?

''மலடியாகவே இருந்து தொலைத்திருக்கலாம். எதற் காக பெற்று வளர்த்து அவஸ்தைப் படணும்? கடவுளே... என்னை சீக்கிரம் அழைச்சுக்கப்பா!'' என்றாள் காது படவே!

ரஞ்சனின் கத்தலும், கடிதமும், அவளை குற்றவாளி யாகவே முத்திரை குத்திவிட்டனர். அவள் தரப்பு நியா யங்களை கேட்க யாரும் முன்வரவில்லை.

என்னதான் நடந்தது என்று பொறுமையுடன் கேட் டறிய யாருக்கும் மனசில்லை.

கசந்தது நெஞ்சம்.

இந்திரா?

அவள் முகத்தில்தான் எத்தனை வெறுப்பு?

''அக்கா.. இந்த சட்டையை இஸ்திரி போட்டுக் கொடேன். இன்னைக்கு தேங்காய் சாதம் சமைத்துக் கொடேன். உன் கை சமையலை ஆளாளுக்கு பங்கிட்டுக் கொள்வதால் கொஞ்சம் அதிகமாகவே வைத்துக் கொடேன்...!'' என்று வீட்டில் இருக்கும் சமயங்களில் அவள் பின்னேயே குட்டிப் போட்டப் பூனையைப் போல் வலம் வந்தவள், இன்று முகத்தை திருப்பிக் கொண்டு போகிறாள். எதற்காகவும் அவள் உதவியை நாடுவதில்லை. அம்மாவின் துணையோடு சமைத்து எடுத்துச் சென்று விடுகிறாள்.

அப்பா சாப்பிட அமர்ந்ததை பார்த்துவிட்ட அனு அவசர அவசரமாய் தட்டை வைத்து பரிமாற முற்பட்டாள்.

''பார்வதி.. பார்வதி... அடி செவிட்டு முண்டமே.. சீக்கிரம் வந்து பரிமாறு!'' என்று கத்தியபடி தட்டை இழுத்துக் கொண்டார்.

குமுறிக் கொண்டு வந்தது அனுவுக்கு.

தன்னை நோக்கும் விழிகளில் பரிவும், பாசமும் போட்டி போடுமே... அந்த அப்பாவா இவர்? என் அப்பாவுக்கு வெறுப்பு உமிழவும் தெரியுமா?

வேதனையும், வியப்புமாய் எழுந்துச் சென்றாள்.

ஒன்று மட்டும் தெளிவாய் புரிந்தது.

இவர்கள் அத்தனை பேரும் முழுக்கவே நம்பிவிட்டார்கள்.. நான் தவறிழைத்தவள் என்று!

எனக்கொரு வாய்ப்பை தந்து என் கூற்றை கேட்க யாருக்கும் இங்கே பொறுமை கிடையாது. இனி இவர்களின் போக்கு இப்படித்தான்.



இப்படித்தான் இதயத்தை குத்தி கிழிக்கப் போகிறார்கள். ஒவ்வொரு முறையும் வலிதாளாமல் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தால்... என் சக்தியெல்லாம் வற்றிப் போகும்.

என்னை நான் நிரூபித்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அதற்கான வழி என்னவென்று பார்க்க வேண்டும்.

'கோபி!'

'எங்கிருக்கிறாயடா பாவி! ஒரே நாளில் என் வாழ்க்கையை தலைக்குப்புற புரட்டிப் போட்டு விட்டாயே! சந்திப்பேன்.. உன்னை என்றாவது ஒரு நாள் சந்திப்பேன். அப்போது வைத்துக் கொள்கிறேன் உனக்கு!'

* * *

மனபாரம் இமைகளையும் பாதிக்க... ஒன்று சேர மறுத்தது.

'நேற்றுவரை நீ யாரோ... நான் யாரோ? இன்று முதல் நீ வேறோ.. நான் வேறோ?'

இரவு நேர நிசப்தத்தில் ஹலோ எப்எம்மில் ஒலித்துக் கொண்டிருந்த பாடல் எங்கிருந்தோ தென்றல் கடத்தி வந்தது.

அருமையான பாடல் அனுவுக்கு பிடித்த பாடல். ரஞ்சனுக்குப் பிடித்த பாடல் என்றறிருந்ததும் அவளுக்கும் பிடித்துப் போயிற்று.

'நான் உங்களை நேசித்தது நிஜம் ரஞ்சன். அதைப் புரிந்துக் கொள்ள முடியவில்லையா உங்களால்? பழகியது

குறுகிய காலமென்றாலும் நெஞ்சு முழுக்க நிரப்பியிருந்தேனே! எவ்வளவு கனவு? எத்தனை கற்பனை? அர்த்தமின்றி போய்விட்டதே!

நீங்களும் அவசரபுத்திக்காரராகி விட்டீர்களே! ஏனோ தெரியவில்லை. உங்கள் மீது வருத்தம் தான் விஞ்சி நிற்கிறதேயொழிய வெறுப்பல்ல. சாட்சியுடன் வந்த கடிதம்... சந்தேகத்தை உண்டாக்கும்தான்.என்றாலும் என் பக்கம் நியாயத்தை சொல்ல வாய்ப்பு கொடுத்திருக்கலாமே ரஞ்சன்?'

கணவனின் நினைவுகள் அவள் உறக்கத்தை மொத்தமாக பறித்துவிட்டிருந்தது. தன்னிலை மீறி கண்கள் நீரை வெளியிட்டதில் தொண்டை வறண்டு விட்டிருந்தது.

தண்ணீர் குடிக்க வேண்டும் போலிருந்தது. எழுந்தாள்.

வராந்தாவை தாண்டி சமையலறை. அதையொட்டி நாராயணனின் அறை.

கடந்து செல்ல முற்பட்டபோது, சற்றே திறந்திருந்த கதவை தாண்டி பேச்சுக் குரல்கள் கேட்டன துல்லியமாய்.

''என்னங்க பண்றது? அதுக்காக அவளை வீட்டை விட்டு விரட்டி விட முடியுமா?''

''அவளை என் பொண்ணுன்னு சொல்றதுக்கே வெக்கமாயிருக்கு பார்வதி. வாழ்க்கை அமையறதே பெரிசு. நாம ஒரு பிரச்சனைய மறைச்சு கல்யாணம் பண்ணி வச்சா, இவ ஒரு பிரச்சனைய உருவாக்கி கெடுத்துக்கிட்டு வந்து நிக்கறா. கடன்பட்டு கல்யாணம் பண்ணினேன். ஒரு வழியா சுமைய இறக்கி வச்சிட்டோம்னு நிம்மதியா



மூச்சுவிட்டா... திரந்தா சுமையா மறுபடி வந்தாச்சு. ச்சே! என்ன வாழ்க்கை இது? ஆசையா புள்ளைங்களை பெத்துக்கிட்டது தப்பா? ஏன் இப்படி கஷ்டத்தை தருதுங்க? இந்திராவை கரையேத்த வேணாமா? இப்ப இவளும் வந்து உக்கார்ந்தாச்சு. உழைச்சு கொட்டியே சாகறேன்.. என் தலைவிதி!''

''அய்யோ.. ஏன் தலையிலே அடிச்சுக்கறீங்க? கடவுள் ஏதாவது ஒரு வழி காட்டுவான் கவலைப்படாதீங்க. மாப்பிள்ளை வந்து விட்டுட்டுப் போய்ட்டார். அதுக்காக நாம சும்மா இருந்துட முடியுமா? போய் பேசி...''

''சீ.. வாயை மூடு! உன் பொண்ணு சாதாரண தப்பையா செய்திருக்கா? மானமுள்ள எந்த ஆம்பளையாவது சகிச்சுப்பானா? எந்த மூஞ்சியை வச்சுக்கிட்டு அவன் முன்னாடி நிப்பேன்? இந்தப் பேச்சை இத்தோடு விட்ரு.. சொல்லிட்டேன்!''

அத்தனையும் காதில் விழ... ஸ்தம்பித்து நின்றிருந்தாள் அனு!

* * *

பொன்னிற திரவத்தை கண்ணாடி தம்ளரில் சாய்த்ததும் குமிழ்கள் மலர்ந்து... அந்த நொடியே இறந்துப் போயின... அவனின் சந்தோஷத்தைப் போலவே!

ஒரே மிடறில் அத்தனையும் தொண்டையில் இறங்க.. எரிச்சலாய் இருந்தது.

ரஞ்சன் முழுக்க.. முழுக்க போதையின் பிடியிலிருந்தான்.

அலுவலகத்திற்கு செல்வதில்லை. யார் முகத்தையும் பார்க்க தைரியமில்லை. மணவாழ்க்கை பற்றி வந்து விழும் ஆயிரமாயிரம் கேள்விகளுக்கு பதில் சொல்லும் நிலையில் அவன் இல்லை.

என்னவென்று சொல்வான்? என் மனைவி பத்தினி அல்ல, இப்போது அவள் என்னுடன் அல்ல என்றா?

எனக்கா... எனக்கா இந்த நிலை? எப்பேர்பட்ட கம்பீரமான ஆண் மகன் நான்? தலைகுனிய வைத்து விட்டாளே! என் மனைவி குத்துவிளக்குபோல் தெய்வீக மானவளாய் இருக்க வேண்டும் என்றுதானே ஆசைப் பட்டேன்? அது தப்பா? தெரு விளக்காய் வாய்த்து விட் டாளே! பூஜையறையில் வைக்க முடியுமா அதை?

மேலும் மேலும் விஸ்கி உள்ளே செல்ல.. அனுவின் மீதான வெறுப்பு நெருப்பாய் கொளுந்து விட்டு எரிந்தது.

அலுவலகத்திற்கு நீண்ட விடுப்பு எடுத்திருந்தான் ரஞ்சன். 'அனுவை மன்னித்து ஏற்றுக் கொள்' என்று பரிந்துரைத்த பெற்றோரிடம் சண்டை போட்டதில் அவர்களும் மதுரை போய் விட்டிருந்தனர்.

ஒரு வழியாய் தடுமாறி பாரைவிட்டு வெளியே வந்த வன் பார்க்கிங் பகுதியிலிருந்த தன் காரை அடையாளம் கண்டு உருவினான்.

வேகமாக ஓட்டினான்.

ரோடில் வாகனங்கள் குறைந்து விட்டிருந்தன. பல இடங்களில் தெரு விளக்குகள் எரியவில்லை. ரஞ்சனின் எண்ணம் முழுக்க அனு மட்டுமே இருந்ததால் சாலை யில் கவனம் போதவில்லை.



அதனால்.. எளிதாக தடுப்பு சுவர் மீது மோதி.. காரின் முன்பக்கம் நொறுங்கி.. பலத்த காயங்களுடன் நினைவு தப்பினான் ரஞ்சன்.

* * *

தனியார் மருத்துவமனை!

வரவேற்பறையில் காத்திருந்தான் கோபி.

மேலும் இருபது நிமிடங்கள் கடந்த பின்பு டாக்டர் சியாமளன் வந்தார்.

''என் அறைக்கு வா.. கோபி!''

போனான்.

''அவருக்கு எப்படியிருக்கு டாக்டர்?''

''தலையில்தான் அடி! பயப்படற மாதிரி ஒண்ணு மில்லை. இரவு முழுக்க ஓய்வெடுத்து விட்டு காலை யில் அனுப்பிடலாம்! இது போலீஸ் கேஸ். உன் வற்புறுத்தலுக்காக.. நட்பின் நிமித்தம் சிகிச்சை தர ஒப்புக் கொண்டேன். போலீஸுக்கு தெரிந்தால் நானும் மாட்டுவேன். பயங்கரமா குடிச்சிருக்கிறான். உன் நண்பனா?''

''ஊகூம்... என் நண்பனின் நண்பன். நான் யாரென்று அவனுக்குத் தெரியாது. தெரியாமலே இருக்கட்டும். என் பெயர் கூட தெரியவேண்டாம் ப்ளீஸ்! புதிதாய் திரு மணமானவன். மனைவி நடத்தை கெட்டவள் என்று தெரிந்ததும் இப்படியாகிவிட்டான். எதேச்சையாக பைக்கில் வந்தபோதுதான் விபத்துக்குள்ளான காரையும், இவனையும் பார்த்தேன். நல்லவேளை கார் சேதமாகி

யிருந்தாலும் ஓட்ட முடிந்தது. இங்கே இவனை சேர்த்து விட்டு, காரை மெக்கானிக் ஷெட்டில் விட்டு விட்டேன்.''

''உனக்கேன் வேண்டாத வேலை?''

''மனிதாபிமானம் தான்!''

''அந்த மனிதாபிமானம் ஓரளவோடு இருக்கட்டும். என் வேலைக்கு உலை வச்சிடப்போறே?'' என்றார் கிண்டலாய்.

''புரிகிறது. இனி இப்படி நடக்காது. ரொம்ப நன்றி டாக்டர்... நான் காலை வந்து பார்க்கிறேன்!''

''சரி!''

* * *

தலைபாரமாய் கனத்தது.

இமைகளை திறக்கக் கூட சிரமமாயிருந்தது. திரைச் சீலை நழுவியிருந்த நேரத்தில் கண்ணாடி ஜன்னல் வழியே வெளிச்சம் ஊடுருவி கண்களை கூச செய்தது.

முற்றிலும் புதிய சூழ்நிலை புரிய.. குழப்பமானான்.

'நான் எங்கிருக்கிறேன்? எப்படி வந்தேன்? என்னாச்சு எனக்கு? ப்பா!' ஜிவ்வென்று நெற்றியில் வலி இழுத்துப் பிடித்தது.

நர்ஸ் உள்ளே வந்தாள்.

அப்போதுதான் தான் ஆஸ்பத்திரியில் இருப்பது புரிந்தது.

''நர்ஸ்.. நான் எப்படி இங்கே வந்தேன்?''

''குடிச்சிட்டு வண்டியோட்டலாமா சார்? நல்ல வேளை.. ரத்தம் அதிகம் போகறதுக்கு முன்னாடி ஒருத்தர்



உங்களை கொண்டு வந்து சேர்த்ததால பொழைச்சீங்க. பார்த்தா படிச்சவர் மாதிரி தெரியறீங்க... இதெல்லாம் தப்புன்னு தெரியாதா?'' காயத்தை துடைத்து மருந்து போட்டபடி கேட்டாள்.

''யாரவர்... என்னை கொண்டு வந்து சேர்த்தவர்?''

''தெரியாது.. இப்ப வருவார்னு நினைக்கிறேன்...''

சொல்லி முடிக்கவில்லை.. வந்து நின்றான் கோபி.

''அலோ கண்விழிச்சிட்டீங்களா? இப்ப எப்படி இருக்கு?''

புதிதாய் நின்றிருந்த இளைஞனை விழியகல பார்த்தான்.

''இவர்தான் சார் உங்களை காப்பாற்றியவர்!''

''ரொம்ப ரொம்ப நன்றி சார்!'' கை கூப்பினான் ரஞ்சன்.

''அடடா.. என்ன நீங்க?''

''முன்னே பின்னே தெரியாத என்னை காப்பாற்றி போலீஸ் கேஸ் ஆகாமலும் காப்பாத்தியிருக்கீங்க. நீங்க செய்தது சாதாரண உபகாரமா என்ன?''

''முன்னே தெரியலேன்னாலும், இப்ப தெரிஞ்சுக் கிட்டேனே! என் நண்பனை தானே காப்பாத்தியிருக் கேன்!''

கோபியின் வார்த்தைகள் ரஞ்சனை சிலிர்க்க வைத்தன.

''சந்தோஷமாயிருக்கு சார்! உங்களை மாதிரி சிலபேர் இருக்கிறதாலதான் நாட்டிலே மழை பெய்யுது!''

''அய்யோ போதும் சார் பாராட்டினது. வீட்டுக்கு புறப் படலாமா? நானே அழைச்சிட்டுப் போறேன்!''

கண்கள் கலங்கின ரஞ்சனுக்கு.

அவன் கையை பற்றிக் கொண்டான் நன்றியுணர் வுடன்.

''உங்க பேரை தெரிஞ்சுக்கலாமா?''

''கோ...'' என்று ஆரம்பித்தவன், சுதாரித்து ''கோவிந்த்'' என்றான்.

''ரொம்ப.. ரொம்ப நன்றி கோவிந்த்!'' என்றான் ரஞ்சன்.

விஷமத்துடன் புன்னகைத்தான் கோபி.

# 17

''அம்மா.. வர்றேன்ம்மா!'' மதிய உணவடங்கிய டிபன் பாக்ஸை கைப்பையில் வைத்தபடி சொல்லிக் கொண்டாள் அனு.

கோதுமையை புடைத்துக்கொண்டிருந்த பார்வதி சற்றே நிமிர்ந்து, ''ம்.. சரி!'' என்று கூறிவிட்டு, உடனே வேலை யில் ஆழ்ந்தாள்.

வராந்தாவில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த நாராயணன், எழுந்து உள்ளே போய் விட்டார்.



அப்பாவிடம் சொல்லிக் கொள்வதற்காக நடந்தவள் அப்படியே நின்றாள்.

தனக்குத் தானே நகைத்துக் கொண்டவள், வலுவில் மனதை சமாதானப்படுத்தி வாசலுக்கு விரைந்தாள்.

ஒரு வாரமாகிறது.. அனு வேலைக்கு சேர்ந்து.

அவளிருக்கும் மனநிலையில் அலுவலகம் சென்று, கணினியின் முன் அமர்ந்து பணிபுரிவதென்பது சவாலான விஷயமாய் தோன்றியது.

அதனால்தான் ஒரு நர்சரி பள்ளியில் ஆசிரியையாக பணியில் சேர்ந்தாள்.

ரோஜாவென்பதே அழகான மலர்தானே? அதை பலவிதத்தில், பல வண்ணங்களில் ஒருசேர பார்ப்பதென் பது அதிர்ஷ்டமான விஷயம்தானே?

கசடுகள் படியாத குழந்தைகளை பார்க்கும்போது, இதயத்தின் கனம் கீழிறங்கி, நிம்மதி சூழ்ந்து கொள்வதை அனுபவப் பூர்வமாய் உணர்ந்தாள் அனு.

மிக அதிகமான சம்பளம் என்றில்லாவிட்டாலும், அவள் பிறந்த வீட்டிலேயே தண்டச்சோறு சாப்பிடும் அவலத்தை துடைக்கும் அளவிற்கு கிடைத்தது என்பதே ஆறுதலான விஷயம்தான்.

அவள் வேலைக்குச் செல்கிறேன் என்றபோது பாசாங் கிற்காக கூட அம்மா தடுக்கவில்லை என்பது வருத்தத் திற்குரிய ஆச்சர்யம்.

கழுத்தில் வாசம் போகாத புத்தம் புதிய மஞ்சள் கயி றுடன் அந்தப் பள்ளியில் வேலைக்கு சேர்ந்தபோது.. மற்ற ஆசிரியைகளின் பார்வையில் வியப்பு.

''புதுமணப் பெண்ணா நீங்கள்?''

''ஆமாம்!''

''திருமண வாழ்க்கையில் உச்சபட்ச சந்தோஷமே கல்யாணமான முதல் மூன்று மாதங்களில்தான்! சந் தர்ப்பங்களை இழக்கிறீர்கள் டீச்சர். இந்த தருணங்கள் கணவனோடு இருப்பதுதான்... வாழ்க்கையின்...''

மேற்கொண்டு பேசவிடாமல் சக ஆசிரியையை சிறு புன்னகையுடன் தடுத்தாள் அனு.

''எங்கள் சந்தோஷத்திற்கு மூன்று மாதம் என்று எந்த வரையறையும் வைத்துக் கொள்ளவில்லை டீச்சர். நாங்கள் ஒருவரையொருவர் மிகவும் நேசிக்கிறோம். முப்ப தென்ன... அறுபது வருடங்கள் வரை இதேப்போல்தான் இருப்போம் என்கிற நம்பிக்கை நிறையவே உண்டு'' என்றபோது வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டன.

* * *

அழைப்பு மணி ஒலித்தது.

சிரமப்பட்டு ஷேவிங் செய்துக் கொண்டிருந்த ரஞ்சன் எரிச்சலுடன் மெல்ல எழுந்து கதவை நோக்கி நடந் தான்.

'யாரது.. இந்த நேரத்தில் வந்து கழுத்தறுப்பது?'

அதற்குள் மறுபடி பொறுமையின்றி அழைப்பு மணி ஒலிக்க, கோபத்துடன் திறந்தவன் ஆச்சர்யமானான்.

கோபி பழங்கள் அடங்கிய பையுடன் நின்றிருந்தான்.



''அடடே.. வாருங்கள் கோவிந்த்!''

''மன்னிக்கணும்.. நான் போகிறேன்!'' சட்டென முகம் வாட திரும்பி நடந்தான்.

''எ... என்னாச்சு கோவிந்த்? நான் உங்களை தப்பா ஏதும்...''

''ஆமாம்... தப்பாதான் பேசிட்டீங்க.''

''நானா?!''

''ஆமாம்! பலமுறை சொல்லிட்டேன்.. நமக்குள்ளே வாங்க போங்க வேண்டாம்னு. ஆனா.. மாத்திக்கறதா தெரியலியே!

''ஓ.. மன்னிச்சிடுப்பா.. பழக்கதோஷம்... விடு உள்ளே வா.. கோவிந்த்!''

''இது.. இது நல்லாயிருக்கு'' என்றபடி உள்ளே வந் தான்.

''உக்காரு கோவிந்த்... ரெண்டு நிமிஷத்திலே ஷேவ் பண்ணி முடிச்சிட்டு வந்திடறேன்!''

''கைய தூக்கினாலே... சுருக்குன்னு குத்துமே! டாக்டர் இப்படியெல்லாம் ரிஸ்க் எடுக்கவேண்டாம்னு சொன் னாரே. அதை இப்படிக் கொடு!''

''அட.. என்ன கோவிந்த்.. நீ போய்...!''

''ஸ்.. சும்மாயிரு'' என்றவன் அவன் கையிலிருந்த ரேஸரைப் பிடுங்கி தானே அவனுக்கு வழித்து விட ஆரம்பித்தான்.

இரண்டே நிமிடம்தான்! கன்னம் மழமழவென்றாகி விட்டது.

''எதுக்கு கோவிந்த் இதெல்லாம்?'' கன்னத்தை தடவிக் கொண்டே வெட்கப்பட்டான் ரஞ்சன்.

''எதுக்கு சங்கடப்படறே? உனக்காக என்ன வேணும்னாலும் செய்வேன் ரஞ்சன்.. என்னமோ தெரியலே... உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு!''

''ஆச்சர்யமாயிருக்கு கோவிந்த்! என்னை பெரிய ஆபத்திலேர்ந்து காப்பாத்தினதுமில்லாம... அடிக்கடி என்னை வந்து பார்த்துக்கறது...''

''எப்படியோ கடவுள் என்னை உன்கிட்டே கொண்டு வந்து சேர்ந்துட்டார். அதுக்காக நான்தான் கடவுளுக்கு நன்றி சொல்லணும். சரி.. இதை விடு.. உடம்பு எப்படி இருக்கு?''

''தேவலைப்பா! தலைக்காயம் ஆற இன்னும் ஒரு வாரமாகும்.. சாப்பிட்டியா கோவிந்த்?!''

''உன் கூட சேர்ந்து சாப்பிடணும்னு சாப்பிடாமலேயே வந்துட்டேன்.''

''கொஞ்சமிரு.. குளிச்சிட்டு வந்திடறேன். ஓட்டலுக்கு போகலாம்!''

''ஓட்டலா? சமையல்காரி இல்லே?''

''பேத்திக்கு உடம்புக்கு முடியலேன்னு மூணு நாள் லீவு எடுத்துக்கிட்டு போய்ட்டா!''

''நீ போய் குளிச்சிட்டு வா!''



ரஞ்சன் குளிக்கச் சென்றான். அவன் வருவதற்குள் சமையலறைக்குள் சென்ற கோபி... அங்கிருந்த டப்பாக்களை திறந்து பார்த்து ரவையை எடுத்து தனக்கு தெரிந்தளவில் உப்புமா செய்து வைத்தான்.

குளித்து முடித்து சட்டையை மாட்டிக் கொண்டு வந்த ரஞ்சன்... டேபிள் மீது சுடச்சுட அமர்ந்திருந்த உப்புமாவை பார்த்து ஆச்சர்யமானான்.

''ஏய்... கோவிந்த்.. இது எப்படி வந்தது?''

''நான்தான் சமைச்சேன்!''

''நீயா?''

''நானேதான்! ஏதோ.. எனக்கு தெரிஞ்சவரை சமைச்சிருக்கேன்.''

''உன்னை நீயே ஏன் சிரமப்படுத்திக்கறே கோவிந்த்!''

''உடம்பு சரியா குணமாகாத நிலைமையிலே ஓட்டல் அது இதுன்னு அலைந்து சிரமப்படணுமா? அதுக்குத்தான். உனக்காக சிரமப்படறதிலேயும் ஒரு இன்பம் இருக்கு ரஞ்சன். இன்னைக்கு எனக்கும் லீவுதானே? மதியத்துக்கும் இரவுக்கும், நானே சமைச்சிடறேன்!''

''கோவிந்த்!'' என்றவன் இறுக கட்டித் தழுவிக் கொண்டான்.

''பழகியது சில தினங்களே என்றாலும் என் மனதில் நீங்காமல் நிலைபெற்றுவிட்டாய் கோவிந்த்! வா சாப்பிடலாம்!''

பரஸ்பரம் பரிமாறிக் கொண்டு சாப்பிட துவங்கினர்.

கோபியின் பெற்றோர், குடும்பம், அலுவலகம் என பேச்சு வந்தபோது, சாமர்த்தியமாக பதில் தந்தான் கோபி.

''கேட்கிறேன் என்று தவறாக நினைக்காதே ரஞ்சன் உன் பெற்றோர் மதுரையில் இருப்பது தெரியும். நீ மட்டும் இங்கு தனியாகவா இருக்கிறாய்?''

''.............?!'' சாப்பிட்டவை இறங்க மறுத்தது.

''ரஞ்சன் நான் தவறாக ஏதும் கேட்டு விட்டேனா?'' என்றான் பதறி.

''சேச்சே... நானே சொல்லியிருக்கணும்.ஆனா, சொல்லி கொள்ளுகிற அளவுக்கு நல்ல விஷயமில்லை கோவிந்த். எனக்கு திருமணமாகி விட்டது!''

''நிஜமாகவா?''

''ஆச்சர்யமாய் இருக்கிறதா? நிஜம்தான் கோவிந்த். ஆனால், மனைவி இப்போது என்னுடன் இல்லை. குடி, விபத்து. இதெல்லாம் அவளின் எதிரொலி. மேற்கொண்டு என்னை எதையும் கேட்டுவிடாதே.. ப்ளீஸ்!''

''புரிகிறது.. எதையும் கேட்க மாட்டேன். தைரிய மாயிரு. பக்கபலமாய் உனக்காக நானிருக்கிறேன். நடப்ப தெல்லாம் உன் நன்மைக்காக என்பதில் மட்டும் உறுதி யாயிரு.''

''நிஜம்தான்... அனுவின் கயமை ஆரம்பத்திலேயே வெளிப்பட்டது நன்மைக்காகத்தானே?''

நினைத்துக் கொண்டிருந்தபோதே வாசல் மணி அழைத்தது.

''நீ இரு.. நான் போய் பார்க்கிறேன்'' எழுந்தவனை கையமர்த்தி விட்டு அவனே போய் திறந்தான்.



ஒரு இளைஞன்.

''ரஞ்சன் சார் இருக்காரா?''

''நீங்கள்?''

''சுப்ரீம் ஸ்டூடியோவிலிருந்து வர்றேன். கல்யாண ஆல்பமும், கேசட்டும் கொடுத்துட்டுப் போக வந்தேன்.

''கோவிந்த்... அவரை உள்ளே வரச்சொல்!''

வந்தான்.

''வணக்கம் சார்.. உங்க கல்யாண ஆல்பமும், சி.டி. கேசட்டும் ரெடியாய்டுச்சு சார். முதலாளி கொடுத்தனுப் பினார்.

''வச்சிட்டுப் போ! பணம் முழுக்கவே செட்டில் பண் ணியாச்சு.''

''தெரியும் சார்... வர்றேன் சார்!''

மேசைமீது வீற்றிருந்த புத்தம் புது ஆல்பத்தை பார்த்தபோது.. நெஞ்சு எரிந்தது ரஞ்சனுக்கு.

அதே நிலைமைதான் கோபிக்கும்.

''என் திருமண ஆல்பம்... எடுத்துப் பார் கோவிந்த்!''

''உனக்கே பார்க்க ஆர்வமில்லாத போது.. உன் வேதனை வலியும் புரிகிறது. எனக்கும் பார்க்க ஆர்வ மில்லை!''

''நன்றி கோவிந்த்.. என்னை நன்றாக புரிந்து வைத் திருக்கிறாய்!'' அவன் தோளை தட்டிக் கொடுத்துவிட்டு.. அவைகளை எடுத்துச் சென்று பீரோவில் வைத்துப்பூட் டினான்.

அடுத்து வந்த தினங்களில் ரஞ்சன், கோபியின் நட்பு வெகுவாய் இறுகியது. ரஞ்சன் நீண்ட விடுப்பில் இருந்தான் கோபி அலுவலகம் சென்று விட்டு நேரே ரஞ்சன் வீட்டிற்குதான் வருவான்.

இடையில் ரஞ்சனுக்கு தபாலில் கோபியிடமிருந்து மூன்று முறை கடிதங்கள் வந்திருந்தன. அத்தனையும் அனு கோபிக்கு உருகி.. உருகி எழுதியிருந்த கடிதம்.

அதைப் படிக்க.. படிக்க.. அனுவின் மீது வெறுப்பு நெருப்பாய் கொளுத்துவிட்டு எரிந்தது.

முடிவெடுத்தான்!

நாளையே வக்கீலை சந்தித்து.. அவளுக்கு விவாகரத்து நோட்டீஸ் அனுப்ப வேண்டும்.

* * *

மழைநீர்.. ஆங்காங்கே சிறுகுளங்களாகியிருந்த கனமழை குறைந்து தூறிக் கொண்டிருந்தது.

சாலை ஓரமாக குடையை பிடித்துக் கொண்டு பள்ளிக்கு சென்றுக் கொண்டிருந்தாள் அனு.

அந்த மழையிலும்.. கணவனின் தோளை அழுத்தமாய் பற்றியபடி பைக்கில் அமர்ந்திருந்த இளம் மனைவி.

அவள் முகத்தில்தான் எவ்வளவு பெருமிதம்.. பரவசம்.

நானும் இப்படிப்பட்ட வாழ்க்கைக்கு தானே ஆசைப் பட்டேன்?

அழகாய், சிரத்தையுடன் போட்ட வண்ணக் கோலம் திடீர் மழையால் சிதைந்துபோனது போல் என் வாழ்க்கையும் ஆகிப்போனதே!



'ரஞ்சன் என் மனதை உங்களால் கூடவா புரிந்து கொள்ள முடியவில்லை?'

அப்போது...

வேகமாய் கடந்து காரொன்று அவள் மீது மழை நீரை அள்ளித் தெறிக்க.. முழுக்க நனைந்துப் போனாள் அனு.

சட்டென கோபம் தலைக்கேற... முன்னே சென்று நின்ற காரினை நோக்கி விரைந்தாள்.

''கண்ணை மூடிக் கொண்டா...'' கத்த ஆரம்பித்தவள் ஸ்தம்பித்துப் போனாள்.

ரஞ்சன் காரிலிருந்து இறங்கியதுதான் காரணம்.

''நீ..ங்...க...ளா? நல்லாயிருக்கீங்களா? நெற்றியில் என்ன காயம்?'' என்றாள் தன்னை மீறிய பரிதவிப்பும், நேசமுமாய்.

ரஞ்சன் அவளை புழுப்போல் பார்த்தான்.

''விசாரிக்கிறது இருக்கட்டும். கறை படிஞ்சிருக்குப் பார் சேலையிலும்! முதல்ல அதை சுத்தம் பண்ணு!'' என்று கூறிவிட்டு காரை எடுத்துக் கொண்டு சர்ரெனப் புறப்பட்டான்.

சேற்றை வாரி முகத்தில் அடித்ததுப் போல் கூனிக் குறுகிப்போனாள் அனு.

# 18

'கறை படிஞ்சிருக்கு பார் சேலையிலும்! முதல்ல அதை சுத்தம் பண்ணு!'

ரஞ்சனின் குரல் மீண்டும் மீண்டும் ஒலிததது. சித்ர வதையாய் இருந்தது.

'என்ன செய்யப்போகிறேன்? எப்படி என்னை நிரூபிக்க போகிறேன்? செத்துப்போய்டலாமா?'

'சேச்சே.. எதற்கு? நான் தவறிழைத்தவள் என்று உறுதிப்படுத்தவா? எப்படி என்னை சந்தேகப்பட முடிந்தது அவரால்? சரி.. அவராவது பரவாயில்லை. என்னை நன்கு அறியாதவர். சில மாதங்களுக்கு முன்பு தான் அறிமுகமானவர். ஆனால், இந்த வீடு? என்னுடைய ஒவ்வொரு அசைவையும், அறிந்தவர்கள். இவர்களும் சந்தேகப்படுகிறார்களே!'

தண்ணீர் குடிப்பதற்காக எழுந்து வந்த நாராயணன் விம்மலும், மூக்கை உறிஞ்சும் சப்தமும் கேட்டு அப் படியே நின்று விட்டார்.

வராந்தாவில் படுத்திருந்த அனுவிடமிருந்துதான் சப்தம் வருகிறது என்பது புரிந்தது.

அவள் அன்றிரவு சாப்பிடவில்லை என்பதை பார்வதி சொல்லி அறிந்திருந்தார்.



மனசு பிசைந்தது.

ஒரு கணம்தான்! உடனே தன் மனசுக்கு கடிவாளம் போட்டுக் கொண்டார்.

படட்டும். உப்பைத் தின்றாள். தண்ணீர் குடிக்கிறாள். தலைவிதி என்னவோ... அதுதானே நடக்கும்?

வந்த வழியே திரும்பிப் போனார்.

* * *

உயர்ரக ஓட்டல்!

காரை விட்டிறங்கி உள்ளே சென்றனர் மிதுனும், மாலினியும் மயில் தோகை நிறத்தில் மைசூர் பட்டு அணிந்து வண்ண மயிர் போலவே இருந்தாள் மாலினி. அவள் கழுத்தில் பளபளத்தது புதுரக வைர நகை. மிதுன் இடக் கரத்தால் அவள் இடையை அணைத்தபடி நடந்தான்.

''அய்யோ.. என்ன இது.. யாராவது பார்த்துடப் போறாங்க. கையை எடுங்க!'' வெட்கத்துடன் பதறினாள்.

''பார்க்கட்டுமே! என் பொண்டாட்டியை நான் தொடுவேன் கையை எடுன்னு யாராவது சொல்லட்டும்.. நாக்கை அறுத்துடறேன்.''

''தொழிலதிபர் எப்போதிருந்து ரவுடியானார்? ப்ளீஸ்... எடுத்துடுங்க... வெட்கமாயிருக்கு. புருஷன் பொண்டாட் டியே ஆனாலும் அவர்களின் நெருக்கமெல்லாம் தனியறைக்குள் தான் இருக்கணும். சங்கடப்படுத்தா தீங்க!''

''சரி!'' என்றவன் கையை எடுத்துவிட்டு மவுனமாக வந்தான்.

ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்டிருந்த மேசையின் முன் சென்று அமர்ந்தனர்.

பணியாளிடம் தனக்கும் மாலினிக்கும் பிடித்தவை களை ஆர்டர் செய்துவிட்டு இங்கு மங்குமாக பார்வையை சிதறவிட்டான்.

தன்னை தவிர்ப்பது புரிந்தது மாலினிக்கு. அந்த பாராமுகம் இம்சிக்க.. கண்கள் கண்ணீரில் பளபளத்தது.

''கோவமா என்மேலே?''

மனைவியைப் பார்த்தவன் பதறிவிட்டான்.

''சீச்சீ... மண்டு... அழறியா என்ன? உன்னைக் கூட கோவிச்சுப்பேனா? அந்தளவு தைரியமிருக்கா என்ன? சும்மா உன்னை சீண்டிப் பார்த்தேன்!''

''நிஜம்தானே?''

''சத்தியமாடா! உன் மேல் அளவுக்கடந்த காதல் எனக்கு. இருபத்தி நாலு மணிநேரமும் நீ என் அணைப்பில் கட்டுண்டு இருக்க வேண்டும் என்கிற ஆசை. ஆனாலும் உன்னிடம் அச்சமும், நாணமும், எச்சரிக்கை உணர்வும் அதிகமிருக்கிறது. இந்த குண நலன்கள் என்னை ரொம்பவே கவர்ந்திருக்கிறது என்றால் நம்புவாயா? நான் மட்டுமல்ல மாலினி. நம் நாட்டு ஆண்களின் எதிர்பார்ப்பே... தன் மனைவியின் இப்படிப் பட்ட நற்பண்புகள் தான்! இத்தனைக்கும் ஒவ்வொன்றை யும் இதை செய், அதை செய்யாதே என்று சொல்லிக் கொடுக்க யாருமில்லாமல் தனியே வளர்ந்தவள் நீ! சுயம்புபோல் உனக்கு நீயே கட்டுப்பாடுகளை விதித்து கொண்டு வளர்ந்திருக்கிறாய். உன்னைப் பார்க்கும்போது கர்வமாக இருக்கிறது மாலினி!''



மாலினியின் முகத்தில் இப்போது பரவசம்.

''எனக்கு ரொம்ப ஆச்சர்யமாயிருக்குங்க! ஒரு அனாதையா பிறந்து வளர்ந்த என் மேலே சலிக்காம அன்பைக் கொட்ட ஒரு ஆத்மா இருக்கறதை நினைக் கறப்ப... விதியை நம்பாம இருக்க முடியலே!''

''உன்னை நீயே ஏன் குறைச்சு மதிப்பிடணும்? என் வாழ்க்கையில் வந்த வசந்த தேவதை! என் வீட்டு மகாலட்சுமி. நீ வந்த நேரம்.. வியாபாரத்தில் எக்கச்சக்க லாபம்!''

''அதைக் கொண்டாடத்தான் மூணு லட்சத்துக்கு இந்த நகையை வாங்கி கொடுத்திருக்கீங்க. ஆனா, எதுக்குங்க இதெல்லாம்? நகை அணிவதில் எனக்கு அதிகமாய் ஆர்வமல்லீங்க!''

''ஆனா, விதவிதமா நகையைப் போட்டு அழகுப் பார்க்கணும்னு எனக்கு ஆசையிருக்கே? இந்த நெக்லஸ் உனக்கு ரொம்ப அழகாயிருக்கு மாலினி!''

அதற்குள் பேரர் வந்து விட... உணவுப் பண்டங்கள் மேசை மீது இடம் பிடித்தன.

நாசூக்காய் பேசிக் கொண்டே சாப்பிட்டனர்.

அவர்களுக்கு அடுத்த மேசையில் அமர்ந்திருந்தனர் இளஞ்ஜோடி ஒன்று.

''அதான் மன்னிப்புக் கேட்டுட்டேனே சவுமியா? இன்னும் முகத்தை தூக்கி வச்சுக்கிட்டிருந்தா என்ன அர்த்தம்?''

''என் பேச்சை நீங்க காதிலேயேப் போட்டுக்கற தில்லை அந்த வருத்தம்தான் தேவா! உங்க உடம்புக்கு ஏதாவது ஒரு பாதிப்புன்னா என்னால் நிம்மதியா இருக்க முடியுமா? மனசுக் கட்டுப்பாடு இல்லை உங்களிடம்!''

''நீ இந்தளவு வருத்தப்படறது எனக்கு கஷ்டமாயிருக்கு நானும் எவ்வளவோ கட்டுப்பாடாதான் இருந்தேன். எப்படியோ மது குடிக்கறதை விட்டுட்டேன். சிகரெட்டை யும் புகைக்காமல் தான் இருந்தேன். வியாபார விஷயமாய் நண்பர்களுடன் பேசும்போது.. அவர்களுக்கு கம்பெனி கொடுக்க வேண்டிய கட்டாயம். அதனால் அவர்களோடு சேர்ந்து புகைக்க வேண்டியதாகி விட்டது!''

''இதென்ன சப்பைக்கட்டு? வியாபார நிமித்தமாகவோ, வேறு விஷயமாகவோ நண்பர்களுடன் பேசும்போது, மதுவும், சிகரெட்டும் தான் இருந்தாகணுமா? ஏன் ஆப்பிளோ, ஆரஞ்சோ... அங்கு இடம் பெறக்கூடாதா? அவை கேலிக்குரிய பொருள்களா என்ன?''

''இதுவும் நல்ல ஐடியாதான்! உன் மேல் சத்தியமாக சொல்கிறேன். இனி சிகரெட் புகைக்க மாட்டேன். சந்தோஷம் தானே?''

''வயிற்றுவலியால் துடிக்கும்போதும், நெஞ்சுக் கிழிய இருமும்போதும் என் உயிரே போய்விடுகிறது தேவா!''

''இல்லடா.. நீ எனக்காக இவ்வளவு வருந்துவதே பெரிய தண்டனை தான் தேவா! எந்த சூழ்நிலையிலும்



உன் மனதை நோகடிக்க மாட்டேன். சாப்பிடு சவுமியா ஆறிடப்போகுது!''

அவர்கள் கூற்றைக் கேட்டுக் கொண்டிருந்த மிதுனும், மாலினியும் சத்தமின்றி நகைத்தனர்.

''அருமையான ஜோடி!''

''ஆமாம்... நம்மைப்போல..!''

''ஆனால், அது மாதிரி கோபித்துக் கொள்ள எனக்கு வாய்ப்பில்லை. என் கணவருக்கு தான் எந்த கெட்டப் பழக்கமும் இல்லையே!''

''நீ என்னிடம் கோபித்துக் கொள்ள வேண்டும் போல் ஆசையாய் இருக்கிறது. இதற்காகவே ஏதாவது புதுப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் என்ன?''

''விளையாட்டாய் கூட உங்களால் அம்மாதிரி தவறு செய்ய முடியாது!''

''ஏன் அப்படி சொல்கிறாய்?''

''என் கணவரைப் பற்றி எனக்குத்தானே தெரியும்'' என்றாள் பெருமிதமாக.

* * *

அன்று சனிக்கிழமை!

பள்ளி அரைநாள் மட்டும்தான் என்பதால் இரண்டு மணிகெல்லாம் வீட்டிற்கு வந்துவிட்டாள் அனு. அதுவரை வராந்தாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த நாராயண னும், பார்வதியும் அமைதியாகி விட்டனர்.

தன்னைப் பற்றிய பேச்சுதான் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை புரிந்துக் கொண்டவள், அவர்களை சங்கடப்

படுத்த விரும்பாமல் கைப்பையை வைத்துவிட்டு மொட்டை மாடிக்குச் சென்றாள்.

ஆச்சர்யம்... விமலாவும் அங்கிருந்தாள். காயப்போட்டிருந்த புடவையை எடுத்துக் கொண்டிருந்தாள்.

அவளிடம் பேசாமல் இருப்பது மரியாதை இல்லை என்று உணர்ந்தவள், ''என்ன அண்ணி.. இன்னைக்கு வேலைக்கு செல்லவில்லையா?'' என்றாள்.

''ஊகூம்... தலைவலி... போகவில்லை. நீயென்ன, சீக்கிரமே வந்துவிட்டாய்?''

''அரைநாள் தான்...''

''என்ன சொல்கிறார் உன் புருஷன்? குடும்ப நலக் கோர்ட்டில் விவாகரத்துக்கு மனுபோட்டிருப்பதாக கேள்விப்பட்டேன்.''

''அந்தப் பேச்சு எதற்கு அண்ணி?''

''கவலைப்படாமல் இருக்க முடியுமா? என் புருஷன் கடன்பட்டு சுளையா ஒரு லட்சம் கொடுத்து நடத்தின கல்யாணமாச்சே? பேச உரிமையில்லையா?'' என்றாள் ஏளனமாக.

அனு அமைதியானாள்.

''உன்னைப் பார்த்தாலே பரிதாபமாயிருக்கு அனு. இந்த வாழ்க்கைதான் இல்லைன்னு ஆகிப்போச்சு. அந்த கோபி முகவரியைக் கொடு. பேசிப் பார்த்து சேர்த்து வைக்கிறேன்!''

உதடை கடித்து பொங்கி வந்த அழுகையை மென்றாள் அனு.



''பரவாயில்லை அண்ணி, என் மீது இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்கிறீர்களே... அதற்கு நன்றி! என் பிரச்சனையை நானே பார்த்துக் கொள்கிறேன். நானே அந்த கோபியை சந்தித்து பேசத்தான் போகிறேன்... உங்களுக்கு அந்த சிரமம் வேண்டாம்!'' என்றவள் வேகமாக கீழிறங்கி சென்றுவிட்டாள்.

* * *

சனிக்கிழமை என்பதால்... சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்ய பக்தர்கள் கூட்டம் அதிகமிருந்தது.

வீட்டிலிருப்பது நெருப்பின் மேல் அமர்ந்திருப்பதுப் போலிருக்கவே கோவிலுக்கு வந்துவிட்டாள் அனு. பெற்றோர்கள் அவளைப் பார்த்ததுமே வாயை மூடிக் கொள்கின்றனர். அண்ணியோ, வாயைத் திறந்தால் மூடுவதில்லை. உடன் பிறந்தோர்களின் முகத்திலோ வெறுப்பு.

கோவில் திறந்ததும் முதல் ஆளாக நுழைந்தவள் அனுதான்!

பிரகாரத்தில் ஒரு ஓரமாய் அமர்ந்தவள்தான்.. மூன்று மணி நேரமாய் அமர்ந்திருக்கிறாள். வேதனைகள் இதயத்தை போட்டு அழுத்தியது.

இப்படியே கரைந்து காணாமல் போய்விடக் கூடாதா என்றிருந்தது.

'அம்மா தாயே... என் வாழ்க்கையில் என்ன நடக்கிறது? நான் யார் என்பது எனக்குத் தெரியும், உனக்கும் தெரியும். எனக்கு வாழ்க்கை கூட வேண்டாம். நான் குற்றமற்றவள்

என்பதை நிரூபிக்க வேண்டும். அதற்கு ஒரு வழியைக் காட்டு. நான் கோபியை சந்திக்க வேண்டும் அவன் வாயாலேயே உண்மையைச் சொல்ல வேண்டும் கருணை செய் தாயே!' கண்மூடி மனமுருக வேண்டிக் கொண்டிருந் தாள்.

மூடிய கண்களிலிருந்து கண்ணீர் கன்னத்தில் வழிந் தது.

அப்போது...

ஏதோ பொசுங்குகிற வாசம் மூக்கை நெருட... கண் திறந்தவள் அதிர்ந்தாள்.

சற்று தள்ளி எதிரே... நவக்கிரகங்கள் இருந்தன.

அதன் அருகில் நிறைய எள் விளக்குகள் எரிந்துக் கொண்டிருக்க... பக்தர்கள் கண்மூடி பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர். அதில் ஒரு இளம்பெண்ணின் சேலை தலைப்பில் விளக்கின் நெருப்பு பற்றி.. எரிந்து கொண் டிருக்க.. அவளோ ஆபத்தை அறியாமல் கண்மூடி யிருந்தாள்.

பதறி எழுந்த அனு ''அய்யோ'' என்றலறியபடி அவளை நோக்கி ஓடினாள்.

# 19

பேருந்தில் கூட்டம் நெருக்கித் தள்ளியது.



''டிக்கெட்... டிக்கெட்... எடுக்காதவங்க சீக்கிரம் எடுத்துடுங்க...'' நடத்துனர் எச்சரிக்கை குரல் கொடுத்தார்.

அதிசயமாய் ஒரு இருக்கை காலியாக... அமர்ந்துக் கொண்ட அனு பெருமூச்சுடன் தோள் பையைத் திறந் தாள்.

வாங்கிய டிக்கெட்டையும், சில்லரையையும் பத் திரப்படுத்திவளின் கண்களில் அந்த விசிட்டிங் கார்டு பட்டது.

சற்றுநேரத்திற்கு முன்பு கோவிலில் அந்த இளம் பெண் கொடுத்தது.

உயர்தர விசிட்டிங் கார்டு.

'மிதுன்' என்ற பெயர் வடிவாய் பொறிக்கப்பட்டு மின்னியது. கூடவே வீடு, அலுவலக முகவரியுடன், தொலைபேசி எண்களும்.

எடுத்துப் பார்த்தவளுக்கு அப்போது தெரிய வாய்ப் பில்லை... அந்த கார்டுதான் தன் விதியை மாற்றி எழுதப் போகிறதென்று.

கோவிலில் நடந்த சம்பவத்தை நினைத்தபோது இப்போதும் உடல் நடுங்கியது.

'தான் மட்டும் கவனிக்காதிருந்தால்...?'

தீயை அணைத்தபின்பும், அந்தப் பெண் அதிர்ச்சியின் பிடியிலிருந்து மீளாமல் தன்னை இறுக அணைத்துக் கொண்டிருந்தாளே!'

''உங்களை என் உயிருள்ளவரை மறக்கமாட்டேன். ரொம்ப நன்றி.' என்று திரும்ப திரும்ப கூறிக் கொண் டிருந்தாளே!'

'என்ன பெயர் சொன்னாள்?'

'மாலு.. இல்லை இல்லை.. மாலினி! ஆம் அது தான்!'

'சமீபத்தில் தான் திருமணமாகியிருக்கிறது போலும். மகிழ்ச்சியான மணவாழ்க்கை என்பதை அவள் தேகமும், உடைகளும் வெளிப்படுத்துகின்றதே!'

அனுவின் எண்ணவோட்டம் மாலினியையே சுற்றிக் கொண்டிருந்தன.

* * *

மாலினி சொல்ல.. சொல்ல... மிதுனின் முகம் வெளிறிப்போனது.

''மாலு.. நீ சொல்றதெல்லாம் நிஜமா?''

''ஆமாங்க.. இதோப் பாருங்க.. தீயில் கருகிய சேலை!''

''கடவுளே!'' என்று பதறியவன், ''அப்பா.. அப்பா'' என்று கத்தினான்.

குரல்கேட்டு, தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்த அருணாச்சலம், என்னவோ, ஏதோவென்று ஓட்டமும் நடையுமாய் வந்தார்.

''என்ன மிதுன்?''

''இங்கே பாருங்கப்பா!''

''ப்ச்.. என்னங்க.. இதைப்போய் பெரிசுப்படுத்தறீங்க? மாமா பயந்துடப்போறார்!''



''பயப்படாம? பாருங்கப்பா இவ சேலையை?''

''அய்யோ... என்னம்மாயிது? என்னாச்சு? ஏன் சேலை கருகிக்கிடக்கு?'' விழிகள் மருண்டன.

''இவ கோவிலுக்குப் போயிருக்கா! கண்மூடி, தன்னை மறந்து சாமி கும்பிட்டிருக்கா, தீபத்திலே முந்தானைப் பட்டு எரிய ஆரம்பிச்சிருக்கு. அதை யாரோ ஒரு பெண் பார்த்துட்டு, பதறி வந்து அணைச்சிருக்கா, அவ மட்டும் பார்க்கலேன்னா... கற்பனைக் கூட பண்ண முடியலேப்பா.''

''இப்ப என்னங்க ஆகிப்போச்சு? எனக்கு தான் எதுவும் ஆகலையே.. ஏன் டென்ஷன் ஆகறீங்க?''

''என்னம்மா அவ்வளவு எளிதா சொல்லிட்டே? நடந்தது எங்களைப் பொறுத்தவரை பெரிய விபத்துதான். இவ்வளவு கவனக்குறைவா இருக்கக் கூடாதும்மா!''

''இனிமேல் கவனமா இருக்கிறேன் மாமா!''

''அப்படின்னா.. மறுபடி கோவிலுக்குப் போகப் போறியா?'' என்றான் மிரட்சியுடன் மிதுன்.

''மாமா.. இவருக்கு கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்க இவ்வளவு பெரிய பிஸினஸ் புலி, இந்த சாதாரண விஷயத்துக்கு பயப்படலாமா? ஒரு முக்கியமான வேண்டுதலை மனசுல வச்சுக்கிட்டு நாற்பத்தியெட்டு வாரம் விளக்கேத்தறதா பிரார்த்தனை பண்ணியிருக்கேன். அதை பாதியிலே கைவிட முடியாது!''

''அப்படியென்ன வேண்டுதல்?''

''என் மாமாவோட நோயெல்லாம் தீரணும். நூறு வருஷம் நம்மோட இருக்கணும்னு!''

''மா...லி...னி!'' என்றார் நெகிழ்ந்துப்போன அருணாச் சலம்.

''எனக்கெதுக்கும்மா அத்தனை வருஷம்? உங்க ரெண்டு பேரையும் பார்க்கிறப்ப மனசுக்கு நிறைவா இருக்கும்மா!''

''எங்களுக்கு நீங்க எப்பவும் வேணும் மாமா!'' என்றவள் கணவன் பக்கம் திரும்பி, ''நடந்த எல்லாத்தையும் நல்லதுக்குன்னு எடுத்துக்குவோம். சாமி விஷயத்திலே தடைப்போடாதீங்க. இனிமேல் உஷாராயிருப்பேன்!'' என்றாள்.

சமாதானமடைந்தவனாய் மவுனமானான் மிதுன்.

ஆனால், இரவில், கட்டிலில் தன் காதல் மனைவியை நெஞ்சில் சாய்த்து அவள் கன்னத்தை தடவிக் கொண் டிருந்தான் கனிவாய்.

''இப்ப நினைச்சாலும் பக்குனு இருக்கு மாலு! அந்தப் பெண் மட்டும் பார்க்காமலிருந்தால்.. உனக்கு.. உனக்கு...!''

''ஏங்க அதையே நினைச்சிட்டிருக்கீங்க?''

,''முடியலேடா.. உனக்கு ஏதாவதொன்னு ஆகி இருந்தால், என்னால் தாங்கிக் கொள்ள முடியுமா சொல்லு?''

''எனக்கு எதுவும் ஆகாதுங்க. அம்மனே அந்த பெண் உருவத்தில் வந்து காப்பாத்தின மாதிரி இருக்கு!''

''என் மாலு உயிரை காப்பாத்தின அந்தப் பெண்ணைப் பார்த்து நான் நன்றி சொல்லணும் மாலு. அவ பேரென்ன? எங்கிருக்கா?''



''அடடா.. அந்த பதட்டத்துல நான் அவங்கக் கிட்டே பெயரைக் கூட கேட்டுக்காம விட்டுட்டேனே...!''

''என்ன காரியம் பண்ணியிருக்கே? எவ்வளவு பெரிய உதவிய செய்திருக்காங்க.. அவங்க பேரைக் கூட கேட்டுக்காம வந்துட்டியே!''

''ஆனா, நம்ம விசிட்டிங் கார்டை கொடுத்துட்டுதான் வந்தேன்!''

''என்ன பிரயோஜனம்? அவங்களா வந்து நம்மைத் தொடர் கொள்வாங்கன்னு எதிர்பார்க்கறது தப்பில் லையா?''

''ஆமாங்க.. மன்னிச்சிடுங்க!'' அவன் நெஞ்சில் முகம் புதைத்து அழுத்தமாய் முத்தமிட்டாள் மாலினி.

மிதுன் இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்.

* * *

''இன்னைக்கு உன் பிறந்தநாள்ங்கறே... வீட்டுக் குள்ளேயே அடைஞ்சு கிடந்தா எப்படி? கிளம்பு வெளியே போய்ட்டு வரலாம்!'' கோபி வற்புறுத்தினான்.

''ஆமா.. நான் இருக்கிற இருப்புக்கு பிறந்தநாள் ஒண்ணுதான் குறைச்சல்!'' ரஞ்சன் அலுத்துக் கொண் டான்.

''இதோப் பாரு ரஞ்சன். யாருக்கு தான் பிரச்சனை யில்லே? உனக்கு மனைவியால பிரச்சனைன்னா.. எனக்கு வேற பிரச்சனை! ஒவ்வொரு மனுஷனையும்

நிக்கவச்சுக் கேளு.. அவனவன் ஆயிரம் பிரச்சனையை சொல்லுவான்? சும்மா கோவிலுக்காவது போய்ட்டு வரலாம்.. கிளம்பு!''

''விடமாட்டியே...!''

மனமின்றி அவனுடன் காரில் புறப்பட்டான் ரஞ்சன்.

* * *

தன் கணவன் பெயரில் அர்ச்சனைப் பண்ணிவிட்டு கோவிலை சுற்றி வந்தாள் அனு.

ஆயிரம் கோபதாபங்கள், வேதனைகள் இருந்தாலும் மனசில் சுமந்தவனை எளிதில் மறக்க முடியவில்லை அவளால்.

கையில் அர்ச்சனைக் கூடையுடன் வந்துக் கொண்டிருந்த மாலினி அவளை கவனித்து விட்டாள்.

''என்னங்க.. என்னங்க...!''

யாரோ கைதட்டி அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பியவளுக்கு சட்டென புரிபடவில்லை.

''என்னைத் தெரியலையா? சேலையிலே தீப்பிடிச்சப்ப நீங்கதானே என்னை...!''

''ஓ... நீங்களா... நல்லாருக்கீங்களா?''

''உங்க புண்ணியத்துல நல்லாவே இருக்கிறேன்!''

''சன்னிதானத்துல நின்னுக்கிட்டு அப்படி சொல்லக் கூடாது!'' சிநேகமாய் சிரித்தபடி சொன்னாள் அனு.



''இல்லீங்க.. உண்மைய எங்கே வேணாலும் சொல்லலாம். அன்னைக்கு அவசரத்துல உங்க பேரைக் கூட கேட்டுக்காம போய்ட்டேன்.''

''அனு.. பள்ளியில் ஆசிரியரா வேலை பார்க்கிறேன்.''

''ஓ...'' என்றாள் ஆச்சர்யமாய்.

''என் கணவர் உங்களைப் பார்த்து நன்றி சொல்லணும்னு துடிச்சிட்டிருக்கிறார்!''

''அதெல்லாம் எதுக்குங்க? என் இடத்திலே யார் இருந்தாலும் அதைதான் செய்திருப்பாங்க.''

''உங்கள் கணவர் என்ன வேலை செய்கிறார்?''

சொன்னாள்.

''பெண்கள் இருவரும் இலகுவாய் மனதளவில் நெருங்கி விட்டனர்.

அனுவிற்கு அவளிடம் பேசுவது மனதிற்கு ஆறுதலாய் இருந்தது. இப்போதுஅவளிடம் பேசுவதற்குதான் யார் இருக்கிறார்கள்?

மாலினிக்கும் அனுவின் சாந்தம் தவழும் முகமும், பேச்சும் வெகுவாய் ஈர்த்துவிட்டது.

அப்போது...

கோவிலுக்குள் நுழைந்தனர் ரஞ்சனும், கோபியும்.

ச்ற்று தூரத்திலேயே அவர்கள் கண்ணில் பட்டு விட்டாள் அனு.

'கணவனைப் பிரிந்திருக்கிறோமே.. விரைவில் திருமண வாழ்க்கை ரத்தாகப்போகிறதே என்கிற வருத்தம்

கொஞ்சமுமின்றி சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறாளே... ச்சீ.. மானங்கெட்ட பெண்!' அவரைப் பார்க்கவே கசந்தது ரஞ்சனுக்கு.

பற்றிக் கொண்டு வந்தது கோபிக்கு. ரஞ்சன் அறியாமல் பல்லைக் கடித்தான்.

'அனு... படுபாவிப் பெண்ணே... என்னை பிரிந்த துயரம் கொஞ்சம் கூட இல்லாமல் இருக்கிறாயா? எப்படி கெஞ்சினேன்? மனமே இரங்காமல் ஒரேயடியாய் தூக்கி எறிந்து விட்டாய் அல்லவா? பார்த்தியா... வாழவிட்டேனாப் பார்? இதோ உன் புருஷன் என் பக்கத்தில்? இன்னும் கொஞ்ச நாள்தான். உன்னை ஒரேயடியாய் தலை முழுகி விடுவான். அப்போது என்னைத் தேடி வருவாய் நிச்சயமாய்!'

சட்டென உறைத்தது கோபிக்க.

'அனு இப்போது என்னைப் பார்த்துவிட்டால்? ரஞ்சனுக்கு நான்தான் கோபி என்று தெரிந்து விடுமே! என்ன செய்யலாம்?' தவித்தான்.

''கோவிந்த்...''

''எ... என்ன ரஞ்சன்?''

''எனக்கு மனசு சரியில்லை.. என்ன ஏதுன்னு தயவு செய்து கேட்காதே... வா போகலாம்!'' அவன் கையைப் பற்றி விறுவிறுவென வெளியில் அழைத்து வந்தான்.

அவனுக்கு சங்கடத்தைத் தராமல் அவனே ஒரு நல்ல வழி காட்டிவிட்டதில் மகிழ்ந்துப் போனான்.

''என்ன ரஞ்சன்... திடீரென்று?''



''ஒன்றும் கேட்காதே என்றேனே? வண்டியில் ஏறு!'' முகம் கடுமையாய் இருந்தது.

சிரிப்பை அடக்கிக் கொண்டான் கோபி.

கார் சீறிப் பாய்ந்தது.

சைதாப்பேட்டை தாண்டி ஒரு 'பார்' முன்பாக நிறுத்தி இறங்கினான்.

பின்னால் வந்த காரில் இருந்த மிதுன் துணுக்குற்று காரை நிறுத்தினான்.

'யார் அது? ரஞ்சன் போல் தெரிகிறதே... அட அவனே தான்!' வியப்புடன் காரை நிறுத்தி வேகமாய் இறங்கி ஓடினான்.

''ரஞ்சன்.. ரஞ்சன்!''

திரும்பிய ரஞ்சனின் முகத்திலும் ஆச்சர்யப் பூக்கள்.

''அட.. மிதுன்... நீ எங்கே இங்கே?''

''நான் கேக்க வேண்டிய கேள்வி! உன்னைப் பார்த்துட்டு தான் காரை நிறுத்தினேன். என்ன பழக்கமிது?''

''சும்மாதான்... அதைவிடு. கல்யாணமாய்டுச்சுன்னு கேள்விப்பட்டேன்! ஏண்டா கூப்பிடலே?''

''உனக்கும் கல்யாணமாய்டுச்சுன்னு கேள்விப்பட்டேனே.. நீ கூப்பிட்டியா?''

''நம்ம சண்டைய அப்புறம் வச்சுக்கலாம். கோவிந்த்... இப்படி வா! இவர் என் தொழில் நண்பர். பேரு மிதுன்...'' இவர் பேரு கோவிந்த்!'' என்று இருவரையும் அறிமுகப் படுத்தினான்.

''அலோ!'' என்று கைப்பற்றிய கோபியை புருவம் சுருங்க பார்த்தபடி ''அலோ'' என்றபடி கைப்பிடித்து குலுக்கியவனுக்குள் வண்டு குடைந்தது.

'இவனை எங்கோ பார்த்திருக்கிறேன்.. எங்கே?'

## 20

அலுவலகம் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான் ரஞ்சன். காரை நிதானமாய் ஓட்டிக் கொண்டிருந்தவனின் செல்பேசி அலறியது.

கோபியிடமிருந்துதான்!

''சொல்லு கோவிந்த்!''

''எவ்வளவு நேரம்ப்பா உன் வீட்டு வாசல்ல காவலுக்கு நிப்பேன்?''

''ஸாரி கோவிந்த்... வந்து நேரமாச்சா?''

''ஒரு மணிநேரம் ஆயாச்சு!''

''வந்துக்கிட்டே இருக்கேன்.. பத்து நிமிஷத்துலே அங்கிருப்பேன்!''

''இன்னொரு விஷயம். உனக்கு கூரியர்ல ஒரு கடிதம் வந்திருக்கு. நான்தான் கையெழுத்துப் போட்டு வாங்கினேன். கோபின்னு அனுப்பியவர் பெயர் இருக்கு!''



''அ.. அப்படியா? பத்திரமா வச்சுக்க. வந்து பேசிக்கறேன். வண்டியை ஓட்டிக்கிட்டு போன்ல பேசறது தப்பு. போலீஸ் கண்லே பட்டேன்னா... அபராதம் போட்டு தாளிச்சிடுவாங்க. வச்சிடறேன்!''

அணைத்து வைத்தவன் மனசு எரிந்தது.

இன்றும் ஒரு கடிதம்!

'பதிவிரதை, பத்தரை மாற்று தங்கம் என்று தனக்குத்தானே சான்றிதழ் கொடுத்துக் கொண்டாளே? கண்ணே, மணியே என்று கொஞ்சிக் குலாவிய அவளின் காதலன் எல்லாவற்றையும் புட்டு புட்டு வைக்கிறானே! எல்லாவற்றையும் மறைத்து ஒண்ணுந்தெரியாத குழந்தையைப் போல் அல்லவா என்னிடம் பேசினாள்? எந்த உறுத்தலும் இல்லாமல் அல்லவா என்னுடன் கலந்தாள்?'

'போயும்.. போயும் எனக்கென்று இவள் வாய்த்திருக்க வேண்டாமே!'

வீடு போய் சேர்ந்தான்.

''ஸாரிப்பா... அலுவலகத்தில் முக்கியமான வேலை... அதனாலதான் தாமதமாய்டுச்சு!''

''அதுக்கேன் வருத்தப்படறே? நான் உன் நண்பன். உனக்காக காத்திருப்பதில் என்ன தவறு? இந்தா.. இந்த கடிதம்தான்.. யாரது கோபி? உன் நண்பனா?''

''அ.. ஆமாம்! கொஞ்சமிரு உடைமாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்!'' கடிதத்தை வாங்கிக் கொண்டு உள் அறைக்கு ஓடியவனைப் பார்த்து நமுட்டாக சிரித்தான் கோபி.

ரஞ்சன் தன் மனைவியுடன் பிணக்கு, விஷயம் விவாகரத்து வரைப் போயிருக்கு என்றளவில்தான் அவனிடம் கூறியிருந்தானே தவிர, ஏன், எதனால் என்பதை எல்லாம் சொன்னதில்லை. சொன்னால் அவனுக்கு தானே அசிங்கம், அவமானமெல்லாம்?

கடிதத்தைப் பிரித்தான்.

*'சகோதரா...!*

*இப்படி அழைப்பதுதானே முறை? அனு உனக்கும் எனக்கும் சொந்தமானவள் அல்லவா? இத்துடன் அனு எனக்கு எழுதிய கடிதம் அனுப்பி இருக்கிறேன். அடுத்த முறை உனக்கு அனுப்பப் போவதுதான்... சிறப்பு வாய்ந்த கடிதம்! ஆம்.. அதில்தான் நானும், அனுவும் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தை அனுப்பப் போகிறேன். காத்திரு!'*

*இப்படிக்கு...*

*கோபி!*

கணநேரம் சலனமற்று நின்றான் ரஞ்சன்.

குடும்ப நலக்கோர்ட்டில் விவாகரத்திற்கு விண்ணப்பித்தாகி விட்டது. அவள் தவறிழைத்தவள் என்று இதுவரை வந்த ஒன்பது கடிதங்களின் சாட்சியே போதும். என்றாலும், அவன் இதய மூலையில் ஒரு நப்பாசை!

எல்லாமே பொய்யாகி விடக்கூடாதா? இதெல்லாம் யாரோ, எவரோ எழுதியது.. நான் அனுப்பியதல்ல என்று சாட்சியுடன் வாதிட்டு அனு ஜெயித்திடமாட்டாளா என்று



ஏங்கினான்! ஏனென்றால், சில மாதங்களே என்றாலும் அனுவை அவன் அணு அணுவாக காதலித்திருந்தான். இதோ.. அடுத்த கடிதத்தில் அசைக்க முடியாத ஆதாரம் வரப்போகிறதே! என்ன செய்யப்போகிறாள் அந்த பத்தினி? ச்சே!' கசந்தது.

* * *

மதிய உணவு இடைவேளை!

கூறுகட்டி விற்கும் மல்லிகைப்பூக்களைப் போல.. வெள்ளை ஆடையில், ஆங்காங்கே சிறு கும்பலாய் வட்டம்கட்டி அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர் பள்ளிக் குழந்தைகள்.

அனு உள்ளிட்ட சில ஆசிரியைகள், பிள்ளைகள் ஒழுங்காக சாப்பிடுகிறார்களா என்று நடந்தபடி கவனித்துக் கொண்டிருந்தனர்.

''அனு மிஸ்...'' சக ஆசிரியை சுசித்ரா இவளை நோக்கி விரைந்து வந்தாள்.

'என்ன?' என்பதுப் போல் பார்த்தாள்.

''உங்களைத் தேடி ஒருவர் வந்திருக்கிறார்! வரவேற்பறையில் காத்திருக்கிறார்.''

''என்னைத் தேடியா? யாராயிருக்கும்? இதுவரை யாரும் வந்ததில்லையே.. ஒருவேளை அப்பாவோ?'' வேகமாய் நடந்து வரவேற்பறையை அடைந்தவள் சில கணங்கள் சுவாசிக்க மறந்தாள்.

ரஞ்சன்! இவளைப் பார்த்ததும் எழுந்து வந்தான்.

''வா.. வாங்க!'' சொல்லி முடிப்பதற்குள் தவித்துப் போனாள்.

''நானும்.. அதைச் சொல்லத்தான் வந்தேன்!''

இரண்டு மூன்று ஆசிரியைகள் இவர்களை நோக்க.. சங்கடப்பட்டாள்.

''இங்கே வேண்டாம். அதோ அந்த மரத்தடியில் சென்று பேசலாமே!''

''ஏன்?''

''அ... அது வந்து.. நாம் பிரிந்திருப்பது யாருக்கும் தெரியாது!''

''அங்கே சென்று பேசினால் மட்டும் தெரியாமலேயே போய்விடுமா என்ன?''

''.......?!''

''நம்ம கேஸ் இன்னும் பத்து நாள்ல கோர்ட்டுக்கு வருது. வாய்தா வாங்காம.. ஒழுங்கா வந்து சேர். அதை சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்!''

கழுத்தைப் பிடித்து நெரிப்பதுப் போன்ற அவஸ்தை. வேதனையில் கண்கலங்கியது.

''நான் தவறு செய்தவள் என்று தீர்மானமேப் பண்ணி விட்டீர்களா?''

''ஒன்றல்ல, இரண்டல்ல... நீ உன் காதலனுக்கு எழுதிய கடிதங்களில் ஒன்பது, இப்போது என்னிடம் உள்ளது.''



''அந்த கடிதத்தின் மீது வைக்கும் நம்பிக்கையில் சிறு அளவாவது என் மீது வைக்கலாமே! கணவனால் கைவிடப்பட்டு வாழாவெட்டியாய் வாழும் பெண்கள் மீது இந்த சமூகம் வீசும் சொற்களை விட, பார்வைகளை விட, பிறந்த வீட்டின் பேச்சும், பார்வையும் மிக மோசமானவை. அந்த வலி அனுபவித்தால்தான் உணர முடியும். எனக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். என் தரப்பு நியாயங்களை நிரூபிக்கிறேன். நீங்கள் மறுபடி என்னை ஏற்று வாழவேண்டுமென்பதற்காக கூறவில்லை. நான் குற்றமற்றவள் என்று தெரிந்துக் கொண்டால் போதும்!''

''பெண்களின் கண்ணீருக்கு வலிமை அதிகம் என்று எச்சரிக்கை உணர்வு இல்லாத எவரோ எழுதி வைத்து விட்டுப் போனது. அதை என்னிடம் பிரயோகப்படுத்த வேண்டாம். இன்னும் சில நாட்களில் நீயும், உன் காதலனும் சேர்ந்தெடுத்துக் கொண்ட புகைப்படத்தை அனுப்பி வைக்கிறேன் என்று கூறிவிட்டான். எதிர்பார்க்கலே.. இல்லே! வீணாக நடித்து, வசனங்கள் பேசி என் நேரங்களை விரயமாக்காதே!'' கடுமையான முக பாவத்துடன் பேசிவிட்டு, அதே வேகத்தோடு திரும்பி நடந்தான்.

திக்பிரமையோடு, பேச நா எழாமல் அப்படியே சமைந்து விட்டாள் அனு.

* * *

கணவன் உடை அணிய உதவி செய்துக் கொண்டிருந்தாள் மாலினி.

''இந்த சின்ன வேலையக் கூட என்னால செய்துக்க முடியாதா மாலு? டாக்டர் என்ன சொன்னார்? முழு ஓய்வு எடுக்கணும்னு சொன்னாரா, இல்லையா?''

''கடினமான வேலைய மட்டும்தான் செய்யாதேன்னு சொன்னார். இது என்ன மலைய புரட்டற வேலையா? என் புருஷனுக்கு சட்டை பொத்தானைக் கூட போட்டு விடக்கூடாதா? நம் குழந்தை இந்த உலகத்தைப் பார்க்க முழுதாய் ஏழுமாதங்கள் இருக்கிறது. அது வரை பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி ஒரே இடத்தில் இருக்கட்டுமா?''

''பிள்ளையார் மாதிரிதானே ஆகப்போகிறாய்?''

''ம்... இப்படியெல்லாம் கிண்டல் பண்ணக்கூடாது'' என்றாள் சிணுங்கலாக.

''முழு தாய்மையுடன் என் மாலுக்குட்டி பேரழகாய் இருக்கப் போகிறாளாக்கும்!'' மனைவியை மிருதுவாய் இழுத்து அணைத்தான்.

''அப்புறம் மாலு.. உன்னிடம் சொல்லாமல், உன் அனுமதி கேட்காமல் ஒரு காரியம் பண்ணிவிட்டேன்.''

''என்ன அது?''

''என் நண்பன் ரஞ்சனையும், அவன் நண்பன் கோவிந்தையும் வரும் ஞாயிறு நம் வீட்டிற்கு சாப்பிட வரசொல்லியிருக்கிறேன்.''

''யார்? அவர் மனைவியைக் கூட விவாகரத்து பண்ணப் போகிறார் என்றீர்களே... அவரா?''

''அவனேதான்!''



''அவ்வளவு சீக்கிரத்தில் மனைவி கசந்துவிட்டாளாமா உங்கள் நண்பருக்கு?''

''மனைவியின் நடத்தை சரியில்லையாம். சரி அதை விடு! வருத்தத்தில் இருக்கிறான். கொஞ்சமாவது சந்தோஷமாயிருக்கட்டும் என்றுதான் இந்த விருந்து ஏற்பாடு! இந்தவிருந்துக்கு உன் கோவில் தோழியையும் அழைக்கலாமே...!''

''நல்ல யோசனை'' என்றவள் அனுவிடம் அடுத்த இரண்டாவது நாளே.. கேட்டும் விட்டாள்.

''நானா? விருந்துக்கா?'' சங்கடமாய் இழுத்தாள் அனு.

இடைபட்ட மூன்று மாதங்களில் அவர்களிருவரும் நல்ல தோழிகளாகி விட்டிருந்தனர். ஆனாலும் தன் நொந்துப்போன திருமண வாழ்க்கையைப் பற்றி அனு வாயே திறக்கவில்லை.

''எந்த சாக்கு போக்கும் சொல்லாமல்... கண்டிப்பா வர்றே! அதுவும் உன் கணவரோட!''

''க... கணவருடனா?''

''ஏன் அலர்றே?''

''அ.. அவர் ஊரில் இல்லையே! அலுவலக விஷயமாய் கோவா சென்றிருக்கிறார். வர பத்து நாளாகும்.''

''அடடா.. சரி.. நீயாவது வந்து சேர். வரலேன்னு வச்சுக்க.. வீட்டிற்கு வந்து இழுத்துப் போவேன்!''

விடுவதாயில்லை. அவளிருந்த மனநிலையில் ஓவென்று அழவேண்டும் போலிருந்தது. அடுத்தவாரம்

விவாகரத்து வழக்கு விசாரணைக்கு வருகிறது. இந் நிலையில் விருந்தா?

''வர்றேன் மாலினி!'' என்றாள் அரைகுறை மனதுடன்.

* * *

குட்டிப் போட்டப் பூனையாய் இங்குமங்கும் நடந்துக் கொண்டிருந்த மகளை கவனித்தாள் பார்வதி.

முகத்தில் கலவரம் கோர்த்து, கோர்த்து பிரித்த விரல் களில் பதட்டம்.

அவளைப் பார்க்கையில் பெற்றவயிறு கலங்கியது.

''தூங்கலியா? நேரமாச்சே?'' என்றாள் பார்வதி.

''தூக்கம் வரலேம்மா!''

''............?!''

நடப்பதை நிறுத்தி அம்மாவிடம் வந்தாள்.

''அம்மா...!''

''ம்...''

''பயமாயிருக்கும்மா!''

''ஏன்?''

''இன்னும் நாலுநாள்ல கேஸ் கோர்ட்டுக்கு வருது. முன்னே பின்னே போனதில்லே.. பயமாயிருக்கும்மா.. நீயாவது என் கூட துணைக்கு வர்றியா?''

''உ... உண்மையிலேயே விவாகரத்தாயிடுமா?'' என் றாள் மிரட்சியுடன்.



''தெ... தெரியலேம்மா... ஆனா, உடனே கொடுத்துட மாட்டாங்க. ஒரு வருஷம் பிரிஞ்சிருந்தாதான் குடுப்பாங்க. கல்யாணமாகி ஆறுமாசம்தானே ஆகுது? அம்மா.. அம்மா.. நீயாவது என்னை நம்பும்மா.. நான் எந்த தப்பும் பண்ணலேம்மா!''

''.........?!''

''அவரைப் பிரியறதுக்கூட பெரிய வேதனையில்லே... ஆனா, கடைசிவரை நான் குற்றமற்றவள் என்று நிரூபிக்க முடியாமலே தண்டிக்கப்பட்டு விடுவேனோன்னுதாம்மா கஷ்டமாயிருக்கு!''

''.............?!''

''ஏம்மா.. அப்படியாய்ட்டா... என்னை விரட்டிடு வியாம்மா?'' என்றழ.. பார்வதி மகளை அணைத்து தானும் அழுதாள்.

அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நாராய ணனின் கண்களும் கலங்கத்தான் செய்தன!

## 21

நாராயணன் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தார். இருக்காதா பின்னே? அவரிடம் பணம் வாங்கி ஏமாற்றிய பொன்னுசாமி, மூன்று லட்சத்தையும் திருப்பி கொண்டு வந்து தந்து விட்டாரே!

எல்லாம் மனசாட்சிக்கு பயந்துதான்! பொன்னுசாமியின் மருமகன் பெரிய விபத்தில் அடிபட்டு, கோமா வரை போய் மீண்டதும், மனைவி நெஞ்சுவலியில் எமனிடம் போராடி மீண்டதும் அவர் மனமாற்றத்திற்கு காரணமாய் அமைந்தது. மனதறிந்து நாராயணனை ஏமாற்றிய பாவம் தான் தங்கள் குடும்பத்தை அலைகழிக்கிறது என்று பயந்தவர், உடனடியாக பணத்தைப் புரட்டி தந்து விட்டார்.

அதில் இரண்டு லட்சத்தை இந்திரா பெயரில் வங்கி யில் போட்டுவிட்டு, ஒரு லட்சத்தை மகேந்திரனிடம் திருப்பிக் கொடுத்து விட்டார்.

அனு உடைமாற்றி புறப்பட்டதைப் பார்த்த நாராய ணன், மனைவியிடம், ''அனு எதுவும் சாப்பிடலே போலி ருக்கு சாப்பிட்டு போகச் சொல்லு!'' என்றார்.

அந்த வார்த்தை அனுவின் காதிலும் விழுந்தது. தாகத்தில் தவித்தவனுக்கு கிடைத்த ஒரு வாய் அமிர்தம் போல் மகிழ்ச்சியாக இருந்தது.

பார்வதி மகளை நோக்கி விரைந்து வந்தாள்.

''சாப்பிடாம எங்கே கிளம்பிட்டே? இன்னைக்கு லீவுதானே?''

''மாலினின்னு ஒரு தோழி இருக்கா, இன்னைக்கு என்னை அவங்க வீட்டுக்கு விருந்துக்கு கூப்பிட்டு இருக்கா.. அங்கேதான் போகிறேன்.''

''.........?!''



''என்னம்மா... ஆச்சர்யமா பார்க்கறே? இன்னும் நாலஞ்சு நாள்ல என் கேஸ் கோர்ட்டுக்கு வரப்போகுது இந்த நிலைமையிலே விருந்து, மருந்தெல்லாம் அவசிய மான்னு நினைக்கறே... அப்படித்தானே? என் வேதனை என்னோடு போகட்டும். மாலினிக்கு விஷயம் தெரியாது. அவ கர்ப்பமாயிருக்கா. அந்த மகிழ்ச்சியைக் கொண் டாடத்தான் இந்த விருந்து. வற்புறுத்தி கூப்பிட்டிருக்கா. அவ சந்தோஷத்தை ஏன் கெடுக்கணும்? வரட்டுமாம்மா?'' என்றபடி படியிறங்கியவள், திரும்பி அம்மாவைப் பார்த்து ''நன்றிம்மா!'' என்றாள்.

''எதுக்கு?'' என்றாள் வியப்பாய்.

''ரொம்ப நாள் கழிச்சி மறுபடி என்கிட்டே அன்பா பேசறதுக்கு!'' சொல்லிவிட்டு தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள்.

அந்த வார்த்தை பார்வதியை ரொம்பவே தாக்கியது.

* * *

''நான் அவசியம் வரணுமா ரஞ்சன்? மிதுன் உனக்கு தான் நண்பர். அவர் தருகிற விருந்தில் எனக்கென்ன வேலை?'' என்றான் கோபி சங்கடத்துடன்.

''மிதுன் உன்னையும் சேர்த்துதானே அழைத்தான்? இப்போது நீயும் அவனுக்கு நண்பன்தான்! இதோ, இன்னும் பத்து நிமிடத்தில் அவன் வீட்டை அடைந்து விடுவோம். இப்போது போய் சங்கடப்பட்டு கொண்டிருக்

கிறாயே! நானிருக்கும் மனநிலையில் இதுபோன்ற கேளிக்கைகள் அவசியம் கோபி! உன்னைப் போல் அருமையான நண்பன் மிதுன். அவன் பேச்சை மதிப்பது நம் கடமை.

''புரிகிறது. சங்கடப்பட்டேனே ஒழிய மிதுன் அற்புத மான மனிதர் என்பதில் சந்தேகமில்லை. நீ சாலையைப் பார்த்து வண்டியை ஓட்டு.'' என்றபடி நிமிர்ந்து அமர்ந்த வனின் பேண்ட் பாக்கெட்டிலிருந்து நழுவி வெளியே தலைகாட்டியது கவர்.

சட்டென அதை உள்ளே தள்ளி சரிப்படுத்திக் கொண் டான் கோபி.

ரஞ்சனுக்கு அனுப்புவதற்காக காலையில் கிளம்பும் போது பாக்கெட்டில் பத்திரப்படுத்திக் கொண்டவனுக்கு பிறகுதான் உறைத்தது.

ஞாயிறு தபால் அலுவலகத்திற்கும், கூரியர் அலு வலகத்திற்கும் விடுமுறை என்று. அப்படியே ரஞ்சனுடன் கிளம்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

கார் மிதுனின் பங்களாவினுள் நுழைந்து நிற்கவும், மறுபுறம் ஒரு ஆட்டோ வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

காரை விட்டிறங்கிய ரஞ்சன், ஆட்டோவிலிருந்து இறங்கிய அனுவைப் பார்த்து திகைத்தான்.

'இவளெங்கே இங்கே?'



''கோவிந்த்... நீ இங்கேயே இரு.. இதோ வந்துட்டேன்!'' என்றவன் அவளை நோக்கி விரைந்து வந்தான்.

ஆட்டோ ஓட்டுனருக்கு பணத்தைக் கொடுத்து விட்டு நிமிர்ந்தவளுக்கு வியப்பு.

'இவரா? இங்கே எப்படி?'

ஆவலாய் அவனைப் பார்த்தாள்.

'எப்படியிருக்கீங்க?' என்ற வாய்வரை வந்த வார்த்தை களை அப்படியே விழுங்கினாள்.

அதற்கு சரியான பதில் அவனிடமிருந்து வராது என் பதுதான் தெரியுமே!

இளைத்து, சற்று நிறம் மங்கியிருந்த கணவனின் தோற்றம் கவலையைத் தந்தது.

ரஞ்சன் அவளை ஏளனமாய் பார்த்தான்.

அந்த பார்வையின் வீச்சை தாங்கிக் கொள்ள இயலாத வளாக தலைகவிழ்ந்தாள் அனு.

''அம்மணிக்கு இங்கு என்ன வேலை என்று தெரிந்துக் கொள்ளலாமா?''

''..........?!''

''ஓ.. பேச மாட்டீர்களோ? நன்றாக உடையுடுத்தி அலங்காரம் செய்து வந்திருப்பதைப் பார்த்தால் உங்கள் மனதுக்கு பிடித்த முக்கியமான நபரை சந்திக்க வந்திருப் பதுப் போல் தெரிகிறதே?''

''நல்ல விதமாகவே நினைக்கத் தோன்றாதா உங் களுக்கு?'' விம்மல் வெடித்துக் கொண்டு வந்தது.

''வரும்.. நல்ல நடத்தைக் கொண்டவர்களைப் பார்க் கும்போது.''

''என்னை அசிங்கப்படுத்துவது, உங்களை நீங்களே அசிங்கப்படுத்துவது மாதிரி!''

''தெரியாத்தனமாக சகதியை எடுத்து பூசிக் கொண் டதற்குதான் அசிங்கப்படுகிறேனே... ஒரேயடியாய் தலை முழுகி சுத்தப்படுத்திக் கொள்ளத்தானே கோர்ட் படியேறப் போகிறேன்!''

''சட்டமும், சாட்சியமும் விலை கொடுத்து வாங்கப் படலாம். உங்கள் பக்கம் சாயலாம். எனக்கெதிராய் தீர்ப்பும் எழுதலாம். ஆனால், உண்மை ஒருநாள் வெளிச்சத்திற்கு வரும். அதற்கு எந்த சட்டமும், சாட்சியமும் தேவை யில்லை. மண்ணுக்கடியில் எத்தனை நாளைக்குதான் விதை பதுங்கியிருக்கும்? பாறையைக் கூட துளைத்து வெளியில் முகம் காட்டும் சக்தி அதற்கு உண்டு. அப் போது தெரியும் உங்களுக்கு இந்த அனு சகதியா, சந்தனமா என்று!''

''மேலும், மேலும் நடிக்க முயற்சிக்காதே! என் பங் காளி.. அதான் அந்த கோபி, உன் முகத்திரையை கிழிப் பதற்கென்றே ஒரு ஆதாரத்தை அனுப்பப் போகிறான் அதனால், வசனம் பேசி களைப்படையாதே!''

''பேசுங்கள்.. எவ்வளவு வேண்டுமானாலும் பேசுங் கள். ஆனால், அத்தனைக்கும் சேர்த்து வைத்து வருத்தப்



படுவீர்கள்!'' என்றவளின் கன்னத்தில் திரண்டு வழிந்த நீரை சுண்டி எறிந்தவள், அதற்கு மேல் அந்த நிலத்தில் நிற்க, இயலாதவளாக, முடியாதவளாக ஓட்டமும் நடையு மாய் வெளியேறினாள்.

எதேச்சையாய் மாடிப்பக்கம் வந்த மாலினி இக்காட் சியைக் கண்டு திகைப்புற்றாள்.

'என்ன நடக்கிறது அங்கே? அனு ஏன் அழுதபடி ஓடுகிறாள்? அவர் அநேகமாய் மிதுனின் நண்பன் ரஞ்ச னாக இருக்கக் கூடும். அவர் முகத்தில் ஏன் இவ்வளவு கடுமை? அனுவிடம் என்ன பேசினார்?' பல கேள்விகள் வண்டாய் துளைக்க விரைந்து கீழிறங்கினாள்.

முதுகு காட்டி நின்றதால் கோபிக்கு அனுவின் முழு உருவம் தெரியவில்லை.

சற்று ஒதுங்கி நின்றிருந்த கோபிக்கும் வியப்பு. தன்னை நெருங்கி வந்த ரஞ்சனிடம், ''யாரந்த பெண் ரஞ்சன்? எதற்காக அழுதுக் கொண்டே ஓடுகிறாள்?'' என் றான்.

''அ... அது... அதை பிறகு சொல்கிறேன்... வா.. உள்ளே செல்லலாம்!'' என்றபடி வாயிலை நோக்கிச் சென்றான்.

அதற்குள் மிதுனும், மாலினியும் வாசலுக்கு வந்து விட்டனர்.

''வாங்க.. வாங்க.. மாலினி இவர்தான் ரஞ்சன். இவர்...'' என்ற மிதுன் கோபியைப் பார்த்து அர்த்தம் பொதிந்த சிரிப்புடன் நோக்கினான்.

''வணக்கம்!'' என்று ரஞ்சன் கை குவிக்க...

கோபி அளவிட முடியா அதிர்ச்சியோடு நின்றிருந் தான்.

காரணம்.. மாலினி!

''இவ என் மனைவி மாலினி...!''

மாலினியின் கண்களிலும் அதிர்ச்சி.. கோபியைப் பார்த்ததும்.

''இவளெங்கே இங்கே? இவள் இவன் மனைவியா? அப்படியென்றால்?''

''என்ன கோவிந்த்.. ஒரு மாதிரியாயிருக்கே? வா!'' என்று கைப்பற்றினான் ரஞ்சன்.

''கோவிந்தா? இவன் பெயர் கோவிந்தா? இவன் கோபி அல்லவா?'' என்றாள் மாலினி திகைப்புடன்.

''இல்லீங்க... இவர் கோவிந்த்... என் நண்பர் மிதுன்... உனக்குத்தான் தெரியுமே.. எடுத்து சொல்லு!''

கோபி திருதிருவென விழித்தான்.

''ஆமாம் ரஞ்சன்.. எனக்கு நன்றாகவேத் தெரியும். சாரை முதன் முதலாக பார்த்தபோதே எங்கோ பார்த் ததுபோல் சந்தேகம். அடுத்தடுத்து சந்திக்கும் போது தான் விடை தெரிந்தது. சார் கோவிந்த் அல்ல. கோபி என்று!''

''எ... என்னது.. கோபியா?''



ஏற்கனவே அவன் வாழ்க்கையில் சூறாவளியை ஏற் படுத்திய பெயர் ஆயிற்றே?

நம்ப முடியாத வியப்புடன் கோபியை பார்த்தான் ரஞ்சன்.

''இவர்கள் சொல்வது நிஜமா? நீ கோவிந்தா, கோபியா?''

''..........?!''

''சொல்! நீ யார்?'' அவனைப் பிடித்து உலுக்கினான்.

அந்த உலுக்கலைத் தாங்காமல், பாக்கெட்டில் துருத் திக் கொண்டிருந்த முகவரி எழுதப்பட்டிருந்த கவர் கீழே விழுந்தது.

அதில் பளிச்சிட்ட, பழக்கமான கையெழுத்தோடு ரஞ்ச னின் முகவரி.

திகைப்புடன் எடுத்துப் பிரித்த ரஞ்சனின் விழிகள் அதிர்ச்சியில் நிலைக்குத்தின.

தலை வெட்டுப்பட்டு சாமர்த்தியமாய் தன்னை மறைத் துக் கொண்டிருந்த ஆணின் உருவமும், அவன் தோள் பகுதியில் முகம் வைத்திருந்த பெண்ணின் உருவமு மாக.. புகைப்படம்! கூடவே அனு எழுதிய கடிதமும்!

மூச்சு விட மறந்தான் ரஞ்சன்!

# 22

கோபியை தவிர, அங்கிருந்த மற்ற மூவரும் அதிர்ந்து போயிருந்தனர்.

ஏனென்றால்... அந்த புகைப்படத்தில் இருந்த பெண் வேறு யாருமல்ல... மாலினி தான்!

''எ... என்ன இது? என்ன நடக்கிறது இங்கே? இந்த புகைப்படத்தில் இருப்பது...''

மிதுன் ரஞ்சனின் தோளில் கை வைத்து மெல்ல அழுத்தினான்.

மாலினி வேதனையும், கோபமுமாய் கோபியை வெறித்தாள்.

''ரஞ்சன்... நான் சொல்கிறேன் உனக்கு. இந்த புகைப்படத்தில் இருப்பது என் மனைவி மாலினிதான். பக்கத்தில் தலை வெட்டப்பட்டிருப்பது... இதோ, இந்த கோபி! திருமணத்திற்கு முன்பு இருவரும் நேசித்ததும், பிரிந்ததும் எனக்குத் தெரியும். என் மனைவி என்னிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். அதை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இதைப்பற்றி மேற்கொண்டு பேசுவது மாலினிக்கு சங்கடத்தைத் தரலாம். ஆகவே



அதுபற்றி பேசவேண்டாம். ஆனால், இந்த கடிதத்தையும், புகைப்படத்தையும் உனக்கேன் அனுப்ப முயலவேண்டும்? எனக்குப் புரியவில்லை!''

''எனக்கு இன்னமும் குழப்பமாக இருக்கிறது மிதுன். இதுப்போல் எனக்கு ஏற்கனவே ஒன்பது கடிதங்கள் வந்திருக்கின்றன. அவை... என் மனைவி, கோபி என்பவனுக்கு எழுதியதுப் போல் இருக்கிறதே...!''

மாலினி நிமிர்ந்தாள்.

''உங்கள் மனைவி பெயர் என்ன?''

''அனு!''

''இப்போது வந்துவிட்டுப் போனாளே.. அந்த அனுவா?''

''ஆமாம்!''

''கடவுளே! என் தோழி அனுவின் கணவரா நீங்கள்?'' என்றாள் ஆச்சர்யமாய் மாலினி.

''ம்!''

''என் பெயரும் அனுதான்! முழுப் பெயர் அனுமாலினி. எல்லோரும் என்னை மாலினி என்றுதான் அழைப்பார்கள். இதோ, இவனுக்கு மட்டும் நான் அனு! அதனால் தான் இவனுக்கு நான் எழுதிய கடிதங்களில் கூட அனு என்றுதான் அனுப்பியிருந்தேன்! நீங்கள் குழம்புவதைப் பார்த்தால் எனக்கு பயமாகயிருக்கிறது. உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் பிரச்சனை.. விவாகரத்துவரை

விஷயம் முற்றி விட்டது என்று என் கணவர் சொன்ன தெல்லாம் நிஜமா?''

''ஆமாம்!''

''என்ன காரணத்தினால் இந்த முடிவுக்கு சென்றீர்கள் என்பதை நான் தெரிந்துக் கொள்ளலாமா?''

''அ... அது...'' தயங்கினான்.

''ப்ளீஸ்.. தயக்கம் வேண்டாம். குறுகிய காலமே பழகி யிருந்தாலும் உங்கள் மனைவி அனுவைப் பற்றி நான் நன்கு பரிந்து வைத்திருக்கிறேன். மனதளவில் அவ ளொரு குழந்தை.''

ரஞ்சன் சற்று நேர யோசனைக்குப் பின் மெல்ல தலையசைத்தான்.

''எனக்கே சில விஷயங்கள் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. சொல்கிறேன்....'' என்றவன். அவளை பெண பார்க்கப் போனதிலிருந்து. சற்று முன் நெருப்பு வார்த்தைகளால் சுட்டுப் பொசுக்கி அனுப்பியது வரை சொன்னான்.

கோபி திருதிருவென விழித்தான்.

''கடவுளே.. என்ன காரியம் பண்ணிட்டீங்க? தீர விசா ரிக்காமல் அநியாயமாய் அனுவிற்கு தீங்கிழைத்து விட் டீர்களே? அந்த கடிதத்தை கோபி என்கிற இந்த துரோ கிக்கு அனுப்பியது நான்தான்! அனு பணிபுரிந்த அதே அலுவலகத்தில் தான் அவளுக்கு முன்பே நானும் பணிபுரிந்தேன். எனக்கொரு கெட்டப் பழக்கம் கடிதத்தில்



ஊர் பெயர், தேதி எதையும் குறிப்பிட மாட்டேன். சே.. என்னால்தானே எல்லாம்?'' என்றவள் தன்னையே நொந்தவளாய் கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதாள்.

அந்த கண்ணீரில் அவளின் கடந்த கால காதல் வேதனைகள் கரைந்தோடின.

* * *

அனுமாலினியும், கோபியும் இணைபிரியா காதலர் களாய் சிறகடித்துப் பறந்த நாட்கள் அவை. ஒருவரை யொருவர் உயிருக்குயிராய் நேசித்தனர்.

மாலினியை வாரத்தில் மூன்று நாட்கள் சந்தித்தாக வேண்டும். தினமும் போனில் பேசியாக வேண்டும். அதை விட.. என்னதான் நேரிலும், போனிலும் பேசிக் கொண்டாலும், உள்ளத்து உணர்வுகளைக் கொட்டி எழுதும் கடிதங்களுக்கு இணையாகுமா? அதனால் இருவரும் அடிக்கடி கடிதங்களை பரிமாறிக்கொள்வ துண்டு. அனுமாலினிக்கு பேனாவில் எழுத சோம்பேறித் தனம். அதனால் கம்ப்யூட்டரில் அடித்துதான் அனுப்பு வாள்.

இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தனர். அனுமாலினியைப் பொறுத்தவரை இந்த திருமணத்தை ஏற்கவோ, எதிர்க்கவோ யாரு மில்லை. கோபியின் தாயாருக்கும் அனுமாலினியைப் பிடித்திருந்ததால் இவர்கள் இணைவதில் எந்த எதிர்ப்பும் இல்லை.

அப்படிப்பட்ட காதல் முறிந்தது எதனால்?

கோபி மாலினியை அதிகமாய் நேசித்ததென்னவோ நிஜம். ஆனால், அவனுக்கு ஒரு கெட்டப்பழக்கமிருந்தது. பல வருடங்களாகவே நண்பர்களுடன் விலைமாதுவிடம் போவதுண்டு. அந்த பழக்கம், மாலினியை காதலித்தப் பிறகும் தொடர்ந்தது. மாலினி தங்கியிருந்த விடுதியில், படிப்பவர்கள், பணிபுரிபவர்கள் மட்டுமின்றி, அலுவலகத் தில் பணிபுரிவதாக சொல்லி 'கால் கேர்ள்' எனப்படும் பெண்கள் சிலரும் தங்கியிருந்தனர். புதிராய் அந்த விடுதிக்கு வந்து தங்கியிருந்த பானு என்கிற பெண்தான் மாலினியை தேடி வந்த கோபியை பார்த்துவிட்டு விஷயத்தை போட்டு உடைத்தாள். ஜீரணிக்க முடியாத விஷயமாயிற்றே! கோபியிடம் கேட்டாள். அதற்கு அவன் அலட்டிக் கொள்ளாமல் சொன்ன பதில், அவளை தூக்கி வாரிப் போட்டது.

''ஆமாம்... அதனாலென்ன?'' என்றான் கோபி.

''இது தப்பு என்று உங்களுக்கு உரைக்கவில்லையா? அதுவும் என்னுடன் பழகிய பின்பும்... சே!''

''இதிலென்ன தப்பு? காதலும், குடும்ப வாழ்க்கையும் வேறு. அதுபோன்ற சந்தோஷங்கள் வேறு...'' என்று நியாயம் கற்பித்தான்.

வாக்கு வாதம் தடித்து... மாலினி அந்த காதலை தவிர்க்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானாள்.

மிதுன் தன் காதல் மனைவியின் கன்னத்து நீரை துடைத்து அமைதிப்படுத்தினான்.



''அழாதே மாலும்மா... நீ ஏன் அழுகிறாய்? அநியாயம் செய்த கோபியும், அவசரப்பட்டு அனுவை இழக்க முற்பட்ட ரஞ்சனும்தான் அழணும்!''

ரஞ்சனின் நாடி நரம்புகள் முறுக்கேறின.

கோபியின் சட்டையை கொத்தாகப் பற்றிக் கொண் டான்.

''ராஸ்கல். உன்னை எவ்வளவு நம்பினேன்? எந்த சம்பந்தமும் இல்லாமல் எதற்காக என் வாழ்க்கையை பாழடித்தாய்? அனுவை கேவலமாய் பேசி, விரட்டி.. சே.. ஒரு மனிதனாகக் கூட நான் அவளிடம் நடந்துக் கொள்ள வில்லையே! எதற்காக? ஏன் என் வாழ்க்கையில் விளை யாடினாய்?'' ஆத்திரத்துடன் பளார் பளாரென அவன் கன்னத்தில் அறைந்தான்.

''அய்யோ.. சார்... அடிக்காதீங்க... அடிக்காதீங்க... சொல்லிடறேன்... அடிக்காதீங்க!'' உதடு கிழிந்து ரத்தம் பொங்க... அலறினான் கோபி.

''சொல்லுடா நாயே!''

''தப்பு நடந்துப்போச்சு சார்! உங்க மனைவி யாருன்னே எனக்குத் தெரியாது...!''

''...............?!!''

''நான் அனுவை ரொம்ப நேசிச்சேன். நான் செய்த ஒரு தப்பை காரணம் காட்டி என்னை தூக்கி எறிஞ்சா. நான் செய்தது தப்புதான், இனி செய்ய மாட்டேன்னு கெஞ்சி னேன். ஏத்துக்கலே. தற்கொலைக்கு முயன்று பிழைத்

தேன். அப்பவும் அவ மனசு மாறலே. அதனால அவளை பழிவாங்கணும்னு நினைச்சேன். அவ எனக்கு எழுதிய கடிதங்களை பரிசுப்பொருளா தரணும்னு நினைச்சேன். உங்க மனைவியோட பெயரின் ஒற்றுமை, தவிர ஒரே நாளில், ஒரே முகூர்த்தத்தில் திருமணம், ஜீவாசாலை, ஜீவரத்தினம் சாலை இரண்டிலும் இருந்த திருமண மண்டபங்களின் குழப்பம், எனக்கு கிடைத்த தெளிவற்ற முகவரி, அதனால்தான் பரிசுப் பொருள் மாறி உங்களுக்கு வந்து விட்டது...'' என்று மேற்கொண்டு எல்லாவற்றை யும் கூறிமுடித்தான், கோபி.

''இவ்வளவு நாளும் என் கூடவே இருந்து குழி பறித்திருக்கிறாயே! நீ செய்த தப்புக்கு உன்னை எந்தப் பெண்தான் ஏற்றுக் கொள்வாள்? அதற்காக பழிவாங்க கிளம்பிடுவாயோ? உன்னை சும்மா விடக்கூடாது மிதுன் போலீசுக்கு போன் பண்ணு!''

''சார்.. நான் தெரியாம செய்துட்டேன். மன்னிச்சி விட்ருங்க....''

''மன்னிப்பா? உன்னையா? அது இந்த ஜென்மத்தில் கிடையாது!''

அடுத்த அரைமணி நேரத்தில் போலீஸிடம் ஒப் படைக்கப்பட்டான் கோபி.

''என்னை மன்னிச்சிடுங்க ரஞ்சன். தெரிஞ்சோ, தெரியாமலோ உங்கள் மனைவியை பிரிய நான் காரண மாகிவிட்டேன்!'' முகம் வேதனையில் கூம்ப, கை கூப்பினாள் மாலினி.



''சேச்சே.. உங்க மேலே எந்த தப்பும் இல்லே! எல்லாம் என்னுடைய குறுகிய எண்ணத்தினால் வந்தது. அவசர புத்தியினால் வந்தது. ஆனால், இப்போது மிதுனிடம் இருந்து கற்றுக் கொண்டது ஏராளம். அதை விலாவரி யாகப் பேசுவது இந்த சூழ்நிலைக்கு அநாகரீகம்! எனக் குள்ளிருந்த சிறுத்த எண்ணத்தை விரட்டியடித்து விட் டான் மிதுன். உண்மையிலேயே என் மனம் இப்போது தெளிவாகி விட்டது. அதற்கு நான்தான் நன்றி சொல்லி யாக வேண்டும். நான் வருகிறேன்!''

''எங்கே புறப்படுகிறார் உங்கள் நண்பர்? விருந்து காத்துக் கொண்டிருக்கிறதே...!'' என்றாள் அவசரமாய்.

''போகட்டும் விடு! அவன் செய்த பிழைக்கு ஒரு பருக்கைக் கூடப் போடக் கூடாது. பிழையை திருத்திக் கொண்டு வரட்டும். அதுவரை காத்திருப்போம்!'' கோபமாய் சொன்னாலும் இதழோரம் கேலிப்புன்னகை நெளிந்தது.

ரஞ்சன் செல்லமாய் மிதுனின் வயிற்றில் குத்தினான்.

''அரைமணி நேரத்தில் என் அனுவுடன் வருகிறேன்... வரட்டுமா?'' என்றான்.

* * *

கதவைத் திறந்த பார்வதிக்கு அதிர்ச்சியில் முகம் வெளிறியது.

காரணம்.. ரஞ்சன்!

''வா.. வாங்க!''

அதற்குள் நாராயணனும் வந்துவிட... அவன் வரு கையை அவரும் எதிர்பார்க்கவில்லை என்று முகம் சொன்னது.

''வாங்க.. உள்ளே வாங்க!''

''வாங்க மாப்பிள்ளைன்னு வாய் நிறைய கூப்பிடு வீங்கன்னு எதிர்பார்த்தேன்!'' என்றான் புன்னகையுடன்.

இருவருக்கும் புரிய... பரவசத்துடன் ஒருவரையொரு வர் பார்த்துக் கொண்டனர்.

''வாங்க மாப்பிள்ளை.. வாங்க!''

''முதல்ல என்னை மன்னிக்கணும். நீங்க எல்லோரும்! நான்தான் தீர விசாரிக்காம அனு மேலே சந்தேகப்பட்டு.. அதை விளக்கமா அப்புறம் சொல்றேன். அவ மேலே எந்த தப்பும் இல்லே.''

''இப்பதான் உயிரே வந்திருக்கு மாப்பிள்ளை. சந் தோஷமாயிருக்கு. என் பொண்ணு வாழ்க்கையிலே என்னென்னவோ நடந்துப்போச்சேன்னு வருத்தம் ஒரு பக்கம். அவளை நாங்களும் சந்தேகப்பட்டு யாரும் சரியா பேசாம கிட்டத்தட்ட ஒதுக்கி வச்சிருந்தோம். பாவம் என் குழந்தை எவ்வளவு வேதனைப்பட்டாளோ?''

''எல்லா வேதனைக்கும் ஒரு முற்றுப்புள்ளி வச்சாச். மாமா. அனு எங்கே?''

''மொட்டை மாடியிலே தான் இருக்கிறா. இருங்க கூப்பிடறேன்.''



''பரவாயில்லே... நானே போய் பார்த்துக்கறேன்!'' என்றவன் படியேறினான்.

வெயில் சுள்ளென காய்ந்துக் கொண்டிருந்தது.

கொடியில் துணிகள் உலர்ந்துக் கொண்டிருந்தன.

தண்ணீர்த் தொட்டியின் கீழே சிறிய நிழலில் சாய்ந்து எங்கோ வெறித்தபடி அமர்ந்திருந்தாள் அனு.

அவள் கன்னங்கள் ஈரமாய் இருந்தது. அவள் உள்ளத்து வேதனைகளை கன்னத்து ஈரம் உணர்த்த.. ரஞ்சன் துடித்துப் போனான்.

'என்னால்தானே இவ்வளவு வேதனையும்?'

ரஞ்சன் மெல்ல நடந்து அருகில் சென்றான்.

காலடியோசை கேட்டு நிமிர்ந்தவளின் கண்கள் அதிர்ச்சியில் விரிந்தது. எழுந்தாள் அவசரமாய்.

அவள் கோலம்... ரஞ்சனை வதைக்க.. அவன் கண் களும் கலங்கின.

வியப்புடன் பார்த்தாள் அனு!

அதற்கு மேல் சஸ்பென்ஸை நீட்டிக்க விரும்பாமல் அவளை இழுத்து முகம் முழுக்க முத்தமழைப் பொழிந் தான்.

''என்னை மன்னிச்சிடு கண்ணம்மா!'' என்று காதோரம் கிசுகிசுத்தான்.

எதிர்பாராமல் கிடைத்த வெகுமதியில் சில கணங்கள் இதய ஓட்டம் மறந்தாள் அனு.

காதல் இதயமும் அன்பும், இரும்பும், காந்தமும் போல, ஓடிச் சென்று ஒட்டிக் கொள்ளும்.

இனி இவர்களை காற்றுக் கூட பிரிக்க முடியாது.

ஏனிந்த திடீர் மாற்றம்? என்று கேட்க அனு துடித்தாள்.

ஆனால், ரஞ்சன் விட்டால்தானே?

அவள் வாய்க்கு தன் இதழால் பூட்டுப் போட்டிருந்தான்.

# உன் நினைவில்

ஆர். மணிமாலா

